# ஜாமக்காரன்

WATCHMAN

காவல்காரன்



*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பானவர்களே!**

**உயிரோடுயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாசகர்கள் யாவருக்கும் என் வாழ்த்துக்கள்.**

## என் 50 வருட ஊழியம்

**கடந்த ஜீன் மாதத்துடன் என் 50 வருடகால ஊழியம் நிறைவு பெற்று 51ம் ஆண்டுக்குள் கால் எடுத்து வைத்துள்ளேன். விளம்பரமோ, விழாக்களோ, ஆர்ப்பாட்டங்களோ இல்லாமல் என் தனி ஜெபத்தில் தேவனைத்துதித்தேன். தகுதியில்லாத என்னை இந்த வித்தியாசமான ஊழியத்துக்கு தெரிந்தெடுத்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையோடு, 50 வருடங்கள் நிறைவுபெற்று அதே கிருபையோடு 51ம் ஊழிய வருடத்துக்குள் தொடர்ந்து பயணமாகிக்கொண்டிருக்கிறேன். என்னை பெலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை (DR.புஷ்பராஜ் ஆகிய என்னை) உண்மையுள்ளவன்னென்று (மற்ற ஊழியர்கள் எவ்வளவு ஏசினாலும், எவ்வளவு கொலைமிரட்டல்கள், எதிர்ப்புகள், பயமுறுத்தல்கள் வந்தாலும் தொலை பேசியிலும், கடிதத்திலும் கெட்ட வார்த்தைகளைபேசி அவமானப்படுத்தினாலும், என்மேல் வெறுப்புற்று காணிக்கை அனுப்புவதை நிறுத்தினாலும் இவன் தாங்குவான், சகிப்பான் என்று தகுதியில்லாத என்னைப்போய் கர்த்தர் நம்பி) இந்த ஊழியத்திற்கு என்னை ஏற்படுத்தினபடியால் அவரை இயேசுகிறிஸ்துவை துதிக்கிறேன்.1தீமோ 1:12.**

## சிறுவர் மற்றும் வாலிபர் ஊழியம்:

**1964ம் வருடம் நான் இரட்சிக்கப்பட்ட வருடம் ஆகும். இரட்சிக்கப்பட்டவுடன் பங்காரபேட்டை வேதாகமகல்லூரியில் குறைந்தகால வேதகாம படிப்பு படித்தேன். Rev.Dr. தியோடர் வில்லியம்ஸ், Rev.Raice ஆகியவர்கள் எனக்கு ஆசிரியர்களாக இருந்தனர். மறுபடியும் திரும்பவந்து டேனிஷ்பேட்டை பெத்தேல் பெல்லோஷிப்பில் டாக்டராக பணியாற்றினேன். 1953ம் வருடம் ஆசியாவிலேயே முதல் VBS சகோ.பி.சாமுவேல் அவர்கள் தொடங்கினார்கள். 1964ம்**

# ஆகஸ்ட் 2014

வருடம் என்னை VBS ஊழியத்தின் பொருப்பாளராக (டைரக்டராக) சகோ. பி. சாமுவேல் அவர்கள் எனக்கு விசேஷ பயிற்சி அளித்து தமிழ்நாடெங்கும் சிறுபிள்ளைகள் மத்தியில் வேறு சிலருடன் இணைந்து நானும், Rev.Dr.தியோடர்வில்லயம்ஸ், சகோ. விக்டர் மனோகரம் (Youth for Christ) ஆகியவர்களுடன் இணைந்து கல்லூரி மாணவர்கள் மத்தியிலும், சபைகளிலும் கன்வென்ஷன் பிரசங்கியராக உபயோகப்படுத்தப்பட்டேன்.

## <u>வானொலி ஊழியம்:</u>

முதல்முறையாக FEBA வானொலியில் பிரசங்கம் செய்ய சகோ. எமில்ஜெபசிங் (விஷ்வவாணி, FMPB பொதுசெயலர்) அவர்கள் <u>நற்செய்தி</u> என்ற பெயரில் வானொலி நிகழ்ச்சிகள் நடத்திக்கொண்டிருந்த Rev.ஆப்பில்பீB என்பவரிடம் என்னை அறிமுகப்படுத்தி வைத்தார். அப்போது Rev.Applebe அவர்கள் திண்டுக்கல் ரயில்வே கேட் அருகில் ரிக்கார்டிங் ஸ்டுடியோ அமைத்து நிகழ்ச்சிகள் தயாரித்து FEBAக்கு அனுப்பிக்கொண்டிருந்தார். சகோ. எமில் என்னை அறிமுகப்படுத்திய அன்றே என்னுடைய 11 பிரசங்கங்கள் அங்கு பதிவு செய்யப்பட்டன. அந்த நாட்களில் சகோ. எமில் எந்த ஊழியத்திலும் இல்லை. சாயர்புரம் போப்ஸ் கல்லூரியில் லெக்சரராக பணியாற்றி வாலிபர்கள் மத்தியில் அருமையான ஊழியம் செய்துகொண்டிருந்தார். என் பிரசங்கம் FEBA வானொலியில் <u>நற்செய்தி</u> நிகழ்ச்சியில் வெளிவந்தவுடன் நாகர்கோவில் Rev. தேவதாசன் வருகையின் தூதன் பத்திரிக்கையின் தலைமை ஆசிரியரின் மூத்தமகனும், வருகையின் தூதன் பத்திரிக்கையின் உதவி ஆசிரியரும், ஸ்காட் பள்ளியின் உதவி தலைமை ஆசிரியருமான சகோ. D.T.ராஜா அவர்கள் FEBA வானொலியில் வாலிபர்விருந்து என்ற பெயரில் நடத்திய தொடர் வானொலி நிகழ்ச்சியில் என்னை பிரசங்கம் செய்ய வைத்தார். வாலிபர் விருந்து நிகழ்ச்சிக்காக அன்று நான் பாடிய பாடல்கள் மிகவும் பிரசித்தமாக அமைந்தது. ஏராளமான பாடல்களும், பிரசங்கங்களும் வாலிபர் விருந்துக்காக FEBA (பெங்களூர்) ஸ்டுடியோவில் பதிவுசெய்து ஒலிபரப்பப்பட்டதால் செய்திகள் உலகெங்கும் கேட்கப்பட்டது.

“ அதன்பின் தான் இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் வெளிவந்துகொண்டிருந்த Back to the Bible சத்தியவசன நிகழ்ச்சிக்காக வேதபாடம் நடத்த இலங்கை சத்தியவசன நிகழ்ச்சி பொருப்பாளர்கள் Mr&Mrs.மெடோஸ் அவர்களால் இலங்கைக்கு அழைக்கப்பட்டேன். இலங்கை சத்தியவசனத்தில் வெளிவந்த வானொலி பிரசங்கம் மூலமாகத்தான் உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்களிடையே நான் பிரபலமாக பேசப்பட்டேன்.

“ அதே பெங்களூர் FEBA வானொலியில் இயேசு அழைக்கிறார் நிகழ்ச்சிகளை சகோ. DGS.தினகரன் அவர்களுக்காக நான் ஏற்பாடு செய்து ஆரம்பித்து வைத்தேன். அதில் ஆரம்பத்திலும், கடைசியிலும் சகோ. தினகரனை அறிமுகப்படுத்தவும், மற்ற அறிவிப்புகளையும் நான் பேசி முடிப்பேன்.

“ அவருக்குபிறகு மகிழ்ச்சி ஆசிரியர் பாஸ்டர். ஜீவானந்தம் அவர்களுக்காக மகிழ்ச்சி என்ற பெயரில் வானொலி நிழச்சிகளை ஆரம்பித்து நானே சகோதரனை அறிமுகப்படுத்தி ஆரம்பித்திலும், கடைசியிலும் அறிவிப்புகளை அறிவித்து ஜெபம் செய்து முடிப்பேன்.

“ முதல்முழுஇரவு ஜெபத்தை தமிழ்நாட்டிலேயே நானும், சகோ. DGS.தினகரனும் அவர்களும், பாஸ்டர். ஜீவானந்தம் அவர்களும், பாகவதர். வேதநாயக சாஸ்திரியார் அவர்களும் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன் அருகில் வி. பி ஹாலில் மாதம் ஒருமுறை தொடர்ந்து நடத்தினோம். அதன்பிறகு தமிழ்நாடு முழுவதும் நாங்கள் நால்வரும் தனித்தனியாக ஒவ்வொரு பெரிய ஊர்களை மையமாக்கி முழுஇரவு ஜெபத்தை வெற்றிகரமாக தொடர்ந்து நடத்தினோம்.

“ வேதநாயக சாஸ்திரியார் அவர்களை இலங்கை சத்தியவசன நிகழ்ச்சியில் பேச ஏற்பாடு செய்தேன். அப்படியே சகோ. வேதநாயக சாஸ்திரியாரின் பாடல்களை முதன்முதல் கேசட்டில் பதிவு

செய்ய பணஉதவிகளுக்கு ஏற்பாடு செய்து உதவ கர்த்தர் கிருபையளித்தார். கர்த்தருக்கே மகிமை உண்டவாதாக.

## கன்வென்ஷன் ஊழியம்:

**கன்வென்ஷன்** பிரசங்கியாக பிரசங்கிக்க இந்தியாவில்உள்ள அனைத்து மாநிலத்திலும், உலகமெங்கும் உள்ள 162 தேசங்களிலும் கன்வென்ஷன் பிரசங்கியாக **கர்த்தரின் கிருபையாலும்** ஆவியானவரின் ஏவுதலின்படியும் நான் பயன்படுத்தப்பட்டு ஏராளமானவர்களை மனந்திரும்புதலுக்கு நேராகவும், சபைகளை வசனத்துக்கு நேராகவும் திருப்ப **பரிசுத்த ஆவியானவர்** தன் கருவியாக என்னை பயன்படுத்தினார். " **இந்தியாவில்** நான் கன்வென்ஷனில் பேச அழைக்கப்பட்ட **முதல் ஊர், முதல் கன்வென்ஷன்** கன்னியாகுமரி மாவட்டம் **காரியாவிளை** CSI **சபையாகும்.**

## பத்திரிக்கை ஊழியம்:

" இந்தியாவிலும், உலக நாடுகளிலும் ஆயிரக்கணக்கில் என்னோடு கடித தொடர்புகொண்டு வேத வசனம் சம்பந்தமாகவும் குடும்ப பிரச்சனைக்கான ஆலோசனை சம்பந்தமாகவும் ஏராளமானவர்கள் **கேள்விகள்கேட்க** ஆரம்பித்தனர். இவர்களுக்காகவே நான் **பத்திரிக்கை ஊழியத்தை 1969**ம் வருடம் தொடங்கினேன். **ஜாமக்காரன்** என்ற பெயரில் **தமிழ், மலையாளம், ஆங்கிலம்** ஆகிய மூன்று மொழிகளில் அச்சடித்து வெளியிட்டேன். தற்போது நேரம் இல்லாததால் **தமிழ்** மற்றும் **மலையாளம்** பாஷைகளில் மட்டுமே ஜாமக்காரன் வெளியிடப்படுகிறது. அதன்பின்தான் பிஷப்மார்களும், ஆயர்களும், பெந்தேகோஸ்தே சபைகளும், பாஸ்டர்களும், சகோ. DGS.தினகரன் போன்ற நட்சத்திர ஊழியர்கள் பலருடைய வெறுப்புக்குள்ளானேன். குறிப்பிட்டவர்களின் **ஊழல்கள், பாவங்கள், பிழையான உபதேசங்கள்** இவைகளையெல்லாம் சுட்டிக்காட்டி ஜாமக்காரன் வாசகர்களை **எச்சரித்து** அறிவித்தேன். என் எழுத்தே அனைத்து ஊழியர்களும், பிஷப்மார்களும் என்னை வெறுக்க காரணமாயிருந்தது. என்றாலும் எல்லாரும் என்னை வெறுக்கவில்லை. கர்த்தர் ஒரு சிலரை என்னை புரிந்துக்கொள்ளச் செய்தார்.

## மிஷனரி ஊழியம்:

" இதனிடையே 1967ம் வருடம்**செப்டம்பர்** மாதம் 9ம் தேதி FMPB மிஷனரி ஸ்தாபனத்தின் முதல் மிஷனரியாக **நானும்**, சகோ.ஹாரீஸ் ஹில்டன் அவர்களும் **பெரியமலை** என்று அழைக்கப்படும் ஆதிவாசிகள் வாழும் மலைக்கு சுவிசேஷம் அறிவிக்கும் முதல் மிஷனரிகளாக புறப்பட்டு சென்றோம்.

## FMPBயிலிருந்து ஏன் விலகினேன்:

**1967**ம் வருடம் **செப்டம்பர்** மாதம் பெரியமலையில் மிஷனரியாக கால்வைத்ததும் **மதுரை கீழ்வாசல்** CSI ஆலயத்தின் கன்வென்ஷனில் பேச கடிதஅழைப்பு என் வீட்டுக்கு வந்தது. என் தகப்பனர் அதை பெரியமலைக்கு Redirect செய்தார். உடனே FMPB பொதுசெயலர் சகோ.**எமில்** அவர்களுக்கு கன்வென்ஷனில் பேச அழைத்த அக்கடிதத்தை அனுப்பி உத்தரவுகேட்டேன். அவரிடமிருந்து பதில் வரவில்லை. சகோ.எமில் அதை விரும்பவில்லை. ஆகவே நானே மலையைவிட்டு இறங்கி **மதுரை** சென்று கன்வென்ஷனில் பிரசங்கம் செய்துவிட்டு மலைக்கு திரும்பினேன். சிலமாதம் கழித்து மறுபடியும் **மதுரை** St.George Churchல் பிரசங்கிக்க அழைக்கப்பட்டேன். அப்போதுதான் சகோ.**எமில்** என்னோடு தனிமையில் ஒருமணி நேரம் பேசினார். நீங்கள் **மிஷனரி** ஊழியத்துக்கு அழைக்கப்பட்டிருந்தால் **மிஷனரி ஊழியத்தைமட்டும்** செய்யவேண்டும். கன்வென்ஷனில் பேசும் தாலந்து உங்களுக்கு உண்டு. ஆனால் இரண்டையும் இணைத்துசெய்தால் உங்களோடுகூட மிஷனரியாக இணைந்து ஊழியம் செய்யும் சகோ.**ஹாரீஸ்ஹில்டன்** என்ன நினைப்பார்!. மலையைவிட்டு இறங்கி தன்மனைவியை பார்க்கவும் சொந்த ஊரில் ஊழியம்செய்யவும் அவருக்கும் ஆசைவருமே!. ஆகவே உங்கள் அழைப்பை சரியாக உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

என்ற நல்ல ஒரு ஆலோசனையை எனக்களித்தார். மதுரை St.George Churchல் கன்வென்ஷனில் பிரசங்கம் செய்துவிட்டு மறுபடியும் பெரியமலை சென்றேன். அதன்பின் கன்வென்ஷனில் பிரசங்கிக்க எனக்கு வந்த எந்த அழைப்பையும் நான் ஏற்கவில்லை. சகோ.எமில் எனக்கு கொடுத்த ஆலோசனை மிகச்சரியானது. ஆகவே எனக்கு சகோ.எமில் மேல் கோபம் வரவில்லை. அதன்பின் என் முழு கவனமும் மிஷனரி பணியில் செலுத்தி மிஷனரி ஊழியத்தில் தீவிரமாக இறங்கினேன்.

அதன்பிறகு பல மாதங்கள் நாங்கள் யாரும் மலையைவிட்டு இறங்காமல் தொடர்ந்து ஊழியம் செய்தோம். அதன்பிறகு நடந்த விஷயங்களை ஏற்கனவே பல மாதங்களுக்கு முன் ஜாமக்காரனில் எழுதிவிட்டேன். அதில் என் தகப்பனர் அன்று எனக்கு எழுதிய கடிதத்தை அப்படியே ஸ்கேன் செய்து ஜாமக்காரனில் வெளியிட்டதை வாசித்திருப்பீர்கள். அவைகளை மறுபடியும் இங்கு குறிப்பிடுவது தேவையில்லை என்று நினைக்கிறேன்.

FMPB தலைமையிலிருந்து சில மாதங்கள் தொடர்ந்து எங்களுக்கு பணம் வராததாலும் மலையில் எங்கள் மிஷனரி வீட்டில் சேமித்து வைத்த அரிசி தீர்ந்துபோனதாலும் 3 நாட்கள் நாங்கள் சாப்பிடாமல் பட்டினி கிடக்க நேர்ந்தது. அதன் முழுவிவரத்தையும் ஏற்கனவே எழுதிவிட்டேன். அதன்பிறகு நானும்-ஹாரீஸ் ஹில்டன் அவர்களும் FMPBஎங்களுக்கு பணம் அனுப்பாததின் காரணத்தை அறிய மிஷனரி பணிதளத்திலிருந்து மலையைவிட்டு இறங்கி FMPB அலுவலகத்துக்கு திரும்ப மலையில் காட்டு வழியே நடந்துவந்துக்கொண்டிருந்தோம். FMPB ஜெபவீரர்கள் விசுவாசிகள் FMPB ஊழியத்துக்கு தொடர்ந்து காணிக்கை அனுப்பாததால் மிஷனரிகள் பட்டினி கிடக்க நேர்ந்தது. அதனால் FMPB பொருப்பாளர்கள் தற்காலிகமாக மிஷனரி பணி நிறுத்தி வைப்போம் என்று தீாமானித்தனர். ஒரு மிஷனரிக்கு ஒரு வருடத்துக்குரிய காணிக்கை பணம் சேர்ந்தபின் மிஷனரி ஊழியத்தை தொடருவோம் என்று பொருப்பாளர்கள் தீர்மானம் எடுத்ததால் எங்களை பெரிய மலையிலிருந்து அழைத்துவர டேனிஷ்பேட்டையிலிருந்து இருவர் மலைமேல் ஏறி வந்தனர். நடுமலையில் நாங்கள் அவர்களை சந்தித்து அனைவரும் டேனிஷ்பேட்டை திரும்பினோம்.

## அன்று என் வீட்டின் நிலை:

நான் மிஷனரி பணிதளத்துக்கு போகும்போது ரயில்வேயில் பணிபுரிந்துக்கொண்டிருந்த என் தகப்பனர் பணி ஓய்வு பெற்றார். எனக்கு 6 மூத்த சகோதரிகள் இருந்தார்கள். நான்தான் கடைசியாக பிறந்த ஆண் பிள்ளை. நான்கு சகோதரிகளுக்கு என் தகப்பனர் முன்நின்று திருமணம் செய்து வைத்தார். மீதி உள்ள இரண்டு மூத்த சகோதரிகளின் திருமணத்தை நடத்திவைக்கும் பொறுப்பு என்மேல் விழுந்தது. என் தகப்பனர் பென்ஷன் வேண்டாம் என்று எழுதி கொடுத்ததால் ரொக்கமாக கிடைத்த பணத்தில் ஏற்கனவே திருமணமான பெண் பிள்ளைகளுக்கு செய்யவேண்டிய செலவுகளை செய்து கையில் மீதி பணம் ஏதும் இல்லாமல்போனது. குடும்பத்தை நடத்தும் முழு பொறுப்பும் என்மேல் விழுந்தது.

நான் சம்பாதிக்கும் பணத்தில்தான் வீட்டு வாடகை முதல் அரிசி போன்ற அனைத்து செலவுகளும் நானே செய்யவேண்டியதானது. ஆகவேதான் மறுபடியும் FMPB மிஷனரி ஊழியம் தொடங்கியபோது நான் பெரியமலை செல்லவில்லை. சகோ.ஹ்ரீஸ் ஹில்டனுடன் வேறு சில மிஷனரிகள் பணிதளம் சென்று மிஷனரி ஊழியத்தை தொடர்ந்தனர். இன்று அங்கு ஆலயம் கட்டப்பட்டு ஏராளமான ஆத்துமாக்களுடன் சிறப்பாக சபை நடத்தப்படுகிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நானோ மறுபடியும் என் டாக்டர் தொழிலை தொடர்ந்தேன். டேனிஷ்பேட்டை பெத்தேல் பெல்லோஷிப் மட்டுமல்லாது சொந்தமாக 2இடங்களில் காடையம்பட்டி-சேலம் முதல்அக்ரஹாரம் ஆகிய இடங்களில் கிளினிக் தொடங்கி பணம் சம்பாதித்தேன். கர்த்தர் என்னையும் என் தொழிலையும் நன்றாக ஆசீர்வதித்தார். என் 2 மூத்தசகோதரிகளின் திருமணத்தையும் முழு பொறுப்பொடுத்து நானே சிறப்பாக நடத்தி வைத்தேன்.

## என் திருமணம்:

CSIயில் ஆயராக பணிபுரிந்த Rev.Noel என்பவரின் மகளும், **சேலம்** அரசாங்க ஆஸ்பத்திரியில் வேலை செய்துகொண்டிருந்தவருமான **N.மங்களவதனி** என்பவரை **1970**ம் ஆண்டு நான் மணமுடித்தேன். எனக்கு **இரண்டு** பிள்ளைகள் பிறந்தது.



அதில் **மூத்த மகன்** இப்போது சேலம் ஏற்காடு மலையில் டாக்டராக பணிபுரிகிறார். **மருமகள்** நான் வேலை செய்த அதே டேனிஷ்பேட்டையில் **பெத்தேல் பெல்லோஷிப் மிஷன்** ஆஸ்பத்திரியில் டாக்டராக பணிபுரிகிறார். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் மகள் இப்போது (2014) 6ம் வகுப்பிலும், மகன் 5ம் வகுப்பிலும் படித்துக் கொண்டுஇருக்கிறார்கள்.

**இரண்டாவது மகள்.** அவரும் திருமணம் முடித்து **மருமகன்** அமெரிக்கா **ஆஸ்பரி தியாலஜி** கல்லூரியில் M.Th, Ph.D படிப்பை முடித்து பெங்களூர் SAIACS வேதாகம கல்லூரி விரிவுரையாளராகவும், HODயாகவும் பணியாற்று கிறார். அதோடு அவர் அமெரிக்காவில் Wilmoreல் உள்ள John Weslyயால் ஆரம்பிக்கப்பட்ட **ஆஸ்பரி வேதாகமகல்லூரியில்** Bபோர்ட் மெம்பராகவும், உலக பிரசித்திபெற்ற **கன்வென்ஷன்** செய்தியாளராகவும், வேதாகம ஆசிரியராகவும் உலகத்தின் பல்வேறு நாடுகளுக்கு அடிக்கடி சென்று ஊழியம் செய்துகொண்டிருக்கிறார். அவருக்கு ஒரு **மகள்** முதல் வகுப்பு படிக்கிறாள். கர்த்தர் எங்களுக்கு எந்த குறையும் வைக்காமல் மனநிறைவோடு வாழவும், சமாதானத்துடனும், ஆரோக்கியத்துடனும் குடும்பம் நடத்தவும், **கடன் இல்லாத** ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையை எனக்கும், என் பிள்ளைகளின் குடும்பத்துக்கும் கிருபையாக அளித்து வழி நடத்துக்கிறார். கர்த்தருக்கே மகிமை.

**"நானும், கர்த்தர் எனக்கு கொடுத்த பிள்ளைகளும்..... சேனைகளின் கர்த்தராலே...அடையாளங்களாகவும், அற்புதங்களாகவும் இருக்கிறோம்".** ஏசா 8:18.

## மறுபடியும் முழுநேர ஊழியம்:

**1964** முதல் FMPB மாநில முகாமில் மிஷனரி செய்திகளையும், மிஷனரி ஊழியத்தின் அவசரத்தையும், அவசியத்தையும் அங்கு நடத்திய பிரசங்கத்தில் கேட்டு நான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன். அன்று நான் **என் வீட்டின் சூழ்நிலையை** மனதில்கொள்ளாமல், உணர்ச்சி வசப்பட்டு எடுத்த **அவசர தீர்மானத்தினால் உந்தப்பட்டு** முழுநேர **மிஷனரி பணியில்** இறங்கினேன். பெரியமலைக்கு சென்றேன். ஆனால் என் வீட்டின் பரிதாப நிலை- என் குடும்பம் வறுமையின் **உச்சக்கட்டத்துக்கு** போன விவரத்தை என் நண்பன் எனக்கு எழுதிய கடிதம் அன்று நான் **பெரியமலையில் மிஷனரி பணி** செய்துகொண்டிருந்த போது கையில் கிடைத்து. அதை வாசித்தபின்தான் நான் மிகவும் உணர்த்தப்பட்டேன். உள்ளத்தில் மிகுந்த வேதனையடைந்தேன்.

**மிஷனரி பணியில்** முழுநேர ஊழியனாக செல்ல கர்த்தர் என் உள்ளத்தில் உணர்த்தியதும், நான் **முழுநேர பணிக்காக** என்னை ஒப்புக்கொடுத்தெல்லாம் பிழையான தீர்மானமா? என்ற கேள்வி எனக்குள் எழுந்து மிகவும் வாட்டி வதைத்து. **பெரியமலை மிஷனரி பணிதளத்தை வீட்டு** ஊருக்கு திரும்பிவிட்டால், விசுவாசிகள், கிறிஸ்தவ உலகம் என்னைப்பற்றி என்ன நினைக்கும்?. **கலப்பையின்மேல் கைவைத்து திரும்பிவிட்டவன்** என்று கூறுவார்களே! ஏற்கனவே ஒரு நண்பர் தன் **பத்திரிக்கையில்**

எழுதியதைப்போல பெரியமலை சென்ற **சில மிஷனரிகள் போன வேகத்திலேயே திரும்பி ஓடிவந்து விட்டனர்** என்று அவர் எழுதியதைபோல் அல்லவா மக்கள் கூறுவார்கள். அன்றைய என் மனப்போராட்டம் மிக கொடியதாக எனக்கு தோன்றியது.

‘ அப்போது **Dr.பில்லகிரஹாம்** அவர்கள் எழுதிய புத்தகத்தின் வாசகங்கள்தான் என்னை மிகவும் தேற்றின. எந்த ஒரு கிறிஸ்தவனும் தன் உள்ளத்தில்

‘ **முதலாவது கர்த்தருக்கு** இடம் கொடுக்க வேண்டும்.

‘ **இரண்டாவது** சொந்த குடும்பத்துக்கு இடம் கொடுக்கவேண்டும்.

“ **மூன்றாவதுதான்ஊழியத்துக்கு** இடம்கொடுக்கவேண்டும். ஊழியம் மூன்றாம் இடத்தில்தான் வைக்கப்படவேண்டும்.

“ பவுல்கூறுகிறதைப்போல் **சொந்த குடும்பத்தை சரியாக நடத்தாதவன் எப்படி சபையை நடத்துவான்?** (எப்படி ஊழியத்தை செய்வான்?)

குடும்பத்தை பட்டினியில் கிடத்திவிட்டு **இயேசு ஜீவிக்கிறார்** என்று சுவிசேஷம் அறிவிக்க அவனுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?. இயேசுகிறிஸ்துவும் சிலுவையில் மரிப்பதற்குமுன் தன் ஆவிக்குரிய தாயை அனாதையாக விட்டுவிடாமல் குடும்ப பொருப்புள்ள மகனாக தனக்கு பதில் தன் தாய்க்கு தன் **சீஷனை** மகனாக பொருப்பெடுக்கும்படி ஏற்பாடுசெய்துவிட்டுதான் இயேசுகிறிஸ்து தன் ஜீவனை விட்டார்.

இவைகளையெல்லாம் **ஆவியானவர்மூலம்** நான் உணர்த்தப்பட்டேன். அதன்பின்னர்தான் மறுபடியும் என் டாக்டர் தொழிலை செய்து என் குடும்பத்தை காப்பாற்றினேன். என்றாலும் ஆரம்பகால மிஷனரி **ஊழிய தரிசனத்தை** நான் இழக்காமல் பார்த்துக்கொண்டேன். என் தொழிலுடன் இணைந்து பிரசங்க ஊழியத்தையும், பல மாநிலங்களில் உள்ள மலைகளுக்கு சென்று மிஷனரி பணியையும் நிறைவேற்றினேன். இப்போதும் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறேன். சபைகளை வசனத்துக்கு நேராக திருப்பும் பணியும், இயேசுவை ஒருமுறைகூட கேள்விப்படாத **ஆதிவாசிகள் மத்தியில்** இலவச **மருத்துவத்துடன் சுவிசேஷம்** அறிவிக்கும் பணியும் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறேன். இந்த ஊழியங்களை டாக்டர் தொழில் செய்துக்கொண்டே நிறைவேற்றினேன். ஆனாலும் **முழுநேர ஊழிய** பாரம் முழுநேர ஊழிய அழைப்பை என்னை தொடர்ந்து அழுத்திக்கொண்டிருந்தது.

## முழுநேர ஊழியம்:

‘ **1976ம்** வருடம் ஒருநாள் என் மனைவியிடம் நான்முழுநேர **ஊழியம்** செய்ய அர்பணித்தவன். இப்போது செய்யும் மருத்துவதொழிலோடு சேர்த்து சுவிசேஷ ஊழியம் செய்வதில் எனக்கு மனத்திருப்தியில்லை. ஆகவே நான் மருத்துவ தொழிலை நிறுத்தப்போகிறேன். அதன் காரணமாக என் வருமானம் முழுவதும் நின்றுபோகும். உன் **ஒரு சம்பளத்தில்மட்டும் உன்னால் நம் குடும்பத்தை நடத்த இயலுமா?** நம் முழு குடும்பத் தேவைகளை உன்னால் சமாளிக்க முடியுமா? என்று கேட்டேன். **இரட்சிக்கப்பட்ட என் மனைவி கூறினார்.** என் குடும்பமும் மிக ஏழ்மையான குடும்பம். என் தகப்பனரின் முகத்தை நான் பார்த்த ஞாபகம்இல்லாத வயதில்,என் தகப்பனர் ஊழியம்செய்து கொண்டிருக்கும் போதே இறந்துபோனார். என் தாய் ஒரு விதவை, **டீச்சர்** வேலைசெய்து அவரின் ஒரு சம்பளத்தில்தான் **என்னையும்,** என்கூட பிறந்த 2 உடன்பிறப்புகளையும் படிக்கவைத்து முன்னுக்கு கொண்டு வந்தார். ஆகவே சிக்கனமாக எப்படி குடும்பம் நடத்துவது என்று எனக்கு நன்றாக தெரியும். ஆகவே நீங்கள் தைரியமாக மருத்துவவேலையை விடுங்கள்,டாக்டர் தொழிலை நிறுத்துங்கள். **கர்த்தருடைய ஊழியத்தை முழுநேரமும் செய்யுங்கள்.** குடும்பத்தைப்பற்றி கவலைப்படாதீர்கள் என்று மிகவும் உற்சாகப்படுத்தினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என் மனைவிக்காக நான் தேவனை துதிக்கிறேன்.

## பண சோதனை:

நான் டாக்டர் தொழிலை நிறுத்தி 5வது மாதம் **பெங்களூரிலிருந்து** கன்வென்ஷனில் பிரசங்கிக்க நான் அழைக்கப்பட்டேன். அழைத்த ஊழியர் பெரிய சபையை நடத்துகிறார். 3 இடங்களில் **அனாதை இல்லம்** நடத்துகிறார். **வெளிநாட்டு பணம்** அவருக்கு வருகிறது. (Swiss& Sweedan) ஆகிய வெளிநாடு களிலிருந்து ஏராளமான பண உதவிகளை அவர் பெறுகிறார். ஆனாலும் அவர் வெளிநாட்டு பணம் பெறும் மற்ற ஊழியர்களைப்போல் அல்லாமல் ஒரு பழைய கார் வைத்துக்கொண்டு ஆடம்பரம் இல்லாத சாதாரன வீட்டில் வாழ்ந்துகொண்டிருந்தார். மேலும் வெளிநாட்டிலிருந்து அவருக்கு வரும் பணத்தை அரசாங்கத்துக்கும், கர்த்தருக்கும் சரியாக கணக்கு காட்டுபவர் என்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

நான்கு நாட்கள் கன்வென்ஷனுக்காக பெங்களூர் சென்றேன். இரண்டாவது நாள் கன்வென்ஷன் முடிந்து இரவு உணவு சாப்பிட்டு ஒய்வாக நாங்கள் அமர்ந்து வேதவசனம் சம்பந்தமாக பேசிக் கொண்டிருக்கும்போது அவர் தன் மனைவியை பார்த்து அறையிலிருந்து அந்த டிரேஜ(Tray) எடுத்து கொண்டு வா என்றார். அவர் மனைவி எழுந்து **ரூபாய் நோட்டு கட்டுகள்** நிறைந்த டிரேஜ என் முன்னே உள்ள சிறிய மேசையில் வைத்தார். **அந்த பாஸ்டர் கூறினார்:** டாக்டர் இந்த பணம் எல்லாம் உங்களுக்குத்தான். எனக்கு வெளிநாட்டு பணம் வரும் விஷயம் உங்களுக்கு தெரியும். எனக்கு வளமையாக பணம் உதவி செய்யும் ஸ்தாபனத்தின் தலைவர் 5மாதத்துக்குமுன் ஒரு தொகையை எனக்கு அனுப்பி இந்தியாவில் **உங்களைப்போல் உண்மையாக ஊழியம்** செய்பவரை கண்டுபிடித்து இந்த பணத்தை அவரிடம் கொடுத்து **இந்திய கிராம ஊழியத்தை** விரிவுப்படுத்துங்கள். ஒவ்வொரு மாதமும் உங்களுக்கு நாங்கள் பணம் அனுப்புவதைப்போல் அவருக்கும் பணம் மாதந்தோறும் அனுப்புவேன் என்று அந்த வெளிநாட்டு நபர் எனக்கு எழுதி கடந்த 5மாதங்களாக தொடர்ந்து பணம் அனுப்பிக்கொண்டிருக்கிறர். ஆனால் உண்மையான ஊழியரை என்னால் கண்டுபிடிக்கமுடியவில்லை.

கடந்த காலத்தில் என்னிடம் பணஉதவி பெற்ற ஊழியர்கள் எல்லாம் நன்றி கெட்டவர்களாகி போனார்கள். நான் கொடுத்த பணத்துக்கு அவர்கள் தங்கள் பெயரிலேயே நிலம் வாங்கி வீட்டையும் சபையையும் கட்டி நன்றாக வளர்ந்துவிட்டார்கள். கொடுத்த பணத்துக்கு கணக்கு கேட்டதால் இப்போது அவர்கள் என்னோடு தொடர்பு கொள்வதில்லை. ஆகவே இந்த பணத்தை யாரிடமும் ஒப்படைக்க மனமில்லை. அப்போதுதான் **டாக்டர்.புஷ்பராஜ்** அவர்கள் டாக்டர் தொழிலை முழுவதுமாகவிட்டு முழுநேர ஊழியத்தில் இறங்கிவிட்டார் என்று கேள்விப்பட்டேன். அப்போது என் மனைவியிடம் நாம் டாக்டரை அழைத்து ஒரு கன்வென்ஷன் நடத்தி இந்த பணத்தை அவரிடம் ஒப்படைப்போம் என்று நாங்கள் தீர்மானித்து உங்களை வரவழைத்தோம். ஆகவே இந்த பணம் 5 மாதத்திற்கான உதவி தொகையாகும். இனி மாதாமாதம் பணம் உங்கள் வீட்டுக்கு நேரிடையாக அவர்களே அனுப்பும்படி ஏற்பாடு செய்வேன் என்றார். கட்டுக்கட்டாக பணகுவியலை நான் கண்டபோது என் வயிறு கலக்க ஆரம்பித்தது. நான் கூறினேன். பாஸ்டர் எனக்கு ஒருமாதம் டைம் கொடுங்கள். நான் என் மனைவியுடன் பேசி இந்த பணத்தைக்குறித்து நாங்கள் இருவரும் ஜெபித்தபின், எங்கள் முடிவை உங்களுக்கு எழுதி அறிவிக்கிறோம் என்றேன். உடனே அந்த பாஸ்டர் ஒரு மாதம் கழித்து பதில் கூறுங்கள். ஆனால் இப்போது இந்த பணத்தை இங்கிருந்து எடுத்து செல்லுங்கள். இவ்வளவு பெரிய தொகையை கடந்த 5 மாதங்களாக நாங்கள் வைத்திருப்பது எங்களுக்கு பெரிய சோதனையாக இருந்தது என்றார். இந்த காலத்தில் பணம் தனக்கு சோதனை என்று யார் கூறுவார்? அந்த பாஸ்டர் பணவிஷயத்தில் மிகவும் உண்மையுள்ளவரானதால்தான் பணம் தனக்கு சோதனையாக இருப்பதாக கூறினார். என்றாலும் நான் அந்தபணத்தை கண்டிப்பாக இப்போது எடுத்துக்கொண்டு போகவிரும்பவில்லை என்று அவரிடம் கூறியதால் அதற்குமேல் அவர் என்னை கட்டாயப்படுத்தவில்லை. கூட்டம் முடிந்தது. என் வீட்டுக்கு (சேலம்)

திரும்பினேன். என் மனைவியிடம் விவரங்களை பகிர்ந்துகொண்டேன். நாங்கள் ஜெபிக்க தொடங்கினோம். ஆனால் 3 வாரங்கள்வரை கர்த்தரிடமிருந்து எந்த பதிலும் எங்களுக்கு கிடைக்கவில்லை. பெங்களூர் பாஸ்டருக்கு பதில் அனுப்ப வேண்டிய நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. நான் என் மனைவியிடம் நான் தனியாகசென்று ஜெபம்செய்துவிட்டு வருகிறேன் என்று கூறி அருகேயுள்ள ஏற்காடு மலைக்கு சென்றேன். ஒருநாள் முழுவதும் ஜெபத்தில் இருந்தேன். எந்த பதிலும் கர்த்தரிடமிருந்து கிடைக்கவில்லை. வசனம் மூலமாகவும் பதில் அறியமுடியவில்லை. இரண்டுநாள் என் தனி ஜெபநேரமும் முடிந்தது. கடைசியாக என் ஆண்டவரிடம் கூறினேன். கர்த்தாவே நீரும் இந்த விஷயத்தில் மௌனமாக இருக்கிறீர். பதில் ஏதும் தரவில்லை. ஆகவே என் தீர்மானத்தை உமக்கு நான் அறிவிக்கிறேன். கிடைக்கபோகும் பெரும் தொகை பணமும்,மேலும் நிரந்தரமாக மாதாமாதம் கிடைக்கபோகும் பெரும்தொகையும் இவை ஒன்றும் எனக்கு வேண்டாம். காரணம் உம்மிடமிருந்து பதில் இல்லாததால் இந்த பணம் நான் வாங்கினால் ஒருவேளை நான் உம்மைவிட்டு விலகிவிடுவேனோ? இதில் ஏதோ வில்லங்கம் இருப்பதைப்போல் தெரிகிறது. அதனால்தான் நீர் மௌனமாக இருக்கிறீரோ? நான் அறியேன்? ஆகவே நானே தீர்மானித்துவிட்டேன் எனக்கு அந்த பணம் வேண்டாம். அந்த பாஸ்டருக்கு பணம் வேண்டாம் என்று எழுதிவிட போகிறேன். என்னை ஆசீர்வதித்து அனுப்பும் என்று கூறி ஜெபத்தை முடித்துக்கொண்டேன். கர்த்தரும் என்னை ஆசீர்வதித்தார். என் மனதில் ஒரு பெரும் தெளிவு ஏற்பட்டது. சந்தோஷமும் ஏற்பட்டது. இரண்டுநாள் ஜெபம் முடித்து வீடுவந்து சேர்ந்தபின் என் மனைவியிடமும் எனக்காக ஜெபிக்கும் ஒரு குடும்பம் உண்டு. அந்த ஆவிக்குரிய குடும்பத்தினரிடமும் கர்த்தரின் மௌனத்தைப்பற்றி கூறினேன். அதில் ஒருவர் கூறினார். டாக்டர்! மௌனம் சம்மதத்துக்கு அடையாளம் என்று உலக மக்கள் கூறுவார்களே!, என்றார்கள். அதற்கு நான் அந்த மௌனம் கல்யாணத்துக்குதான் பொருந்தும். இப்படிப்பட்ட காரியத்துக்கு அல்ல. இந்த பணம் நான் வாங்கினால் என் பெலவீனத்தில் ஆண்டவரை மறந்துவிடும் நிலை எனக்கு ஏற்படுமோ! தேவன் அதை அறிந்திருப்பாரோ! அதனால்தான் பதில் ஏதும் கூறவில்லையோ! எப்படியோ நான் எடுத்த தீர்மானத்தில் உறுதியாக இருந்தேன். பெங்களூர் பாஸ்டருக்கும் கடிதம் எழுதிவிட்டேன்.

‘ சுமார் 7மாதங்கள் கடந்தபின் சென்னை அம்பத்தூரில் என் கன்வென்ஷன் கூட்டம் நடந்தது. கூட்டமுடிவில் பெங்களூர் பாஸ்டரும், சகோ.தினகரன் அவர்களும் என்னை சந்தித்தனர். நான் தங்கியிருந்த வீட்டுக்கு வந்திருந்தனர். பெங்களூர் பாஸ்டர் என்னை கட்டிப்பிடித்து ஆனந்த கண்ணீர்விட்டு கூறினார். இன்றைக்கு வெளிநாட்டு பணஉதவிக்காக பேயயாய் அலையும் ஊழியர்கள் எத்தனையோ பேர்களை நான் கண்டிருக்கிறேன். ஆனால் 5மாதத்தின் பெரும்தொகையை கையில் கொடுத்தும் அதை வேண்டாம் என்று சொன்ன ஒரேஊழியர் நீங்கள்தான்.டாக்டர்!. நீங்கள் இதே விசுவாசத்தில் இருங்கள்!. நிச்சயமாக நீங்கள் கர்த்தரால் கைவிடப்படுவதில்லை. கர்த்தர் உங்களோடு இருப்பதை உணருகிறேன். பிரைஸ் த லார்ட் என்றார். நான் சொன்னேன்.பாஸ்டர் கர்த்தர் என்னை மனம்திரும்ப வைத்த நாளிலிருந்து இதுவரை எனக்கு போதுமானவராக இருக்கிறார். இப்போது எனக்கு தொழில் இல்லை, வருமானமும் இல்லை. ஜாமக்காரன் பத்திரிக்கைக்கு மாதந்தோறும் பல லட்சங்கள் செலவாகிறது. ஆனால் இதுவரை நான் யாரிடமும் பணத்துக்காக கைஏந்தியதில்லை. பணத்தேவைகளை என் ஜாமக்காரனில் மறைமுகமகவோ! வெளிப்படையாகவோ! இதுவரை எழுதியதில்லை.

‘ 162 வெளிநாடுகளுக்கு சென்றேன். ஒரு கூட்டத்திலும் காணிக்கைவேண்டும் என்று நான் கேட்டதில்லை. பெஹரின் நாட்டுக்கு முதல்முறையாக சென்றபோது தமிழ் ஐக்கியசபையில் பிரசங்கத்தின் நடுவில் காணிக்கை எடுத்தபோது சபைபொருப்பாளர்களிடம் கூறினேன். ஏற்கனவே கடிதத்தில் காணிக்கை எனக்கு கொடுக்கவேண்டாம். எனக்கு ஸ்தாபனம் ஏதுவும் இல்லை!. சொந்தமாக

சபை ஏதும்இல்லை!. (அன்று) என் அலுவலகத்தில் சம்பளம்பெறும் பணியாளர் யாரும் இல்லை. ஆகவே வெளிநாடுகளுக்கு போவது பணம்சேகரிக்க அல்ல என்று எழுதினேனே! என்றேன்.

' என் பத்திரிக்கையான ஜாமக்காரன் செலவுகளை இந்தியாவிலேயே விசுவாசிகள் ஏராளமானவர்கள் மாதாமாதம் எனக்கு பணம் அனுப்பி கடன் இல்லாமல் பத்திரிக்கை ஊழியத்தை நடத்தி உதவுகிறார்கள். என் வெளிநாட்டு பயணத்துக்கான டிக்கட் பணத்தை என்னை அழைக்கும் சபைகளே கொடுத்துவிடுகிறார்கள். விசா செலவீனங்களுக்கும் தேவையைவிட மிகுதியாகவே பணம் கொடுத்து விடுகிறார்கள். அப்படியிருக்க மேற்கொண்டு எனக்கு பணம் எதற்கு?

இந்த மூன்று நாட்களும் பெஹரினில் நீங்கள் கூட்டத்தில் எடுத்த காணிக்கையை தயவுசெய்து இந்திய மிஷனரி பணிக்காக அப்படியே அனுப்பிவிடுங்கள் என்று பகிரங்கமாக அறிவித்தேன்.

இப்போது நான் எழுதும் இந்த செய்தியை நான் நேசிக்கும் அந்த பெஹரீன் சபை மக்கள் அனைவரும் படிப்பார்கள். நெட்டில் பார்ப்பார்கள். நான் பொய் பேசுகிறனா! உண்மை பேசுகிறனா! என்று அவர்களும் - கர்த்தரும் அறிவார்கள். நான் அப்படி பேசினதற்கு பிறகுதான் அரேபியா நாடுகளிலேயே மிக அதிகமான இந்திய மிஷனரிகளை தாங்கும் ஒரே சபை பெஹரீன் சபை என்ற நற்பெயர் பெற்றது.

இப்போது சில மாதங்களுக்குமுன் நான் பெஹரீன் சென்றபோது அந்த சபையினர் இப்போது நூற்றுக்கணக்கான மிஷனரி ஸ்தாபனங்கள் பெஹரீன் சபையினரால் தாங்கப்படுகிறது ஏராளமான ஆலயங்களை பெஹரீன் சபையினர் கட்டிகொடுத்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு தேவனை துதித்தேன். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

ஏன் இவைகளை இங்கு குறிப்பிடுகிறேன் என்றால். எனக்கும் பணதேவை உண்டு. பணம் இல்லாமல் எந்த ஒரு ஊழியமும் செய்யமுடியாதே. ஆனால் அந்த தேவைகளை மனிதர்களிடம் கேட்காமல், டிவியில் அல்லது வானொலியில் அறிக்காமல் பண தேவைகளை பத்திரிக்கை வழியாக கேட்காமல்! நேரிடையாக கர்த்தரிடம் அறிவிக்கவேண்டும். (கேட்கக்கூடாது! ஆனால் அறிவிக்க வேண்டும்). கேட்பதற்கும் அறிவிப்பதற்கும் வித்தியாசம் உண்டு. நாம் வேண்டிக்கொள்வதற்கு முன்பே இன்னது தேவை என்று கர்த்தர் அறிந்திருக்கிறார் என்று வேதம் தெளிவாக கூறுகிறது.

பணதேவையுள்ள என் நெருக்கமான சூழ்நிலையில் கைகளை நீட்டி மடிஏந்தி பிச்சை கேட்பதுபோல் நம் கர்த்தரிடம் நாம் ஜெபிக்கும்போது அந்த ஜெபத்தில் கிடைக்கும் இன்பம் இருக்கிறதே அது அலாதியானது!. அந்த ஜெபத்தின்மூலம் தேவனோடு உண்டாகும் நெருக்கம் இருக்கிறதே! அது மிகவும் விசேஷமானது. அதை அனுபவித்தால் மட்டுமே அறியமுடியும்.

அந்த இன்பம்!, அந்த நெருக்கம் யாவும் நமக்கு பணம் நிறைய கிடைத்துவிட்டால் அந்த ஆவிக்குரிய சந்தோஷம் நெருக்கம், இன்பம் யாவும் போய்விடும்.

அதனால்தான் சாலமோன் கேட்டான். கர்த்தாவே, பணம் இல்லாததால் நான் உம்மிடம் முறுமுறுக்காமல், பணம் நிறைய கிடைப்பதால் நான் உம்மை மறந்துவிடாமல் இருக்க, என்னை எப்போதும் இதுபோலவே ஒரே மாதிரி வாழவையும் என்று ஞானமாக கேட்டானே!.

அந்த வாழ்க்கை டாக்டர்.புஷ்பராஜ் ஆகிய எனக்கு கிடைக்கவேண்டுமானால் என்னை பணக்கார ஸ்டார் ஊழியனாக கர்த்தர் மாற்றாமல் இருந்தால் போதுமானது. இதில் கிடைக்கும் நிம்மதி- பயம் இல்லாத சூழ்நிலை! வேறெதிலும் கிடைக்காது!.

' கடந்த 50 வருடங்கள் என் ஊழியத்தில் கர்த்தர் என்னையும் என் குடும்பத்தையும் எத்தனை அருமையாக கடன் இல்லாமல், வியாதி இல்லாமல் நடத்துகிறாரே அந்த பெரும் கிருபை என் மரணம் வரை தொடரவேண்டும் என்பதே என் ஜெபம் ஆகும்.

‘ இப்போது நான் 74 வயதை மிகவும் சீக்கிரம் நெருங்கிவிடுவேன். நவம்பர் 13ம் தேதி வந்துவிட்டால் கர்த்தர் அனுமதித்திருந்தால் அடுத்த வருடத்துக்குள் அந்த வயதை நெருங்கிவிடுவேன் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

‘ கடந்த50 வருடத்தில் எந்த ஊழியத்துக்கும் நான் தாமதித்து சென்றதில்லை. ஊழியம் நடத்த முடியாமல் எந்த ஊரிலும் நான் வியாதியில் படுத்ததில்லை. கடைசி நேரத்தில் என் ஊழியம் கேன்ஸல் செய்யப்பட்டதும் இல்லை. ஒரே ஒருமுறை டைபாய்டு காய்ச்சலில் தலைபாரம் உண்டானதை அனுபவப்பட்டிருக்கிறேன். ஆனால் பிறந்ததிலிருந்து தலைவலி நான் அனுபவப்பட்டதில்லை. கர்த்தரின் கிருபை இன்னும் என்னை தொடருகிறது.

‘ வேதத்தில் யோசுவா 14:11ல் இன்று நான் எண்பத்தைந்து வயதுடையவன். மோசே என்னை அனுப்பின நாளில் நான் 45 வயதுடையவன். அந்த 45வயதில் எனக்கு இருந்த அதே பெலன். 85வயதான இந்நாள்வரை இருக்கிறது. யுத்தத்துக்குபோகவும்,வரவும் அப்போது இருந்த பெலன் இப்போதும் எனக்குள் இருக்கிறது என்றான். எத்தனை அருமையான அனுபவ சாட்சி இது.

‘ நானும் ஒவ்வொரு மாதமும் ஒருவாரம் முழுவதும் இந்தியாவின் மலைநாடுகளில் இயேசுவை அறியாத மக்கள் மத்தியில் ஊழியம் செய்கிறேன். கடந்த 2014 மே மாதம் 7ம் தேதி நேபாள எல்லையில் ஊழியம் செய்ய காடுகளுக்குள் சென்றபோது என்னை தொடர்ந்து வந்த வாலிபர்கள், 45 வயதுடையவர்கள் மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க, உடல் வியர்த்து பல இடங்களில் உட்கார்ந்து விட்டனர். ஆனால் கர்த்தர் என்னை காலேப் கூறியதைப்போல் நடத்தியதை குறித்து இந்த தலையங்கம் எழுதும்போது என் வாசகர்களுக்கு அறிவித்து துதிக்க விரும்பினேன். எத்தனை கிருபை. எத்தனை இரக்கம். கர்த்தர் என்மேல் காட்டி நடத்துகிறார்.

‘ என்ஆயுளுக்கு எல்லை உண்டு.

‘ என் ஊழியமும் இப்படியே நீண்டுபோகாது என்பதும் எனக்கு தெரியும். ஆகவே என் ஊழியத்துக்கும் ஒரு எல்லை உண்டு. அது எப்போது என்று தான் தெரியாது.

வியாதியே இல்லை, தலைவலி அனுபவப்பட்டதில்லை என்று பெருமையோடு கூறவில்லை. கர்த்தரின் கிருபை எப்படியாய் என்னோடு இருக்கிறது என்பதை அறிவிக்கவே அப்படி கூறினேன். அந்த தலைவலியை நான் அனுபவபட்டதில்லை என்று நான் கூறியதற்கும் ஒரு எல்லை உண்டு. எல்லாவற்றுக்கும் எல்லை உண்டு. ஆனால் என் ஆண்டவர் என்மேல் வைத்த கிருபைக்கோ, இரக்கத்துக்கோ எல்லையேயில்லை!. ருசித்துப்பாருங்கள் அந்த கிருபையை.

‘ காலேபைப்பற்றி கர்த்தர் கொடுக்கும் மற்றொரு சாட்சி என்னவென்றால் என் தாசனாகிய காலேப் வேறே ஆவியை(சுபாவம்) உடையவனாக இருக்கிறபடியால் அவன் உத்தமமாக கர்த்தரை பின்பற்ற முடிந்தது. எண் 14:24.

எனக்கும் கர்த்தர் வித்தியாசமான முறையில் அதே ஆவியானவர் என்னை நடத்துகிறபடியால், நாலுமாவடி மோகன் சி.லாசரஸ், சகோ.சாம்ஜெபதுரை போன்ற பல கூட்டணிகள் எனக்கு வைத்திருக்கிற பெயர் குற்றம் சுமத்துகிற ஆவியை உடையவன். ஆம் என் ஊழியம் வித்தியாசம், என் ஜாமக்காரனில் எழுதும் எழுத்து வித்தியாசம். ஆகவே நான் வேறு ஆவியை உடையவன்தான். இவர்கள் நல்லநல்ல காரியங்களை மனிதர்கள்முன் டிவியில்,பத்திரிக்கை சாட்சி எழுதினாலும் இவர்கள் ஜெபத்தில் பெயர் அழைப்பது பொய்யான செயல் ஆகும்.

வியாதிகளின் பெயர் ஜெபத்தில் இவர்கள் கூறுவது பொய்,பத்திரிக்கையில்,டிவியில் இவர்களைப்போன்ற பொய்யான அந்நியபாஷை என்ற பெயரில் இவர்கள் உளருவது நூற்றுக்குநூறு

பொய்யானது ஆகும். துணிந்து பொய்யான பாஷையை இவர்கள் பேசுகிறார்கள். எனக்குள் இருக்கும் வித்தியாசமான ஆவியான, ஆவியை பகுத்தறியும் ஆவியானவரின் வரம் இவர்களின் பொய் பாஷைகளை எனக்கு அடையாளம் காட்டுகிறது. அதனால்தான் நான் தைரியமாக இவர்களைப்பற்றி எழுதமுடிகிறது.

கர்த்தர் எனக்கு ஆவியானவர் மூலம் கொடுத்த வேறே ஆவியினால் ஜாமக்காரனில் பல ஊழியர்களின் பொய் முகங்களை கிழித்து காட்டுவதால் இந்த ஊழியர்களை ஆதாரிக்கும் விரும்பும் அத்தனை பேரும், அத்தனை ஊழியரும்,பிஷப்மாரும்,ஆயர்களும், பாஸ்டர்களும் என்னை முழுவதுமாக வெறுத்தாலும் கடந்த 50 வருடங்கள் எத்தனை சிறப்பாக என் ஊழியம் நடந்தது என்பது பெரும் ஆச்சரியமாகும். அந்த வெறுப்பின் சூழ்நிலையிலும் என் ஊழிய தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட்டது. இனி தேவன் அனுமதிக்கும் எல்லா காலமும்,அவர் கிருபை ஒன்றுமட்டும் என்னைவிட்டு நீங்காதிருந்தால் அதுவே போதும்!.

‘ நான் பிஷப்மார்களைக்குறித்து, சினாட் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்காவிலிருந்து வந்த உதவி கோடிக்கணக்கான உதவிதொகையை பல பிஷப்மார்கள் பங்கு போட்டு இன்னும் கணக்கு ஒப்புவிக்காத விவரம் பல கோடிகள் அபகரித்த சினாட் பழைய செயலருடன் பலர் ஜெயிலில் சென்ற விவரம் குறித்து ஜாமக்காரனில் நான் எழுதியது பல பிஷப்மார்களுக்கு பிடிக்கவில்லை என்பதால் என்னை தென் இந்தியா எங்கும் சிஎஸ்ஐ சபையில் உபயோகிக்கக்கூடாது என்று இரகசிய திட்டம் போட்டதாக அறிந்தேன்.

## பிஷப்மார்களின் தவறான கணிப்பு:

**Dr.புஷ்பராஜ்** எப்போதும் பிஷப்மார்களை குறிவைத்து பிஷப்மார்களை அவமானப்படுத்தும் விதத்தில் எழுதுகிறார். ஆகவே இனி நம் டையோசிஸ்களில் டாக்டரை கன்வென்ஷன்களில் பேச அனுமதித்தால் நம் டையோசிஸ்ஸின் அல்லது பிஷப்மார்களின் பல ரகசியங்கள், ஊழல்களை, நம் ஆயர்களில் பலர் டாக்டரிடம் கூறிவிடுகிறார்கள் அல்லது சபையில் உள்ளவர்கள் அவரிடம் அறிவித்து விடுகிறார்கள். உடனே டாக்டர் அதை விசாரிக்காமல் ஜாமக்காரனில் எழுதிவிடுவதால் மக்கள் பிஷப்மார்களை அல்லது ஆயர்களை மதிப்பதில்லை. அதனால் அவமானமடைய வேண்டியுள்ளது என்று சில பிஷப்மார் நினைத்து என்னை கூட்டங்களுக்கு அழைக்கக்கூடாது என்று எழுதிய அறிக்கையாக ஆயர்களுக்கு அனுப்பாமல், **வாய்மொழியாக** என்னை அழைக்கக்கூடாது என்று ஆயர்களுக்கு அறிவித்ததாக அறிந்தேன்.

நான் யாரையும், எந்த ஊழியனையும், பிஷப்மார்களையும், எந்த சபைகளையும் **குறிவைத்து உள்நோக்கத்தோடு** எழுதுவது இல்லை. பிஷப்மார்களை, ஆயர்களை, பாஸ்டர்களை,ஊழியர்களை மதிக்கிறேன். அதிகாரிகளை மதிக்கவேண்டும் என்றும், தீதாய் பேசக்கூடாது என்றும், அதிகாரிகளுக்கு கீழ்படியவேண்டும் என்றும் நம் வேதம் போதிப்பதை நான் அறிவேன்.

ஆனால் ஊழல்கள்,தவறுகள் நடந்ததை எனக்கு என் வாசகர்கள் அறிவித்து என் வாசகர்களாகிய ஆயர்கள்,சபை மக்கள் என்னிடம் கேள்விகள் கேட்கும்போது அவர்களுக்கு நான் அறிந்ததையும் என் வாசகர்கள் இப்படிப்பட்ட சூழ்நிலையில் சபைக்குள் இருந்தபடி அதை எப்படி நேரிடவேண்டும் என்பதையும் ஆலோசனையாக பத்திரிக்கையில் அறிவிக்கிறேன். எச்சரிக்கிறேன். அது பல சமயங்களில் பெரிய பிரசித்திபெற்ற ஊழியனையும் அல்லது பிஷப்மார்களையும் பாதிப்படைய செய்கிறது அதை என்னால் தவிர்க்கயில்லாது.

இப்படி இவர்களைப்பற்றிய தகவல்கள், ஆதாரங்கள் கன்வென்ஷனில் நான் பிரசங்கம் செய்ய வரும் இடங்களில் யாரும் எனக்கு அவைகளை கொடுப்பதில்லை. சேலத்துக்கே அனைத்து தகவல்களும், போட்டோ ஆதாரங்களுடன் என் வீட்டுக்கே வாசகர்கள் அனுப்பிவிடுகிறார்கள். பேப்பர்

கட்டிங் செய்திகளும், அப்படியே டெல்லியிருந்தும்,கேரளத்திலிருந்தும் 22 CSI டையோசிஸ்களிலிருந்து பல விஷயங்கள் எனக்கு அனுப்பிகொண்டியிருப்பார்கள். ஆகவே கன்வென்ஷனுக்கு என்னை அழைத்தாலும் அழைக்காமல் போனாலும் ஜாமக்காரன் பத்திரிக்கை ஊழியம் தொடர்ந்து நடைபெறும். குற்றம் செய்தவர்கள் மட்டுமே தங்கள் தவறுகள், ஊழல்களை ஜாமக்காரனுக்கு தெரிவித்துவிடுவார் களோ என்று பயப்படுவார்கள். மற்றவர்களுக்கு அப்படிப்பட்ட **பயம் இல்லாததால்தான் டையோசிஸ் பிஷப்மார்கள் என்னை தொடர்ந்து** உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள்.

‘ **காண்பதை தெரிவிக்கும்படி ஜாமக்காரனை வை** என்று கர்த்தர் கூறினார். ஏசா 21:6. **ஜாமக்காரனே இரவு எவ்வளவு சென்றது?** என்று கூப்பிட்டு கேட்க அதற்கு **ஜாமக்காரன் விடியற்காலம்** வருகிறது, **இராக்காலமும் வருகிறது நீங்கள் கேட்கமனதானால்... கேளுங்கள்** என்று சொல்கிறான். ஏசா 21:11,12. விடியற்காலமும்-இராக்காலமும் எப்போதும் இணைந்து வராது. மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு வசனத்தின்படி ஜீவிக்கிறவர்களுக்கு **கர்த்தரின் வருகை** விடியற்காலம்போல் பயமில்லாமல் சந்தோஷமாக அமையும். மனந்திரும்பாத பெயர் கிறிஸ்தவர்களுக்கும், இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும், அந்த ஒரே நாள் இருளாக இருக்கும். **அக்கினி அபிஷேகம்** என்று கூறி ஏமாற்றியவர்களும், அக்கினி அபிஷேகம் வேண்டும் என்று அதன் அர்த்தத்தை விளங்கிக்கொள்ளமனதற்றவர்களையும் **அக்கினி அபிஷேகம்** என்று கூறி ஏமாற்றிய எல்லா ஊழியர்களையும், பாஸ்டர்களையும் **அந்த அக்கினியே அழிக்கும்.**

‘ கடந்த**50 வருடங்கள்** என்னை தங்கள் டையோசிஸ்க்கு அழைத்து ஊழியம் நடப்பித்து அநேக **ஆயிரமக்கள்** மனந்திரும்ப காரணமாயிருந்த **பிஷப்மார்களுக்கும், ஆயர்களுக்கும், பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களுக்கும்** ஒவ்வொரு சபை நிர்வாகிகளுக்கும்,இந்த விசேஷித்த நாட்களில் என் வாழ்த்துதலை கூறிக்கொள்கிறேன்.

‘ கடந்த **50** வருடங்களாக**காணிக்கைகளால்,ஜெபங்களால்** தாங்கி அவைகளை நிறுத்தாமல் தொடர்ந்து தாங்கிவந்த என் அருமை **வாசகர் குடும்பங்களுக்கும்,** அவர்களின் பிள்ளைகள் சந்ததிகள் யாவருக்கும் என் வாழ்த்துதலை கூறிக்கொள்கிறேன்.

‘ என் **50** வருட ஊழியத்தில் நான் ஊழியம் தொடங்கிய**ஆறாவது வருடம்** என் வாழ்வில் இணைந்த என் வாழ்க்கை துணையான என் அன்பு மனைவி **திருமதி.மங்களவதனி** அவர்களுக்கும் நான் வாழ்த்துதல் கூறியாகவேண்டும். என் சுபாவம் எப்போது மாறும் என்று சொல்லமுடியாது. அது மிகவும் வித்தியாசமான சுபாவம் ஆகும். வெளிஉலகத்துக்கு அது தெரியாது. எப்போதும் நான் **யோசித்துக்கொண்டே யிருப்பேன்.** அப்படிப்பட்ட என் சுபாவத்துக்கு ஏற்றப்படி என்னை அனுசரித்து சகித்து போவது என்பது விசேஷ தாலந்தும்,சாமத்தியமுமாகும். அதற்கு **விசேஷஞானம்,விசேஷ தேவக்கிருபை** வேண்டும், தேவன் அதை என் மனைவிக்கு கொடுத்திருக்கிறார். அவைகளையெல்லாம் ஜெபித்து பெற்றுக்கொண்டு என் **50** வருட ஊழியத்தில் **ஊறுதுணையாக** இருந்து என்னை **ஜெபத்தில் தாங்கின** தாங்கிக்கொண்டிருக்கும் என் அன்பு மனைவிக்காக தேவனை துதிக்கிறேன். நான் வீட்டில் தங்குவது வாரத்தில் இரண்டு நாட்கள்தான். ஆகவே என் அலுவலக வேலை முழுவதும், **இமெயில், கடிதங்கள்,மணியாடர்கள்,**அதோடு இடைவிடாது வரும் தொலைபேசி ஜெபவேண்டுகோள் எல்லாவற்றையும் மிகப்பொறுப்போடும்,பொருமையோடும் கையாளும் என் மனைவியின் பொருமை எல்லையற்றது. என் மனைவியின் ஜெபத்தையும் ஆலோசனையும் பலர் கேட்டு நன்மையடைந்துள்ளார்கள். கர்த்தர்தாமே அவருக்கு ஏற்ற பெலனை தந்து அவர் தனது **70வது வயதிலும்** என் ஊழியத்தில் என்னை தொடர்ந்து தாங்க கர்த்தர் அருள்புரிவாராக. என் மனைவிக்கு அருளிய விசேஷ கிருபைக்காக தேவனை துதிக்கிறேன்.

‘ **50 வருடங்கள் என்பது பூரணப்பட்ட எண்களில் ஒன்றாகும். கர்த்தர் எனக்கு 50 வருடங்கள் ஊழியம் செய்ய அனுமதித்தார்.**

‘ **என் வயதான கடந்த 74 வருடங்கள் சுகத்தோடு பெலத்தோடு வாழ கர்த்தர் எனக்கு அருள்புரிந்தார். அவருடைய நல்ல நாமத்துக்கு, கிருபைக்கு ஸ்தோத்திரம்.**

‘ **மலையாள மொழியில் ஜாமக்காரன் பத்திரிக்கையை வெளியிட மிகவும் உறுதுணையாக இருந்த சகோதரன் திரு. சுகுமாராதாஸ் அவர்களுக்காக தேவனை துதிக்கிறேன். கடந்த 40 வருடங்களாக மலையாளபாஷையில் மொழிபெயர்த்து எனக்கு Legal Advisior ஆகவும் உதவி செய்து கொண்டிருக்கிற சகோதரனுக்கு இந்த நேரத்தில் வாழ்த்து கூறுகிறேன். மறுபடியும் வாசகர்களாகி உங்கள் அனைவரையும் ஜாமக்காரன் மூலமாகவோ, நேரிலோ அல்லது கர்த்தரின் வருகையிலோ சந்திக்கும்வரை தேவகிருபையும், சமாதானமும் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.**

**கர்த்தரின் உன்னத பணியில்:**

**✍ டாக்டர். புஷ்பராஜ்**

# சி.எஸ்.ஐ., நிர்வாகம் மிரட்டல் பள்ளி ஆசிரியை தற்கொலை

**திருநெல்வேலி:** இடமாற்றம் செய்யாமல் இருக்க, சி.எஸ்.ஐ., நிர்வாகத்தினர் லஞ்சம் கேட்டதால், பள்ளி ஆசிரியை, தற்கொலை செய்து கொ்ண்டார்.

திருநெல்வேலி, பெருமாள்புரம், என்.ஜி.ஓ. காலனியை சேர்ந்த ஜானின் மனைவி ஹெப்சி, 45. மேலப்பாளையத்தை அடுத்துள்ள கருங்குளம், டி.டி.டி.ஏ., பள்ளியில், ஆசிரியையாக பணியாற்றி வந்தார். இந்த பள்ளி, தென்னிந்திய திருச்சபையின் மூலம் நடத்தப்படுகிறது. ஆண்டுதோறும், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்களின் பணியிடங்களில், சி.எஸ்.ஐ., நிர்வாகத்தினர் மாற்றம் செய்வர்.

கருங்குளத்தில் இருந்து, ஆசிரியை ஹெப்சியை, சேரன்மகாதேவி அருகே உள்ள கரிசல் கிராமத்துக்கு மாற்றம் செய்துள்ளனர். இதனால், மனமுடைந்த ஹெப்சி, நேற்று வீட்டில், விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்.



ஹெப்சி

அவர் எழுதியுள்ள கடிதத்தில், 'சி.எஸ்.ஐ., பள்ளி தாளாளர் எமி நேபின், பள்ளி தலைமையாசிரியர் ஜான் செல்லையா மற்றும் நிர்வாகிகள் இருவர், பணம் கேட்டு மிரட்டினர். நான், ஆண்டுதோறும் இடமாறுதல் என வரும்போதெல்லாம், பணம் கொடுத்துள்ளேன். இதுவரை, 12 முறை பணம் கொடுத்துள்ளேன். பணத்தை பெற்றுக் கொண்டும், என்னை இடமாற்றம் செய்துவிடுவதாக, அவர்கள் மிரட்டினர்' என, குறிப்பிட்டுள்ளார்.

போலீஸார், ஹெப்சி குறிப்பிட்ட நான்கு பேர் மீதும், தற்கொலைக்கு தூண்டியதாக வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். ஆசிரியை தற்கொலை செய்து கொண்ட விவகாரம், சி.எஸ்.ஐ., வட்டாரத்தில், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தினைக்கதிர் நாளிதழ்
7-6-2014

அன்றைய மிஷனரிகள் நமக்காக நம் சந்ததிக்காக பள்ளிக்கூடம்,கல்லூரிகள்,ஆஸ்பத்திரிகள் கட்டிகொடுத்தார்கள். ஆனால் இன்று பல சிஎஸ்ஐ,சிஎன்ஐ,லூத்தரன் சபைகளின் நிர்வாகிகள் இவைகளை லாபம் உண்டாக்கும் வியாபார ஸ்தாபனங்களாக மாற்றிபோட்டதால் தான் சபை தேர்தல்களில் போட்டியும்,பதவி சண்டையும் பதவிகளை கோடிகணக்கில் விலை கொடுத்து வாங்குவது,பதவிக்கு வந்துவிட்டால் செலவழித்த பணத்தை திரும்ப எடுக்க வேலை நியமனம்,இடம்மாற்றம்,பதவிஉயர்வு இப்படிப்பட்ட விஷயங்களில் துணிகரமாக பணம் வாங்கும் நிர்வாகிகள்,ஆயர்கள்,பிஷப்மார்கள் தமிழ்நாடு,கர்நாடகா மிக அதிகமாக ஆந்திர டையோசிஸ்களில் உண்டு. சபையை வியாபார குகையாக மாற்றுபவர்களை தண்டிக்க சாட்டையுடன் கூடிய இயேசு சபைக்குள் இன்று இல்லை. டையோசிஸ்ஸிலும் இல்லை. பிரம்பை கொண்டுவரவா என்று துணிந்து பவுலைப்போல் கேட்கும்,உண்மை ஊழியர் பிஷப்,நிர்வாகிகள் இப்படிப்பட்ட இடங்களில் இல்லை. தற்கொலைகள் மேலும் நடக்கவும் கொலை செய்யப்படாமல் மனநோயாளியாக மாற்றவும் இப்படிப்பட்ட சம்பவங்கள் காரணமாகக்கூடாது. ஜெபிப்போம்.

# அந்நியபாஷை



## பெந்தேகோஸ்தே சபை




## ஊழியர்களிடம் சிக்கி படும்பாடு

இன்றைய **நவீன பெந்தேகோஸ்தே** சபைகள், கரிஸ்மேட்டிக் உபதேசம் கொண்ட **ஊழியர்கள்** ஆகியவர்களிடம் **பரிசுத்தஆவியானவர்-அந்நியபாஷை** என்ற பெயரில் மிகவும் **அவமானப் படுத்தப்படுகிறார். அந்நியபாஷை** இப்படிப்பட்டவர்களிடம் அகப்பட்டு படாதபாடுபடுகிறது.

இவர்களின் **அக்கினிஅபிஷேகம்,ஆவியின்நீர்வீழ்ச்சி,அபிஷேகஆராதனை,துதி ஆராதனைஅபிஷேகம்** என்ற பல பெயரில் கவர்ச்சியாக மக்கள்முன் அறிவிக்கப்பட்டு, **வல்லமை முகாம் என்றும்** ஆவியின் வல்லமை பெற்றுக்கொள்ளுதல் இப்படியெல்லாம் அறிவிக்கப்பட்டு **படித்தவர்கள்**,படிக்காதவர்கள்,பாமரர்கள்,பிரச்சனையுள்ளவர்கள் இப்படிப்பட்டவர்கள் இவர்களின் இப்படிப்பட்ட கவர்ச்சி அறிவிப்பைக் கேட்டு இப்படிப்பட்டவர்களின் கூட்டத்தில் கலந்துக் கொண்டதால் **பைத்தியக்காரர்களாக** மாற்றப்படுகின்றனர்.

**பிசாசு** இப்படிப்பட்ட ஊழியர்களை தன்வசப்படுத்தி தன்னுடைய கடைசிக்கால திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறான்.

இதுவரை இவர்கள் கூட்டத்தில் பிசாசானவன் பிரசங்கத்துக்கு **பின்** அல்லது பிரசங்கத்தின் **முன்** கொஞ்சம் **அந்நியபாஷை** என்ற பெயரில் சபை மக்களை உளரவைப்பான். ஆனால் இப்போது முழுகூட்டமும் **அந்நியபாஷை** பேசும் கூட்டம் என்ற பெயரில் ஒரு **புது அறிவிப்பை** பிசாசு சென்னையில் அறிமுகப்படுத்தியுள்ளான்.



பாஸ்டர். விக்டர்ராஜாமணி

**அற்புதப்பெருவிழா, அமாவாசைஇரவு,பாஸ்டர்களின் அமாவாசை ஜெபம்** இப்படி கிறிஸ்தவ **மந்திரவாதிகளாக** பரிமளித்த இவர்கள் இப்போது புதுமையான பிசாசின் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

சென்னை AG சபை பாஸ்டர்.**விக்டர் ராஜாமணி** அவர்கள் நடத்தும் பத்திரிக்கையில்தான் அந்த அற்புத அறிவிப்பை காண நேர்ந்தது. சென்னை ஜாமக்காரன் வாசகர்கள் சிலர் அவருடைய சபையை சேர்ந்தவர்களே! அந்த குறிப்பிட்ட அறிவிப்பு பகுதியை போட்டோகாப்பி எடுத்து எனக்கு அனுப்பியுள்ளார்கள்.

அவருடைய பத்திரிக்கை பக்கம் 8ல் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

**10 நாள் அந்நியபாஷைஜெபம் தினமும் 6 மணிமுதல் 8 மணிவரை நடத்தப்படும் 10 நாட்களும் அந்நியபாஷையிலேயே ஜெபம்** செய்வது எப்படி?

இந்தியாவில் அல்லது தமிழ்நாட்டில் எங்காவது இப்படி 10 **நாட்கள் விடாமல் அந்நியபாஷையில்** ஜெபிப்பது என்பதை கேள்விப்பட்டதுண்டா?. அதன் அறிவிப்பை அடுத்த பக்கத்தில் பாருங்கள்.

**பாஸ்டர் விக்டர் ராஜமணி அவர்கள்**
**ஜூன் மாதம் கலந்துக் கொள்ளும் கூட்டங்கள்**

| எண் | தேதி | நிகழ்ச்சிகள் & நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1. | மே 30 முதல் ஜூன் 7 வரை | 10 நாள் அந்நியபாஷை ஜெபம் தினமும் 6 மணி முதல் 8 வரை | |
| 2. | ஜூன் 13 | அற்புத பெருவிழா மாலை 6 மணிக்கு | |
| 3. | ஜூன் 17 | மவுண்ட் ஊழியர் ஐக்கியம் காலை 10 முதல் 1 மணி வரை | |
| 4. | ஜூன் 20,21,22 | எழுப்புதல் கூட்டம் காலை 10 முதல் 1 மணி வரை மாலை 6 முதல் 9 மணி வரை | |
| 5. | ஜூன் 27 | அமாவாசை ஜெபம் மாலை 6 மணி முதல் 9 மணி வரை | |
| 6. | ஜூன் 27,28,29 | சுவிசேஷ பெருவிழா மாலை 6 மணி முதல் 9 மணி வரை | |

# புதிய இறக்குமதி:

10 நாட்கள் **அந்நியபாஷை** என்பது புதிய இறக்குமதியாகும். 1901லிருந்து பெந்தேகோஸ்தே சபை என்ற பெயரில் தொடங்கப்பட்ட பெந்தேகோஸ்தே சபைகளில் உலகில் வேறு எங்காவது 10 நாட்கள் **தொடர்ந்து அந்நியபாஷையில்** பேசியதை கேள்விப்பட்டதுண்டா?

இது இவர்களுக்கு மிகவும் **ஓவராக** தெரியலை? இப்படி 10 நாட்கள் அல்ல, பெங்களூர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சில பைத்தியங்கள் பல வருடங்களாக பல பாஷைகளில் பேசிக் கொண்டிருப்பதை அறிந்திருக்கிறேன். இதை எழுதும்போதே இதை வாசிக்கும் இந்த ஊழியர்கள் ஆம் நாங்களும் கிறிஸ்துவுக்கு பையித்திங்கள்தான் என்று பெருமையாக கூறிக்கொண்டு மற்றவர்கள் கேள்வி கேட்காதபடி தங்களை நியாயப்படுத்திக்கொள்வார்கள். ஜாக்கிறதை!.

இதை நான் இங்கு எழுதும்போது சென்னையில் பலர் 10 நாட்கள் தொடர்ந்து அந்நிய பாஷைகளை பேசி முடித்திருப்பார்கள், இவர்களில் பலர் தங்கள் வீட்டிலும்,பைத்தியங்களாக **அந்த அந்நியபாஷையை**தொடர்வார்கள் என்று நினைக்கிறேன்.இவர்கள் எல்லாம் பரிதாபத்துக்குரியவர்கள்!.

சென்னை பாஸ்டர்.விக்டர்ராஜாமணி அவரின் பத்திரிக்கையில் அவர்கள் 7ம் பக்கத்தில் **பரிசுத்தஆவியானவரின் ஒப்பனைகள்** என்ற தலைப்பில் வசனத்துக்கு சம்பந்தமே இல்லாது, வசனத்துக்கு தொடர்ப்பற்ற,பெருத்தமற்ற,வியாக்கியானத்தை சம்பந்தமில்லாத வசனத்தோடு குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்.

**பரிசுத்தாவியானவர்:** **புறாவுக்கு ஒப்பானவர்** என்று லூாக்கா 3:22ல் எழுதப்பட்டது. யோவானுக்குமட்டும் **மேசியா** யார் என்பதை அறிந்துக்கொள்ள **பிதாவால்** ஏற்பாடு செய்யப்பட்ட அந்த புறா அடையாளத்தின்மூலம் அதை சுட்டிக்காட்டுகிறார். ஆவியானவருக்கு **உருவம்**இல்லாததால் அந்த வசனத்தில் ஆவியானவர் **புறாரூபத்தில்** இயேசுவின்மேல் இறங்கி வருவதை காணவைத்து **யோவானை** அறிய வைத்தார். வேதத்தில் மற்ற எந்த ஒரு இடத்திலும் யார்மேலும்-ஆவியானவருக்கு அடையாளமாக புறா வந்திறங்கியதாக காணமுடியாது.

‘ பாஸ்டர்.விக்டர்ராஜாமணி அவர்கள் பரிசுத்த ஆவியானவரை **புறா** என்று தன் பத்திரிக்கையில் குறிப்பிட்ட ஏசா 60:8, உன் 2:14,உன் 5:12, ஏரே 9:1, லூாக் 7:44, உன் 2:14,ஏசா 38:14, மத் 12:36-37, லேவி 1:14,ரோம 12:1 இந்த வசனங்களில் **ஒன்றாவது பரிசுத்த ஆவியானவரை** சுட்டிக்காட்டுகிறதா? என்பதை பாஸ்டர்கள் வாசித்து அறியுங்கள்.

‘ **அதே பாஸ்டர் அக்கினிக்கு** ஒப்பனையாக பரிசுத்தாவியானவரை மத் 3:11, அப் 2:3, மத் 3:11 ஆகிய வசனங்கள்மூலம் சுட்டிக்காட்டியுள்ளார். **அக்கினி** என்பது கெட்டதை, மனம்திரும்பாதவர் களை **கோதுமை பதருக்கு**(உமிக்கு) ஒப்பாக்கி அவர்களை சுட்டெரிக்கப்போவதாக அல்லது அழிக்க போவதைக்குறித்து அந்த வசனம் ஒப்பிடப்பட்டிருக்கிறது.

‘ அப் 2:3ல் ஆவியானவரின் **முதல்இறக்கத்திற்கு** 3 முக்கிய **அடையாளங்களை** கர்த்தர் அங்கு அன்று ஏற்பாடு செய்தார். இந்த அடையாளம் அந்தகால யூதர்கள் **பாபேல்** கோபுரம் கட்டும்போது கோபுரம் பணிவதை நிறுத்த கர்த்தர் அவர்களை பல பாஷைகளை **பேசவைத்து** அந்தகால யூதர்களை **குழம்ப செய்து உலகமெங்கும் அவர்களை சிதறடித்தார்.** சிதறடிக்கப்பட்ட அந்த மக்கள் ஒவ்வொரு பஸ்கா பண்டிகைக்கும் **எருசலேமுக்கு** தவறாமல் கர்த்தரை பணிந்துக்கொள்ளவருவார்கள். அப்படி பற்பல பாஷை பேசிய அந்த யூதர்கள் அன்று எருசலேமில் தங்கியிருந்தபோது அவர்களை ஒரு இடத்தில் கூட்டிக்சேர்க்க கர்த்தர் ஒரு ஏற்பாடு செய்தார். பெரும் **காற்றுவீசினால்** எப்படி சத்தம் உண்டாகுமோ அப்படிப்பட்ட **காற்றின்முழக்கம்** போன்ற சத்தம் அங்கு உண்டாகச் செய்தார். அதை கேட்டவர்கள் பதறிபோய் சிலர் வீட்டிலிருந்தும், சிலர் விடுதியிலிருந்தும் **சத்தம்** ஏன் வந்தது என்று பார்க்க வெளியே வந்தனர். அப்போதுதான் 120பேர் தங்கியிருந்த அந்த வீட்டின் அருகே மக்களை கொண்டுவந்து கூட்டிசேர்க்க, அந்த வீட்டின்முன் **அக்கினிமயமான** நாவுகள்போல் (ஆங்கிலத்தில் Flam(**ஜீவாலை)** என்று குறிப்பிடுகிறது. மேலும் வேதத்தில் அங்கு **அக்கினிமயமான நாவு** காணப்பட்டது என்று எழுதப்படவில்லை என்பதை கவனியுங்கள். அக்கினிமயமான **நாவுபோல, நெருப்புப்**போன்ற நாவுகள் என்று கத்தோலிக்க வேதம் மொழிபெயர்த்துள்ளது. ஆங்கிலத்தில் Looked Like மற்றொரு மொழிபெயர்ப்பில் Cloven Tongues Like தீ நாவுகள் என்றால் அது நெருப்பல்ல என்று நாம் அறியமுடியகிறது. இந்த அடையாளத்தை கர்த்தர் காண்பிக்க காரணம், அன்று மோசேயுடன் கர்த்தர் பேசும்போது **முள்செடி** பற்றியெறிந்தது.யாத் 3:2ல் என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் அந்த **முட்செடி** அக்கினியால் ஜீவாலித்துஎரிந்தும் அது **வெந்துபோகாமல்** இருந்தது என்பதை கவனிக்க வேண்டும். அதுபோல் இங்கும் காணப்பட்டது. ஆனால் இதுவும் **உண்மையான நெருப்பல்ல.** நெருப்புநாவுகள்போல காட்சியளித்தது. இது அன்று அங்கு கூடின யூதர்களுக்கு மோசேயுடன் கர்த்தர் நெருப்பு மாதிரியான ஜீவாலைமூலமாக பேசியதை நினைவுப்படுத்தியது. அதன்மூலம் இந்த 120பேர் நம் தேவனை ஆராதிக்கும் நம் **இனத்தவர்தான்** இவர்கள். ஆகவே இவர்கள் சொல்வதை நாம் கேட்போம் என்ற உணர்வு இவர்களுக்கு உண்டாக்கவே கர்த்தர் அந்தமுதல் **பரிசுத்தஆவியானவரின்** இறக்கத்தில் அக்கினி மயமான **அடையாளத்தைக்**காட்டினார். வேதவிளக்கம் இப்படியிருக்க பெந்தேகோஸ்தே ஊழியர்கள் **பரிசுத்த ஆவியானவரின் முதல் இறக்கத்தில்** காணப்பட்ட அந்த

அடையாளம் இப்போதும்வேண்டும் என்று இப்போதுள்ள ஊழியர்கள் கேட்பது எத்தனை அறிவீனம். ஒரு பாட்டில் இந்த **இடம் அசைய உள்ளம்நிறைய இறங்கிவாருமே** என்று **சகோ.சாம்ஜெபதுரை** அவர்கள் எழுதிய பாட்டை இன்று பலர் பாடுகிறார்கள். **எதற்கு இடம் அசையவேண்டும்.** ஆராதனைநடக்கும் சபையில் **இடம் ஏன்அசையவேண்டும்** என்று யாராவது யோசித்தது உண்டா? ஒருவர் இப்படி கேட்கிறார். இவர்தான் தவறாக அந்தபாட்டை எழுதிவிட்டார். ஆனால் எல்லா பெந்தேகோஸ்தே சபையினரும் **இடம் அசையவேண்டும்** என்று நாம் ஏன் பாடவேண்டும்?. இடம் அசைக்க நாம் ஏன் ஜெபிக்கவேண்டும்?. இப்படி கேட்பதில் ஒரு அர்த்தம் வேண்டாமா? என்று யாரும் யோசிக்கவில்லை. அப்படி இடம் அசைந்ததானல் ஆராதிக்கும் கட்டிடம் சமீபத்தில் 11 மாடி கட்டிடம் இடிந்து விழுந்து பல நூறுபேர் மரித்துபோனதுபோல் சம்பவிக்குமே!.

மேலும் பாஸ்டர்.விக்டர் ராஜாமணி பரிசுத்த ஆவியானவரின் **அக்கினிக்கு** மேற்கோள் காட்டிய வசனங்களை படித்துப்பாருங்கள். 1 ராஜா 8:38-39,ஏசா 6:6-7, சகரியா 2:5, 2 ராஜா 6:17, உன்னத 8:6-7,லேவி 6:13, யாத் 3:2-4, எரே 20:7-9,2 தீமோ 1:6,ரோ 12:11 இந்த வசனங்களில் ஏதாவது ஒன்று **பரிசுத்த ஆவியானவரை** குறிக்கிறதா? யோசித்துப்பாருங்கள்!.

‘ எண்ணைக்கு **ஒப்பான ஆவியானவர்** என்று 1 சாமு 10:1, 16:1 வசனங்களை குறிப்பிட்டு எழுதியுள்ளார். இங்கு குறிப்பிட்ட இந்த இரண்டு வசனமும் **ஆவியானவரைக்**குறிக்கும் வசனம் அல்ல. இதில் **அபிஷேகம்** என்ற ஒரு வார்த்தை வந்துவிட்டதாம். உடனே அதற்கு **பரிசுத்த ஆவியானவர்** என்று பெயர் வைத்துவிட்டார்கள்.

‘ **அபிஷேகம்** என்றால் நியமிக்கப்படுவது என்று அர்த்தம். சவுலை இஸ்ரவேலுக்கு ராஜாவாக அவன்மேல் எண்ணை வார்த்து **அபிஷேகம்** பண்ணு என்றால் அவனை **ராஜாவாக நியமி** என்று கர்த்தர் கூறுகிறார் என்பதுதான் அதன் அர்த்தம். அதே 1 சாமு 16:1ல் **உன் கொம்பை தைலத்தால் நிரப்பி கொண்டுவா என்பது.** வேறு ஒருவரை ராஜாவாக நியமிக்க கர்த்தர் சாமுவேலோடு கூறும் இடம் ஆகும். **தைலம்,எண்ணை** என்பதை **பரிசுத்தாவியானவர்** என்று இவர்கள் கூறுவது இவர்களின் சொந்த வியாக்கியானமாகும். ஆலய சாமான்களை **அபிஷேகம்** செய் என்று கர்த்தர் கூறுகிறார். அப்படியானால் ஆலயசாமான்கள் **பரிசுத்தஆவியால் நிரப்பு** என்று கர்த்தர் கூறுகிறாரா?. என்ன முட்டாள்தனமான வியாக்கியானம் இது. ஆலயபணி பொருட்களை அபிஷேகம் செய்வது என்றால் அந்தபொருட்கள் **ஆலய உபயோகத்துக்காக மட்டும்** உபயோகப்படுத்தபடவேண்டும் என்றுதான் அர்த்தம். இந்த சின்ன விஷயம்கூட பெரிய ஊழியர்களான பல பெந்தேகோஸ்தே பாஸ்டர்மார்களுக்கு தெரியாமல் இருப்பது குருடன்-குருடனுக்கு வழி காட்டுவதுபோல தானும்-தவறாக புரிந்துக்கொண்டு தன் சபை மக்களையும், தவறாக புரிய வைத்து **சபை மக்களை இவர்கள் குருடர்களாக** நடத்துகிறார்கள்.

**எண்ணை** என்பது **பரிசுத்தாவிக்கு** அடையாளம் என்பதற்கு **பாஸ்டர்.விக்டர் ராஜாமணி** அவர்கள் குறிப்பிடும் வசனங்களை வாசித்துப்பாருங்கள். சங் 45:7, எபிரேயர் 1:9. **ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்** என்ற இதே வசனத்தை **எபிரேயர்** நிருபத்தை எழுதியவர். எபி 1:9ல் மேற்கோள்காட்டி எழுதியுள்ளார். இதில் பரிசுத்த ஆவியானவரை எண்ணையோடு எந்த வகையில் ஒப்பிடமுடியும்?.

யாத் 29:7, ஏசா 61:3 ஆகிய வசனங்களை குறிப்பிட்டு **தைலம்** ஆறுதல் தருகிறது என்று எழுதியுள்ளார். லூாக் 10:34, யாக் 5:14, மத் 25 **எண்ணெய்** எரிய செய்கிறது என்று குறிப்பிடுகிறார். சங் 33:5, 92:10, 1 சாமு 9:16 ஆகிய இந்த வசனங்கள் எந்த வகையில் பரிசுத்த ஆவியானவரோடு ஒப்பிடமுடியும்.

‘ **காற்று ஆவியானவரின்** முதல் இறக்கத்துக்கு அங்குள்ள யூதர்களுக்கு கர்த்தரால் காட்டப்பட்ட அடையாளம் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். ஆனால் பாஸ்டர்.விக்டர்ராஜாமணி யோபு 37:21,22, 1இராஜ 19:11, எசே 37:9, 10:14, யோ 3:8, 1 கொரி 12:11 ஆகிய இன்னும் ஏராளமான வசனங்களை சம்பந்தமே இல்லாமல் **பரிசுத்த ஆவியானவருக்கு** ஒப்பிட்டு எழுதியுள்ளார்.

# அந்நியபாஷையைப்பற்றி (இயேசு அழைக்கிறார்) தம்பி.பால்தினகருடைய விளக்கத்தைப்பாருங்கள்:

**இயேசு அழைக்கிறார்** பத்திரிக்கை 2009 **நவம்பர்** 39ம் பக்கம் தானி 9:21,22, நியா 13:2, லூாக் 1:11, லூாக் 1:26,27, லூாக் 2:9, மத் 2:13, அப் 8:26 இந்த குறிப்பிட்ட வசனங்களில் **மனோவாவின்** மனைவி, புதிய ஏற்பாட்டில் **சகரியா,மரியாள்,மேய்ப்பர்கள்,யோசேப்பு,பிலிப்பு** ஆகியவர்களுடன் **தேவ தூதர்கள்** பேசினார்கள். இப்படி தேவதூதர்கள் பேசும் **பாஷையை** நாமும் விளங்கிக் கொள்ள வேண்டுமானால் **நாம் தூதர்களின்பாஷையை** அறிந்திருக்கவேண்டும். இதை விளங்கிக் கொள்ளத்தான் **தேவன்** நமக்கு **புது தெய்வீக பாஷையை(அந்நியபாஷை)**தருகிறார்.(மாற் 16:17,1 கொரி 13:1).

இதற்கு இவர் ஒப்பிடும் வசனம் விசுவாசிக்கிறவர்கள் **நவமான பாஷைகளை** பேசுவார்கள், **நான் தூதர்பாஷைகளை பேசினாலும் அன்**புஎனக்கு இல்லாவிட்டால்..... என்ற வசனத்தை ஆதாரமாக காட்டுகிறார். இதில் **நவமான பாஷைகள்** என்றால் **தூதர்கள் பாஷையா?** பாஷைகள் பேசுவதைவிட **மிகமுக்கியமானது அன்பு** என்பதை முக்கியப்படுத்தத்தான் **பவுல் நான்** தூதர்கள் **பாஷையை பேசினாலும்** அது எனக்கு பிரயோஜனமில்லை என்று குறிப்பிடுகிறார். இந்த சின்ன விஷயத்தைக்கூட விளங்கிக்கொள்ள முடியாத இவர்களின் வேதஅறிவு குறித்து என்னசொல்ல?. மேலும் **மனோவா,சகரியா,மரியாள்,மேய்ப்பர்கள்,யோசேப்பு,பிலிப்பு** ஆகியவர்கள் எல்லாரும் **தூதர் பாஷைகளை** படித்தவர்களா? அன்று மேய்ப்பர்கள் **பரிசுத்த ஆவியானால்** நிறைந்து **தூதர் பாஷையை** கற்றக்கொண்டார்களா? என்ன அறியாமை இது? தூதர்கள் இவர்களுடன் பேசும்போது **எபிரேய** பாஷையிலும், **அரமேய** பாஷையிலும்தான் பேசியிருக்க வேண்டும். காரணம் தூதர்களுக்கு **எல்லா பாஷைகளும்** தெரியுமே!. பழைய ஏற்பாட்டில் **தானியேலோடும்,** புதிய ஏற்பாட்டில் **கொர்நெல்லிசோடும்** தூதர்கள் நேரிடையாக வந்து பேசினார்கள். **அவரவர்களின் பாஷையில் தானே** தூதர்கள் செய்தியை அறிவித்தார்கள். தூதர்கள் தங்கள் பாஷையில் சொல்லும் தேவசெய்தியை புரிந்துக்கொள்ளவதற்காகவே கர்த்தர் இவர்களுக்கும், நமக்கும் **புது தெய்வீகபாஷையை நமக்கு தருகிறார்** என்று பால்தினகரன் கூறுகிறார். இவர்கள் ஏன் இப்படி **தவறான,பொய்யான செய்தி களை** தவறான வியாக்கியானங்களை மக்களுக்கு சொல்லி தூதர்கள் பாஷையை பெற்றுக்கொள்ள மக்களை ஏங்க வைக்கிறார்கள்?. இது கொடுமையானதாகும்.

# ஏஞ்சல் டிவியின் மூவரணி பாஷை:

சகோ.**மோகன் சி.லாசரஸ், சாது செல்வராஜ், வின்சென்ட் செல்வகுமார்** ஆகியவர்களின் கச்சேரியை நீங்கள் அடிக்கடி ஏஞ்சல் டிவியில் கண்டிருக்கலாம். மார்வாடிகள் உட்காரும் மெத்தை, தலையணி ஆகியவைகள் சகிதம் உட்கார்ந்துக்கொண்டு **பொய்யான** தரிசனங்களை குறித்து பேசி முடித்தபின், சரி இப்போது உலக உயிற்மீட்சிக்காக ஜெபிப்போம் என்று மூவரும் ஜெபிக்கிறார்கள்.

மோகன் சி.லாசரஸ் ஜெபிக்கும்போது ஆண்டவரே, எங்கள் தேசத்தின்மீது இறங்கும் என்று கூறிவிட்டு லா பாபா பா ஷக்ராபாபா ஷவா என்று நடுநடுவே உளறிவிட்டு இந்தியாவின் ஒவ்வொரு தலைவரையும் சந்தியும் ஆண்டவரே, என்று மறுபடியும் அவர் தனி ஜெபத்தை தொடர்கிறார். மற்ற இருவரும் இரண்டு வார்த்தை. ஜெபம்செய்துவிட்டு நடுநடுவில் ஷக்கரபலா,சங்கரபலா இது அந்நியபாஷையாம்!. ஜெபத்தின் நடுவே இது எதற்கு? சகோ.மோகன் சி.லாசரஸ் கூறுகிறார், ஒருநாள் தானாக ஜெபிக்கவேமுடியாத நிலையில் தனிமையில் சென்றபோது தனக்கு பதிலாக ஆவியானவர் **அந்நியபாஷையில்** ஜெபித்தார் என்று சற்றுமுன் உள்ள சம்பாஷனையில் கூறினார். ஆனால் இப்போது சோர்வும் இல்லை, நல்ல பெலத்தோடு ஜெபிக்கிறார்கள். அப்படியிருக்க நடுநடுவே லா பாபா ஷக்ரவா என்று ஏன் உளரவேண்டும். ஜெபத்தின் இடையே **அந்நியபாஷை** பேசி ஆவியானவர் குறிக்கிடுகிறாரா? நடுநடுவே வரும் இந்த உளரலுக்கு என்னதான் அர்த்தம்? அடுத்த டிவி சம்பாஷனையில் இதை விளக்கினால் மக்களுக்கு பிரயோஜனமாக இருக்குமே?.

‘ பவுல் கொரிந்து சபைக்கு கடிதம்(நிருபம்) எழுதும்போது சபையில் நீங்கள் **அந்நியபாஷையில்** பேசிக்கொண்டிருக்கும்போது **அவிசுவாசி** ஒருவன் உள்ளே நுழைந்தால் உங்களை **பைத்தியக்காரன்** என்பானே என்று கண்டித்து **பேசிய வசனங்களை இந்த மூன்று பேரும்**(மோகன் சி.லாசரஸ், வின்சென்ட் செல்வகுமார், சாதுசெல்வராஜ்) படிக்கவில்லையோ? என்ன கூத்து இது?. சபைக்கே பவுல் அப்படி கட்டளையிட்டிருக்க இந்த மூவரணி பொய் தரிசனகாரர்கள் தமிழ்நாடு முதல், **ஏஞ்சல் டிவி** எங்கெங்கு காணப்படுகிறதோ அங்கெல்லாம் எத்தனை **புறமதத்தினர்** எத்தனை **RSS இயக்கத்தினர்,** அந்த காட்சியை பார்த்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் எல்லாம் மோகன் சி.லாசரஸ் ஆவியானவரின் **அந்நியபாஷை** என்ற பெயரில் உளருவதைபார்த்து என்ன சொல்வார்கள்?. இப்படிப்பட்ட உளரல்களை வெளிஉலகமக்கள் காணும் வகையில் பேசலாமா? நிச்சயமாக இவர்களுக்கு நடுநடுவே கொஞ்சம் மூளையில் ஏதோ பாதிப்பு உண்டாகிறது அல்லது படித்த **கிறிஸ்தவ பைத்தியக் காரர்கள்** என்றெல்லவா கூறுவார்கள். இந்த நிகழ்ச்சி டிவியில் வந்த அன்று நான் தங்கியிருந்த வீட்டில் உயர்நிலை பள்ளி பிள்ளைகள் யாவரும் அந்த நிகழ்ச்சியை பார்த்து கேலியாக சொல்லிசொல்லி சிரித்தார்களே? சிறுவர்களில் சிலர் இவர்கள் உளறிய மாதிரியே **லா பாபா** என்று தாங்களும் சொல்லி பார்த்துக் கொண்டார்கள். அவர்களைப்போல் நானும் பேசுவேன் என்று அந்த பிள்ளைகள் அன்று கூறி சிரித்தது எத்தனை வேதனை!பயபக்தியுள்ள கிறிஸ்தகுடும்பத்தின் அந்த வாலிபபிள்ளைகளும், சிறுபிள்ளைகளும் கூட இவர்களின் உளரல்களை பார்த்து கிண்டல் அடித்தார்களே!.சிரித்தார்களே!, ஒரு இந்துமத குடும்பத்தினர் அல்லது முகமதிய மதமக்கள் இவர்கள் உளரலை டிவியில் பார்த்து என்ன என்று நினைப்பார்கள்?. சற்று யோசியுங்கள். சபையின் நாலு சுவர்களின்உள்ளே அல்லது **ஏசி** அறைக்குள்ளே பேசியிருந்தால்,உளரியிருந்தால் அது வேறு விஷயம். ஆனால் **மைக்** வைத்து, **ஒலிபெருக்கி** வைத்து அல்லது **TV திரையில்** உலக மக்கள்காண இப்படி **உளறி ஆவியானவரை** அவமானப்படுத்தலாமா?.

‘ பாஸ்டர்.**விக்டர் ராஜாமணி**, பாஸ்டர்.**மோகன்**, பாஸ்டர்.**ஆல்வின் தாமஸ், ஜெப்ரி, ஆலன்பால்,சாம்ஜெபதுரை,சேனாபதி** இன்னும் திரளான ஊழியர்களும் **ஏஞ்சல் டிவி** மூவரணியினரும் பரிசுத்தஆவியானவரை **அந்நியபாஷை** என்ற பெயரில் கொத்து புரோட்டாவை கொத்துவதைப்போல் கொத்தி கொத்தி இப்படியா அவமானப்படுத்துவது!.

**புத்தியுள்ளவன் சிந்திக்கக்கடவன் -** ஆவியானவர் இப்படிப்பட்ட ஊழியர்களாலும், பெந்தேகோஸ்தே பாஸ்டர்களாலும் உலக மக்கள் முன் துாஷிக்கப்படுகிறார்!.

**தேவன் தம்மை பரியாசம் பண்ண ஒட்டார் என்று வேதம் கூறுகிறது.**

**இவர்கள் எல்லாரின் இப்படிப்பட்ட கூத்துக்கு ஒரு முடிவு நிச்சயம் உண்டு!.**

‘ 5 வகுப்பு வரை மட்டும் படித்த ஒருவர் பெந்தேகோஸ்தே **சபை பாஸ்டராக இருக்கிறார். அவர்** தன் ஆராதனையில் ஜெப வேளையில் Yes Jesus, Yes Jesus, **எஸ் ஜீசஸ்,எஸ் ஜீசஸ்** என்று கூறி பிறகு தீர்க்கதரிசனம் கூறுவார். இதற்கு அர்த்தம் ஆண்டவர் என்னமோ அவரின் காது வழியே பேசுகிறராம். அதற்கு இவர் பதில் கூறும் வண்ணம் ஆமாம் கேட்கிறேன் சொல்லும் என்பதற்குரிய பதிலாக Yes Jesus,எஸ் ஜீசஸ் என்று பதில் கூறுகிறதை சபைமக்கள் பார்க்கவேண்டும் என்பதற்காகவும், தனக்கும் ஆங்கிலம் தெரியும் என்பதை சபை மக்களுக்கு அறிவிக்கவுமே இந்த போலித்தனமான ஏற்பாடு? சின்ன பையன் சாமுவேல் கர்த்தரின் சத்தம் கேட்டபோது அதை ஆசாரியனான **ஏலிதான்** பேசுகிறார் என்று பிழையாக அவன் நினைத்து, தாத்தா என்னை கூப்பிட்டீர்களா? என்றான். **ஏலி** உடனே விளங்கிக்கொண்டார். **கர்த்தர்** அந்த **பையனுடன்** பேச விரும்புகிறார் என்பதை அறிந்த ஏலி மகனே, அடுத்தமுறை பேசும் சத்தம் நீ கேட்டால், **கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்** என்று பதில் சொல் என்று சொல்லிக்கொடுத்தான். அடுத்த முறை கர்த்தர் மறுபடியும் சின்னபையன் சாமுவேலோடு பேசினார். இவனும் **ஏலி** சொல்லி கொடுத்த மாதிரி பதில் கொடுத்தான். உடனே **கர்த்தர்** அவனோடு சொல்ல வேண்டியதை சொன்னார். இவனும் அதைகேட்டு அதன்படி செய்தான் என்று வேதத்தில் வாசிக்கிறோம். இந்த இடத்தில் சாமுவேல் கர்த்தரிடம் பதில்சொல்லும்போது துாதர்கள்பாஷையோ,**பரலோகபாஷையிலோ** பேசவில்லை!. அவனுடைய தாய்மொழியான **எபிரேயபாஷையில்**தான் பேசினான்.ஆசாரியன் **ஏலியும் தாய்பாஷை**

**யில்** பதில் கொடுக்கத்தான் சாமுவேலுக்கு ஆலோசனை கொடுத்தான். பரலோக தேவனும் பையனை குழப்ப **பரலோக பாஷையிலோ**, தூதர்கள் பாஷையிலோ பேசவில்லை!.என்பதை கவனியுங்கள். நம் தேவன் முட்டாள்அல்ல. அவரவர்களுக்கு **என்ன பாஷை** தெரியுமோ,அந்தந்த பாஷையில்தான் அந்த ஆரம்பகாலத்திலிருந்து இன்றுவரை பேசுகிறார்.

அதேபோல **அவரவர்களின் பாஷையில்** ஜெபிப்பதைத் தான் கர்த்தர் விரும்புகிறார். சோர்வு ஏற்பட்டால் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொண்டு பேசலாமே! உங்கள் பிரச்சனையை கர்த்தரிடம் கூற ஆவியானவர் உங்கள் வாயை ஏன் உபயோகிக்கவேண்டும்?

‘ **பால்தினகரன்** கூறுவதைப்போல் தூதர்கள் பேசுவதை கேட்க நமக்கு தெய்வீக பாஷையை கர்த்தர் நமக்கு தரமாட்டார். நமக்கு தெரிந்த பாஷையிலேயேதான் பேசுவார். இது தனக்கு **பரலோக** பாஷை தெரியும், **தூதர்**பாஷையும் தெரியும், **தெய்வீக** பாஷையும் தெரியும் என்று பால்தினகரன் பொது மக்களுக்குமுன் தன்னை பெருமைப்படுத்திக்கொள்ள செய்யும் தந்திரம் ஆகும்.

நான் பிரசங்கிக்கும் சபைகளில் ஆலோசனை நேரத்தில் என்னிடம் பேசவும்,ஜெபிக்கவும் ஏராளமானவர்கள் வருவார்கள். அவர்களுக்கு ஆலோசனைக்கூற பைபிள் எடுத்து வாசியுங்கள் என்பேன். வேத புத்தகம் கொண்டுவரவில்லை சிலர் என்பார்கள். சரி என்னிடத்தில் உள்ள பைபிளை கொடுக்கிறேன். உங்களுக்கு எந்த பாஷையில் வேத வசனத்தை சரளமாக எளிதாக வாசிக்க முடியும் என்று கேட்பேன். மலையாளம்,ஆங்கிலம்,ஹிந்தியா, தமிழா? என்று கேட்பேன் பிறந்து வளர்ந்தது திருநெல்வேலிதான். ஆனால் படித்தது வடஇந்தியாவில் ஆகவே **ஹிந்தி** பைபிள் வாசிப்பேன். ஆங்கிலம் வாசிப்பேன். ஆங்கிலத்தைவிட **ஹிந்தி** எனக்கு நன்றாக வாசிக்க இயலும் என்பார்கள். உடனே ஹிந்தி பைபிளை எடுத்து கொடுத்து நான் கூறும் வசனத்தை எடுத்து வாசியுங்கள் என்றுகூறி வசனத்தின்மூலம் அவர்களுக்கு ஆலோசனை கொடுப்பேன்.

சாதாரண மனிதர்களாகிய நாமே நமக்கு எது வாசிக்க வசதியோ! அந்த பாஷையில் வேதத்தை வாசிக்கிறோம்!. ஜெபிக்கிறோம்!.

**ஞானத்தை** தருகிற தேவாதிதேவன் நமக்கு விளங்காத **வேற்று பாஷையை** கொண்டு நம்மிடம் பேசுவாரா? அல்லது நம்மை வேற்று பாஷையில் பேச வைப்பாரா?. மறுபடியும் சொல்கிறேன். நம் கர்த்தர் முட்டாள்அல்ல!. அதி ஞானசொரூபி!.

நான் மேலே குறிப்பிட்ட 5ம் வகுப்புவரை படித்த அந்த பாஸ்டர் கூறுகிறார். நான் ஜெபிக்கும்போது திடீர் என்று READ என்று ஒரு சத்தம் கேட்டேன். அதாவது **வாசி** என்பதற்கு பதிலாக ஆங்கிலத்தில் READ என்று ஆண்டவர் கூறுவாராம். உடனே வேதத்தை எடுத்து வாசிப்பேன் என்கிறார். அதுபோலவே அடிக்கடி கர்த்தர் வசனத்தின்மூலம் என்னோடு பேசி இதை சபை மக்களுக்கு சொல் என்பார்! இப்படி அந்த பாஸ்டர் தன் பிரசங்கத்தில் கூறுவார். நம் தேவன் தமிழ் தெரியாத வெள்ளைக்காரரா? இந்த பாஸ்டருக்கு ஆங்கிலம் தெரியாது என்று ஆண்டவருக்கு தெரியாதா? எதற்கு Read என்று கூறவேண்டும்?. என்ன ஏமாற்றுதனம்!. இது!.

நிறைய **மேடை தீர்க்கதரிசிகள்** ஜெபிக்கும்போது மேடையிலேயே Yes Jesus, Yes Jesus என்று உச்சரிப்பதை கேட்கலாம். இது சகோ.**DGS.தினகரன்** தன் ஊழியத்தில் நடப்பித்த அன்றைய நாடகமாகும். மக்களை நம்பவைக்க அன்று அவர் கையாண்ட தந்திர முறையாகும். மேடையில் ஜெபித்துக் கொண்டிருக்கும்போதே ஆண்டவர் என்னமோ இவரிடம் இரகசியமாக சொல்லுவதை போலவும், அதற்கு இவர் தலையாட்டி Yes Father, Yes Jesus என்று பதில் கூறுவதைப்போலவும் இவர் காண்பிக்கும் அந்த செய்கை மேடை நாடகம் ஆகும்.

அதை இப்போதுள்ள டூப்பளிக்கேட் குட்டி தினகரன்மார்களில் பலர் **சகோ.ஜஸ்டின் ஆபிரகாம்**போல, **சகோ.மோகன் சி.லாசரஸ்**போல,**சகோ.ஆலன்பால்**போல இன்னும் பெரும்பாலான தினகரன்கள் நாட்டில் பெருகிப்போனார்கள். இவர்களும் அதே மேடை நாடகத்தை அரங்கேற்றுகிறார்கள். கிறிஸ்தவ ஜனங்களும் அதை உண்மை என்று நம்பிவிடுகின்றனர். என்ன ஏமாற்றுதனம். ஜாக்கிறதை!.

# கழுதை பேசியது:

இப்படிப்பட்ட ஊழியர்களுக்கு பாஸ்டர்மார்களுக்கு, அற்புத ஊழியர்களுக்கு ஜெபத்தில் பெயர் அழைப்பவர்களுக்கு மைக் மூலமாக **அந்நியபாஷை பேசுபவர்களுக்கு** நல்ல உதாரணம் வேதத்தில் உண்டு. அது பிலோயாமின் **கழுதை** பேசிய சம்பவம். கர்த்தர் **கழுதையை** பேசவைத்தார். பிலேயாமை உணர்த்த ஆண்டவர் செய்த ஏற்பாடு அது ஆகும். கழுதைக்கு ஒரு மிருக பாஷை உண்டு. நாய்கள் ஒரு மாதிரி சத்தத்தில் ஊளையிட்டால் **பெண் நாயை** தேடி **10 ஆண் நாய்கள்** தானாக ஓடிவரும். அந்த இரகசிய **பாஷை** நாய்களுக்குமட்டும்தான் தெரியும். **அந்நியபாஷையின்** வியாக்கியான வரம் பெற்ற **பெந்தேகோஸ்தே பாஸ்டர்களுக்குக்கூட** அந்த **நாய் சத்தத்துக்கு** அர்த்தம் கண்டுபிடிக்க முடியாது. அதுபோல **கழுதையோடு** மற்றொரு **கழுதை**பேசிக்கொள்ளும், மிருகத்துடன் மிருகம் பேசிக்கொள்ளும் ஆனால் கர்த்தர் ஒரு கழுதையை மனிதபாஷையில் பேசவைத்து ஒரு தீர்க்கதரிசியை உணர்த்தினார். பணத்துக்காக **தீர்க்கதரிசனம்** சொல்லும் ஒரு தீர்க்கதரிசியுடன்பேச அன்று **கழுதை பாஷையில்** பேசும்படி கர்த்தர் அந்த கழுதைக்கு கட்டளையிடவில்லையே!. **தூதர்**பாஷையையும் அந்த இடத்தில் உபயோகிக்கவில்லையே!. **அங்கு பரலோக பாஷையையும்** உபயோகிக்கவில்லையே!. அந்த தீர்க்கதரிசி வழமையாக பேசும் அந்த **பிலேயாமின்** தாய் பாஷையிலே கழுதையை பேசவைத்தது. அவன் தவறை கர்த்தர் உணர வைத்தார். இதேபோல் இன்னொரு முறை **கழுதையை** கொண்டு இன்றைய **பெந்தேகோஸ்தே பாஸ்டர்,ஏஞ்சல் டிவி மூவரணி** போன்ற ஊழியர்களிடம் கர்த்தர் பேசி எச்சரித்தால்தான் இவர்கள் பாஷை என்ற பெயரில் உளருவதை நிறுத்துவார்களோ? கர்த்தர்தான் இவர்களை சந்திக்கவேண்டும்!. சாதராண **கழுதைக்கு** இருக்கும் உணர்வு,ஞானம்கூட நம் அற்புத ஊழியர்களுக்கு **ஏஞ்சல் டிவி மூவரணிக்கு** இல்லையே? கழுதை மனிதர்களிடம் பேசும்போது மனுஷபாஷையில் தான் பேசவேண்டும் என்றும் **கழுதை பாஷையில்** பேசக்கூடாது என்றும் கழுதைக்கு தெரியும். அப்படியிருக்க **பால்தினகரனோ!** மனிதருக்கு கர்த்தர் தெய்வீக பாஷையை கர்த்தர் கற்றுத்தருவார், அப்போதுதான் **தூதர்கள்** உங்களிடம் பேசும்போது அவர்கள் சொல்வதை நீங்கள் புரிந்துக்கொள்ளமுடியும் என்கிறார். இது சின்னபிள்ளைத்தனமாக இல்லை!.

BYM R**.ஸ்டான்லி** அவர்கள் நல்ல வேத பண்டிதர்.அவரைக்குறித்து சிலர் எனக்கு எழுதும்போது அவர் அந்நியபாஷை பேசுவதாக எனக்கு சுட்டிக்காட்டினார்கள். அந்த ஒரு விஷயத்தில் எனக்கும் **சகோ.ஸ்டான்லி** அவர்களுக்கும் அபிப்ராய வித்தியாசம் உண்டு. மரித்துப்போன மதுரை ஊழியர் ஒருவரும் சகோ.ஸ்டான்லி அவர்கள் கூறியதைபோலவே தன் சாட்சியில் தான் படிக்கும் காலத்தில் பரீட்சை நேரத்தில் கேள்விதாள் கையில் வந்தவுடன் அதை படித்து பார்த்தபோது ஒன்றும் விளங்கவில்லை. எப்படி பரீட்சை எழுதுவேன் என்று பிரம்மித்தேன். கொஞ்சநேரம் கண்களை மூடி **அந்நியபாஷையில்** பேசினேன். உடனே ஒரு புத்துணர்வு வந்தது. உடனே **பரீட்சை** நன்றாக எழுதினேன் என்றார்!. இன்னொருவர் தன் புத்தகத்தில் தன்னைப்பற்றி சாட்சி எழுதும்போது தான் பள்ளியில் படிக்கும்போது புத்தகமே படிக்க நேரம் இல்லாமல் வாலிபர்களுக்கிடையே ஊழியம் செய்ய அலைந்தேன். பரீட்சை நேரத்தில் **கேள்விதாள்** என் கையில் வந்தபோது ஒன்றும் தெரியாமல் விழித்தேன். உடனே ஜெபித்தேன். 10நிமிடம் **அந்நியபாஷையில்** பேசினேன். உடனே அந்த பரீட்சை அறையில் ஆவியானவரே புத்தகத்தை என்முன் கொண்டுவந்து அதில் பக்கங்களையும் பிரித்து காட்டி அன்றைய பரீட்சையின் கேள்விகளுக்கான பதிலை அந்த புத்தகம்மூலமாக காட்டினார். அப்படியே காப்பியடித்து பதில்எழுதி **நல்ல மார்க்கோடு பாஸ்** செய்துவிட்டேன் Praise the Lord என்று சாட்சி கூறி பெருமைப்பட்டுக்கொண்டார்.

நம் தேவன் திருட்டு தெய்வமா? பரீட்சையில் பிட் அடித்தாலோ, திருட்டுதனமாக புத்தகத்தை பார்த்து எழுதினாலோ உடனே பரீட்சை கண்காணிப்பாளர் பிடித்து 3 வருடம் பரீட்சை எழுதாதபடி டிபார் செய்து அந்த மாணவனுக்கு தண்டனை அளிப்பார். இதுதான் அன்றும் இன்றும் கல்விதுறையின் சட்டம். இவர்களின் **அந்நியபாஷையை** பேசவைத்த ஆவியானவரே **கள்ளத்தனமாக காப்பிடியத்து** இவர்களை பரீட்சை எழுத சொல்வாரானால் என்ன நியாயம். **அந்நியபாஷையோடு புத்தகத்தையும்**

**திறந்து காண்பித்து காப்பியடிக்க புத்தகத்தை பரீட்சை அறைக்கு கொண்டுவந்த** இவர்களின் ஆவியானவருக்கு யார் தண்டனை கொடுப்பார்கள்? என்ன தண்டனை கொடுப்பார்கள். அந்நியபாஷையின் மகிமையை பார்த்தீர்களா?.

இவர்களில் சிலர் நல்ல வேத அறிவு பெற்றவர்களாக இருந்தாலும் இவர்கள் சார்ந்த பெந்தேகோஸ்தே சபையின் உபதேசத்தில் **அந்நியபாஷை** பேசி பழகிப்போனாதால் இப்போது மிஷனரி ஊழியம் செய்தாலும் விட்டகுறை-தொட்டகுறை என்பார்களே அதுபோல அந்த பழைய பழக்கமும் அதில் முன்பு அனுபவித்த போலிஇன்பமும் இன்னும் இவர்களைவிட்டு போகவில்லை. இந்த பலவீனம் இவர்களோடு நாலு சுவர்களுக்குள் அடங்கிபோவது நல்லது. அதை உபதேசமாக்கி எழுத்திலோ, பிரசங்கத்திலோ இவர்கள் அறிவித்தால், தெளிவுபெற்ற நாம் இவர்களின் பெயரை குறிப்பிட்டு இவர்கள் பேசிய பாஷை போலி என்பதை கூற நமக்கும் கர்த்தர் அதிகாரம் கொடுத்திருக்கிறார்!. பயப்படவேண்டாம்!.

எப்படியோ ஒரு சிறு கூட்டமாகிலும் இந்த கட்டுரையால் தெளிவுபெற்றால் **ஆவியானவர்** மிகவும் சந்தோஷப்படுவார். இனியாவது இப்படிப்பட்ட ஊழிய பெருமகனார்கள், தாங்களும் குழம்பி மற்றவர்களையும் குழப்பாதபடி,சபை மக்களை பையத்தியக்காரர்களாக்காதபடி உதவி செய்வார்களாக என்று கேட்டுக்கொள்கிறேன். ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# நான் பார்த்தது:

## என் வாழ்க்கையில் ஒரு மணி 15 நிமிடங்கள் தொடர்ந்து ஒரே இடத்தில் அமர்ந்து கவனித்த டிவி நிகழ்ச்சி.

2013 ஜீன் மாதம் 22ம் தேதி ஞாயிறு மதியம் 12:15 முதல் - மதியம் 1.30 மணி நிமிடம் வரை டிவியில் **சால்வேஷன்** சேனலில் சகோ.**ஆர்.ஸ்டான்லி** BYM ஸ்தாபகர்(வேலுர்)அவர்கள் 2008ல் நாகர்கோவிலில் **சிஎஸ்ஐ ஹோம் சர்ச்சில்** மிஷனரி கன்வென்ஷன் கூட்டங்களில் அளித்த அற்புதமான செய்தியை கண்டேன். சகோ.**ஜட்சன் ஆபிரகாம்** போன்றவர்களின் ஆத்துமாவுக்கு பிரயோஜனமில்லாத பிரசங்க நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்த அதே **சிஎஸ்ஐ ஹோம்** சர்ச் சபையினர் சகோ.**ஆர்.ஸ்டான்லி** போன்ற **பைபிள் டீச்சர்களின்** பிரசங்க ஏற்பாடுகளையும் செய்ததை ஹோம்சர்ச் சிஎஸ்ஐ **ஆயர்கள்** கமிட்டியை **பொருப்பாளர்களையும்** சபை விசுவாசிகளையும் பாராட்டுகிறேன்.

அந்த செய்திகளை வீடியோ மூலம் பதிவு செய்து பல்லாயிரக்கணக்கான மக்களும் பிரயோஜனம் அடைய செய்த ஆர்.ஸ்டான்லி குழுவினரையும் பாராட்டுகிறேன்.

குறிப்பிட்ட அந்த செய்தி இன்றைய எல்லா சபையினருக்கும் மிகவும் பிரயோஜனமுள்ளதாக இருக்கும் என்பதற்காக அந்த குறிப்பிட்ட செய்தியையும் அவருடைய மற்ற பைபிள் வேதபாட செய்திகளின் DVDகளையும் பார்த்து,கேட்டு பயன்பெற ஜாமக்காரன் வாசர்களை கேட்டுக்கொள்கிறேன்.

சகோ.ஆர்.ஸ்டான்லி(BYM ஸ்தாபகர்) அவர்களின் செய்திகளை பெற கீழ்காணும் விலாசத்தில் தொடர்புக்கொள்ளலாம்.

(DVD- தமிழ்-ஆங்கிலம் பாஷைகளில் கிடைக்குமிடம்).

Bro. R.Stanley
13,Church Colony
Vellore - 632 006.
E-mail: stanleyonbible@hotmail.com
www.stanleyonbible.com

Blessing Literature Centre
21/11, West Coovam Road
Chintharipet. Chennai - 600 002.
Ph.0091-44-28450411.
bic@bymonline.org.



# ஆலோசனை நேர அனுபவங்கள்

1964ம் வருடம் **நான் மனம்திரும்பி இரட்சிக்கப்பட்ட அனுபவத்தை** பெற்றேன்.

அதே வருடத்தில் என் இரட்சிப்புக்கு நேராக என்னை வழி நடத்தியவர்கள் தாங்கள் பிரசங்கிக்கும் கூட்டங்களில் என் சாட்சியை பகிர்ந்துக்கொள்ள என்னை அவர்களுடன் அடிக்கடி அழைத்து சென்றார்கள். இரண்டு மாதங்கள் கடந்த உடனே VBS பயிற்சி எனக்கு அளிக்கப்பட்டு VBS டைரக்டராக சிறுபிள்ளைகள் மத்தியில் ஊழியம் செய்ய வாய்ப்பு கிடைத்தது. VBSக்காக நான் தங்கும் ஊர்களில் ஞாயிறு ஆராதனையில் பிரசங்கிக்க சபை ஆயர்கள் என்னை கேட்டுக் கொண்டார்கள். சபையில் பிரசங்கிக்கும் பயிற்சி அப்போதுதான் எனக்கு தானாக கிடைத்தது. அப்போது **பங்காரப்பேட்டை** என்ற ஊரில் SIBC வேதாகம கல்லூரியில் குறுகிய கால வேதாகம படிப்பை முடித்தேன்.

1965ம் வருடம் மே மாதம் என் வாழ்க்கையில் **முதல் கன்வென்ஷனில்** பிரசங்கியராக பிரசங்கிக்கும் வாய்ப்பு கிடைத்தது. நான்கு நாட்கள் தொடர்ந்து பிரசங்கிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. பல ஆயர்கள் அப்போதைய கன்வென்ஷனில் என் பிரசங்கத்தை கேட்க வந்தனர். என் பிரசங்கத்தை கேட்ட ஆயர்கள் தங்கள் சபைகளுக்கு கன்வென்ஷனில் பேச தேதிகளை குறிப்பிட்டு ஒப்பந்தம் செய்து கொண்டனர். அந்த ஆரம்ப காலத்திலேயே ஒரு வருடத்துக்கான தேதிகளை கன்வென்ஷனுக்காக பல ஊர்களில் உள்ள சபைகளுக்கு கொடுத்து முடித்துவிடுவேன். என் **டாக்டர் தொழிலோடு** கன்வென்ஷனில் பேசும் ஊழியத்தையும் செய்தேன்.

1969ல் FMPB முதல் மிஷனரியாக சென்று வந்த அனுபவமும், அந்த மிஷனரி பாரமும் தொடர்ந்து எனக்குள் புகைந்து கொண்டேயிருந்ததால் மாதத்தில் ஒரு வாரம் ஆதிவாசிகள் வாழும் காடுகளை தேடி சென்று அங்குள்ள ஆதிவாசிகளுக்கு இலவச வைத்தியத்தியமும்,சுவிசேஷமும் மாதாமாதம் குழுவாக சென்று அந்த ஊழியத்தையும் செய்தேன். **இன்றைய நாள்வரை** அந்த மலை ஊழியத்தை நிறுத்தாமல் மாதமாதம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறேன். மாதத்துக்கு ஒரு **மாநிலமாக** தெரிந்தெடுத்து ஒவ்வொரு மாதமும் ஆதிவாசிகளிடையே சுவிசேஷம் அறிவிக்கும் பணியை தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறேன்.

## ஆலோசனை நேரம்:(Counselling Time)

நான் கன்வென்ஷனில் பிரசங்கிக்கும் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு சபையிலும் உள்ள குடும்பங்களில் விதவிதமான பிரச்சனைகள், வெளியில் மற்றவர்களிடம் கூறமுடியாதஅளவு இரகசிய பிரச்சனைகளும், பலருடைய வாழ்க்கையில் போராட்டங்களும் நிறைந்திருந்ததை, ஜெபத்துக்காக பலர் எனக்கு எழுதும் கடிதங்கள்மூலம் அவைகளை அறியமுடிந்தது. பிள்ளைகளைப்பற்றிய பிரச்சனை, வளர்ந்த **வாலிப** பிள்ளைகளின் **காதல்** பிரச்சனை, திருமணமானவர்களும், மனைவி பிள்ளைகளுடன் வாழும்போதே வேறு பெண்களின் காதல்வலையில் விழுந்து எழுந்திருக்க வழி தெரியாமல் தவிப்பது, சிலருடைய வேலைஇடங்களில் மேல்அதிகாரிகள் தங்களைவெறுப்பது,சிலருக்கு தொழிலில் முன்னேற விடாமல் தடைசெய்யும் அப்படிப்பட்ட நபர்களை எப்படி சமாளிப்பது என்பதைப்பற்றியும், வீட்டுக்குள்ளேயே உள்ள உறவினர்களில் உண்டாகும் பிரச்சனை, கூடபிறந்தவர்களே ஒருவருக்கொருவர் வெறுப்பது, **சொத்துப்**பிரச்சனை, **திருமண** பிரச்சனை,தங்கள் சரீரத்திலுள்ள குறைப்பாடுகளை வெளியே கூற கூச்சப்பட்டு திருமண வாழ்க்கையில் விரத்திக்கொண்டு **தற்கொலைவரை** சென்று திரும்பியவர்கள், இப்படி விதவிதமான பிரச்சனைகளைக்குறித்து இவர்கள் ஜெபிப்பதற்காக இப்படிப்பட்டவர்கள் எனக்கு கடிதம் எழுதுவார்கள். ஆனால் இவர்களின் எல்லா பிரச்சனைகளுக்கும் நான் கடிதம் மூலம் விரிவாக **ஆலோசனையோ**,விளக்கமோ கொடுக்கமுடியாது. **கணவன்-மனைவி** பிரச்சனையானால், 2பேரையும், தனித்தனியாக சந்தித்து பிறகு இருவரையும் ஒன்றாக அமரவைத்து முதல்அமர்வு 1st sitting, இரண்டாம் அமர்வு 2nd sitting என்று குறைந்தது இரண்டு முறையாவது சந்தித்து பேசி ஆலோசனை கொடுத்தால் அவர்கள் சமாதானமாக வாழ்க்கை வாழ அது உதவியாக இருக்கும்.

ஆகவே கடந்த 37 வருடங்களாக கன்வென்ஷனில் பிரசங்கிக்கபோகும் இடங்களில் **பகல் நேரத்தில்** வேதபாட(BibleStudy)கூட்டத்தை நடத்தாமல், **ஆலோசனை நேரம்** என்ற பெயரில் மேலே குறிப்பிட்ட பல பிரச்சனைகளுக்கும்,குடும்ப பிரச்சனைகளுக்கும் தனிநபர் பிரச்சனைகளுக்கும் வேதவசனஅடிப்படையில் ஆலோசனைகள் கொடுக்கிறேன். அப்படிப்பட்ட அந்த ஆலோசனை நேர சந்திப்பில் **பிரிந்த குடும்பங்கள்** பல ஒன்று சேர்ந்துள்ளன. படிப்பில் நாட்டம் இல்லாத பிள்ளைகளுக்கு, படிக்காமல்போனால் என்ன நடக்கும் என்று அந்த பிள்ளைகளுக்கு ஆலோசனைக்கூறி அவர்களின் பிற்கால வாழ்க்கையை அவர்களுக்கு சுட்டிகாட்டி படிப்பில் அவர்களுக்கு நாட்டம்உண்டாகசெய்ய **ஆலோசனைநேரம்** மிகவும் பயன்படுகிறது. அந்த **ஆலோசனை நேரத்தை** வெளிநாடுகளுக்கு ஊழியத்துக்குசென்றாலும்,அங்கும் நான் அதற்கு நேரம் ஒதுக்குகிறேன். அந்த குறிப்பிட்ட ஆலோசனை நேரத்தில் சபை மக்களுக்கு மனதில் உண்டாகும் வேதவசன சந்தேகங்களுக்கும், வசனஆதாரத்துடன் பதில் அளித்து, அவர்கள் வசனத்தில் தெளிவுபெற அந்த நேரம் மிகவும் உதவியாக இருக்கிறது. இப்போதெல்லாம் எங்குபோனாலும் **அந்நியபாஷை, ஜெபத்தில் கீழேவிழும் கலாச்சாரம், பரிசுத்தாவியானவரைப்பற்றி தெளிவில்லாதவர்களுக்கு சரியான வசன விவரங்கள் கூறி சரியான விளக்கங்கள்** அறிவிக்கின்றேன். இதைப்போன்ற விஷயங்கள்தான் அந்த நேரங்களில் மிக அதிகமாக என்னிடம் கேட்கப்படுகிறது. இதன்மூலம் அவர்களுக்கு வேதவசனத்தை வாசித்துக் காட்டி விளக்கியதால் தவறான உபதேசத்திலிருந்து தெளிவுபெற்ற பெந்தேகோஸ்தே பாஸ்டர்கள், விசுவாசிகள் ஏராளம். அந்த குறிப்பிட்ட ஆலோசனை நேரத்தில்தான் நான் ஜெபிக்க வருபவர்களின் தலையில் கைவைத்து ஜெபிக்கும் வழக்கத்தைக் கடைப்பிடிக்கிறேன். அதன்மூலம் **சுகம்** பெற்றவர், **பிசாசு** பிடியிலிருந்து விடுபட்டவர்கள் மிகவும் அதிகம். கர்த்தருக்கு மாத்திரம் மகிமை உண்டாகட்டும். இந்த ஆலோசனை நேரத்தில் என்னை சந்திப்பதற்காக வெளிஊர்களிலிருந்தெல்லாம் ஆட்கள் கூடுவார்கள். காலையில் ஆலோசனை நேரத்தில் நான் அமர்ந்தால், மதியம் சாப்பிடஇயாமல்போகும் மாலை 6மணி வரை ஏராளமான கூட்டம் வரிசையில் காத்திருப்பார்கள். கன்வென்ஷனில் நான் பிரசங்கிப்பதில் ஏற்படும் மற்றங்களைவிட **ஆலோசனை நேரத்தில்** மனம்மாறியவர்கள், மனந்திரும்பியவர்கள் ஒப்புரவானவர்கள்,சுகம் பெற்றவர்களின் எண்ணிக்கை ஏராளம். ஸ்தோத்திரம்.

## மாமியார் - மருமகள் - கணவன் - மனைவி பிரச்சனைகள்:

‘ புறமதஸ்தரானாலும் சரி, கிறிஸ்தவர்களானலும் அல்லது **மனந்திரும்பின கிறிஸ்தவர்கள் ஊழியர்கள், பாஸ்டர்களானலும்** அப்படிப்பட்டவர்களில் பெரும்பாலான குடும்பங்களில் மாமியார்-மருமகள் பிரச்சனை மிக அதிகம். இதற்கு அடிப்படை காரணங்களில்ஒன்று திருமணமானபின் மகன் பெற்ற தாயாகிய தன்மேல் இதுவரை காட்டின அன்பு குறைந்துபோய்விட்டது. புதிய மனைவியின் மேல்தான் தன் மகன் அதிகம் அன்பு காட்டுகிறான் என்ற மனோதத்துவ ரீதியான எண்ணம் ஒவ்வொரு மாமியாருக்குள்ளும் உருவாகும். அப்போது மாமியாரின் வெறுப்பு மருமகள்மேல் தானாக உருவாகும். அப்போதுதான் தனக்கு வீட்டில் மதிப்பு உண்டாக மருமகள்மேல் அதிகாரம் செலுத்த முற்படுவார். சில கூட்டுக் குடும்பங்களில் **மகன்** வருமானத்தில் இதுவரை உதவிபெற்ற மாமியார்,நாத்தனர், மச்சினன் ஆகியவர்களின் படிப்பு,உடை தேவைகள் யாவும் திருமணமானப்பின் தன் **மகனிடமிருந்து** கிடைக்காமல்போகுமோ! **மருமகள்** வந்ததால் அந்த உதவிகள் இனி தடைப்பட்டுவிடுமோ என்ற பயம் மாமியார் உள்ளத்தில் உண்டாகும். இனி ஒவ்வொரு தேவைக்கும் மருமகளிடம் கையேந்தும் நிலை உண்டாகுமோ! என்ற பயமும் உண்டாகும். அப்போது ஏற்படும் தாழ்வு **மனப்பான்மை(ஈகோ)** ஆகியவைகள் சேர்ந்து **மருமகள்** தாங்கள் சொல்படிதான் நடக்க வேண்டும் என்று கூறி **மருமகளை** தங்களின் அடிமைப்போல் நடத்த ஆரம்பித்திலேயே தீர்மானம் செய்துகொள்வார்கள். சில குடும்பங்களில் மருமகளின் நகைகளை **மாமியார்** வாங்கிவைத்துக் கொள்வார்கள். இப்போது மருமகளின் பிடி மாமியார்கையில், **மாமியார்** சொல்படி நடந்தாக வேண்டிய நிலை மருமகளுக்கு ஏற்படும் கணவன் நல்ல **ஆவிக்குரிய மகனாக** இருந்தால் மனைவியின் நகைகளை தன் தாய் வாங்கி வைத்துக்கொள்ளவோ, தன் மனைவியின்பேரில் தன் தாய் **அதிகாரம் செலுத்தவோ மகன்**

ஆரம்பத்திலேயே தன் தாயை கட்டுப்படுத்தவேண்டும். **தன் மனைவி தன் தாயைநேசிக்கவும்,தன் சகோதரிகளைநேசிக்கவும்,** நியாயமான தேவைகளுக்கு தன் மனைவிமூலமாகவே தன் பெற்றோர், சகோதர,சகோதரிகளுக்கு உதவிசெய்ய தன் மனைவியை ஆரம்பத்திலேயே ஜெபத்தோடு தயார்படுத்து வான். இப்படிப்பட்ட **ஜெப ஆயத்தமும்,ஞானமுமில்லாமல்** கூட்டுக்குடும்பத்தில் வாழும் தம்பதிகள் பலவிதமான மனவேதனைக்குள் அகப்பட்டு,மனநிம்மதி இழக்கிறார்கள். மனைவி தனிகுடித்தனம் நடத்த கூட்டுகுடும்பத்தைவிட்டு பிரிந்துபோக கணவனை கட்டாயப்படுத்துவாள். அதன்பிறகு எப்போதும் அந்த வீட்டில் போராட்டங்கள்தான். மனசமாதானம் குறைந்து ஜெபிக்க முடியாமல் கணவனும், மனைவியும் கர்த்தரைவிட்டு அகன்றுபோவார்கள்.

## வேறு சில வித்தியாசமான குடும்பங்கள்:

கூட்டு குடும்பத்தில் அகப்படாமல் சில தம்பதியர் உண்டு. இவர்கள் வாழ்க்கையில் மனைவியும், வேலைக்கு போவார், புருஷனும் வேலைக்கு போவார். இப்படிப்பட்ட குடும்பத்தில் மாமியார் பிரச்சனை அதிகம் இருக்காது. ஆனால் **உன்** பணம், **என்** பணம் என்று தம்பதியர் இருவரும் பிரித்துப்பார்க்க தொடங்கிவிட்டால் அங்கு உண்மையான **அன்பு** நீங்கிவிடும். ஒருமனம் இவர்களுக்குள் இருக்காது. இருவரும் சம்பாதிக்கிறார்கள் இருவரும் **சம உரிமை** எதிர்ப்பார்ப்பார்கள். யாரும், யாருக்கும் கீழ்படிந்து, பணிந்துப்போவதை **அடிமை வாழ்க்கை** எனக்கு கருதுவார்கள். பல குடும்பங்களில் **சொந்த காலில் நிற்கும்** தைரியம்கிடைத்த பெண்கள் கணவனை **மதிக்கமாட்டார்கள்.** இதனால்தான் பல குடும்பங்களில் கணவன்மார் மனைவியை வேலைக்கு அனுப்புவதில்லை.

**தம்பதிகள்மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டவர்களாக** இருந்தால் அவர்கள் வேதவசனத்தின் படி **விசுவாசி-**விசுவாசியைத்தான் திருமணம் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் திருமணவாழ்க்கை அமைந்திருக்கும். நல்ல ஆவிக்குரிய பெற்றோர்களாக இருந்தால் இரட்சிக்கப்பட்ட பெண்ணும்-ஆணையும் தேடி கண்டுபிடித்து, ஜெபஆயத்தத்துடன், தன் பிள்ளைகளுக்கு திருமணம் செய்துவைப்பார்கள். அந்த முறையில் திருமணம் செய்த தம்பதிகள், **கூட்டு குடும்பத்தில்** வாழ்ந்தாலும், **தனிக்குடித்தனம்** நடத்தினாலும் கணவன்-மனைவி இருவரும் இணைந்து ஜெபித்து, இருவரும் ஏகசிந்தையுடன் திட்டமிட்டு செயல்படுவார்கள். அந்த குடும்பம் **குட்டிப் பரலோகம்போல** அமைந்துவிடும். அதன் காரணமாக சரீரத்திலும்,ஆத்துமாவிலும் சந்தோஷத்தை அந்த தம்பதிகள் நிச்சயமாக அனுபவிக்க இயலும்.

## விவாகரத்து தேவனுக்கு பிரியமானது அல்ல:

**கர்த்தர் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக** என்று பவுல் கூறுகிறார். திருமணம் **செர்க்கத்தில் நிச்சியிக்கப்படுகிறதாக** உலக மக்கள்தான் கூறுவார்களேதவிர நம் வேதம் அப்படிக் கூறுவதில்லை. வேதத்தில் **கர்த்தர் இணைத்ததை** என்று கூறப்பட்ட அந்த வசனம் வேதவசனத்தின் அடிப்படையில் இணைக்கப்பட்டவர்களை குறிப்பதாகும். வசனமும்-தேவனும் ஒன்றே! **வார்த்தை-மாம்சமாகி** என்று யோவான் கூறுகிறார். வசனத்துக்கு கீழ்படியாதவன் **கர்த்தருக்கு** கீழ்ப்படியாத வனாகிறான். இந்த வசனத்தின்படி தேவன் இணைத்தது என்றால் **இரட்சிக்கப்பட்ட** விசுவாசி, இரட்சிக்கப்பட்டவரை திருமணம் செய்வதைதான் குறிக்கும். அதனால்தான் **அந்நிய நுகத்தில் இணைக்கப்படாதிருங்கள்** என்று வேதம் கூறுகிறது. அப்படி வேதவசனத்தின்படி ஒரு விசுவாசி-மற்றொரு விசுவாசியை திருமணம்செய்தால் அவர்களைத்தான் **தேவன்இணைத்தது** என்று கூறலாம்.

**கர்த்தர் சொல்வதை கவனியுங்கள்:** 1 கொரி 7:10 **விவாகம் செய்தவர்களுக்கு கர்த்தர் உரைப்பதாவது** என்று பவுல் ஆரம்பிக்கிறார். **விவாகம் செய்வதர்களுக்கு** ஆலோசனை கொடுக்கும் போது மட்டும் கர்த்தர் அவனுக்கு தனிப்பட்ட முறையில் கூறியதை, **கர்த்தர்** சொன்னார் என்று குறிப்பிடுகிறார். அதாவது அவர் கூறுவது அவரின் சொந்த ஆலோசனையல்ல, என் மூளையிலிருந்து உதித்த ஆலோசனையல்ல அது கர்த்தரின் அனாதி நோக்கமாகும் என்பதுதான் அதன் அர்த்தம்.

இயேசு கிறிஸ்துவிடம் விவாகரத்தைக்குறித்து கேள்விகேட்டபோது **மோசே** மூலமாக அந்த காலத்தில் கொடுக்கப்பட்ட ஆலோசனையின்படி **தள்ளுதல் சீட்டு**(விவாகரத்து நோட்டீஸ்)கொடுத்து

ஒரு **கணவன் தன்மனைவியை விவாகரத்து** செய்யலாம் என்பதை சுட்டிக்காட்டுகிறார்கள். அதைப்பற்றி **இயேசு** விளக்கம் கொடுக்கும்போது அன்றைக்கு வேதபுத்தகம்,நியாயப்பிரமாணம் இல்லாத காலம். அதுமட்டுமல்ல அன்றைய மக்கள்ஆவிக்குரிய **முதிர்ச்சிபெறாதகாலம். ஆகவேதான் கொலைக்கு கொலை,பல்லுக்கு பல்** என்ற கடினமான கட்டளையிருந்தது. ஒருவேளை இப்படிப்பட்ட தவறுகளை மக்கள் செய்யாமல் இருக்க தண்டனையை அறிவித்து மக்களை பயமுறுத்தி உணர்த்த வேண்டிய காலமாக இருந்திருக்கலாம். **கொலை செய்தால்-பதிலுக்கு நீ கொலை செய்யப்படுவாய்.** இப்படி பயமுறுத்தினால் கொலை செய்யாமல் இருப்பார்கள் என்ற நோக்கத்தில் அந்த சட்டம் அன்றைய காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கலாம். அந்த கடினமான முதிர்ச்சியற்ற கால கட்டத்தில் மக்களின் இருதய கடினத்திநிமித்தம் **மோசே** அப்படி எழுதினான் என்று குறிப்பிடுகிறார். உண்மையில் **கர்த்தரின் நோக்கம் விவாகரத்து செய்வது சரியல்ல** என்பதாகும். ஆகவேதான் இயேசு அதை தெளிவுப் படுத்தினார். அதே தேவன்தான் **பவுல் மூலமாக திருமணமானவர்களுக்கு** ஆலோசனை கொடுக்கும் போது இந்த ஆலோசனையை கர்த்தர் சொன்னார் என்று தைரியமாக குறிப்பிடுகிறார். **புருஷன்-மனைவியை விட்டு பிரியக்கூடாது** என்கிறார். அதே 1கொரி 7ம் அதிகாரத்தில் அவிசுவாசி பிரிந்துப் போனால்போகட்டும் என்றார். அதன் அர்த்தம் நான் கூறும் ஆலோசனை **மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டவருக்குதான் பொருந்தும்** என்பதாகும். ஆனால் ஒரு **அவிசுவாசி** சேர்ந்துவாழ முடியாது என்றால் அந்த அவிசுவாசி போகட்டும். ஆனால் **விசுவாசியான** நீ விவாகரத்துக்கு சம்மதிக்காதே என்பதாகும்.

நான் எழுதும் எந்த கட்டுரையும்,ஆலோசனையும் **இரட்சிக்கப்பட்டு மனந்திரும்பி** இயேசுவை மட்டும் திருப்திப்படுத்தி, வசனத்தின்படி, **ஜீவிக்கமனமுள்ளவர்களுக்குதான்** இந்த கட்டுரையின் ஆலோசனை பொருந்தும். அப்படிப்பட்டவர்கள்மட்டுமே கர்த்தரைமட்டும் திருப்திப்படுத்த **விவாகரத்தை** ஆதரிக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட குடும்பத்தில் **தவறு செய்தவன் கணவனானாலும்,மனைவி யானாலும் கர்த்தரை நேசிப்பார்கள்** அப்படிப்பட்டவர் கர்த்தரை திருப்திபடுத்தத்தான் யோசிப்பார்களே தவிர, விவாகரத்து செய்யும்படி பெரியவர்கள்கூடி ஆலோசனை கூறியதாலும், **கோர்ட் தீர்ப்பு** சொன்னதாலும் விவாகரத்து செய்தேன் என்று விவாகரத்தை **நியாயப்படுத்த** துணியமாட்டார்கள். சங்143:10 **கர்த்தாவே உம்மைப் பிரியப்படுத்த என்னை போதித்தருளும்** என்று சங்கீதக்காரன் கெஞ்சுகிறான். நான் இந்த விஷயத்தில் எப்படிப்பட்ட முடிவு எடுத்தால் உமக்கு பிரியமாக இருக்கும். உமக்கு பிரியமில்லாததை நான் செய்யக்கூடாது என்பதுதான் ஆவிக்குரியவர்களின் தீர்மானமாக இருக்கும். **ஆகவே மனந்திரும்பிய தம்பதிகள் கவனிக்கவும்: என்னுடைய பெற்றோர்** சொன்னார்கள், நான்கு பெரியவர்கள் நியாயம்பேசி தீர்மான எடுத்ததாகும் என்றெல்லாம் கூறி உங்கள் செயலுக்கு நியாயம் கற்பிக்க முயலாதீர்கள். இதைக்குறித்து **என் கர்த்தர் என்ன சொன்னார்** என்பதுதான் உங்கள் முடிவாக இருக்கவேண்டும்.

## பெற்றோரினால் பிரிக்கப்படுகிற குடும்பம்:

சில பெற்றோரே திருமணமான பிள்ளைகளை பிரிக்கும் ஆலோசனை கொடுக்கிறார்கள். இரட்சிக்கப்பட்ட **கணவன்-மனைவி** இருவருக்கும் **ஊழியக்காரன்** என்ற முறையில் வசனத்தை சார்ந்து இதை ஆலோசனையாக எழுதுகிறேன். எந்த சூழ்நிலையிலும், உங்கள் பெற்றோர் கூறும் விவாகரத்துக்கு ஒத்துப்போகாதீர்கள். நீங்கள் தனி குடும்பஸ்தர் ஆகிவிட்டீர்கள். நீங்களும், உங்கள் மனைவியும் வாழவேண்டியவர்கள். தேவன் நமக்கு கொடுத்துள்ளது ஒரே வாழ்க்கைதான் என்பதை மறக்கவேண்டாம். திருமண நாளில் **சபைமக்கள்முன்** வைத்து, கர்த்தரின் சந்நிதியில் **கர்த்தருக்குமுன்** கூறிய **சத்திய பிரமாணத்தை** மனதில் கொள்ளுங்கள்.

நீங்கள் இருவரும்மட்டுமே பேசி தீர்மானம் எடுங்கள். உங்கள் இருவர் வாழ்க்கையில் உங்கள் பெற்றோரையோ வேறு யாரையும் நுழையவிடாதீர்கள். பெற்றோர்களிடம் ஆலோசனை கேட்பதில் தவறில்லை. தீர்மானம் எடுப்பது, முடிவு எடுப்பது உங்கள் கையில்தான் இருக்கிறது.

நாளை கர்த்தர் உங்களிடம்தான் கணக்கு கேட்பார் என்பதை மறக்கவேண்டாம்.

## தாழ்ந்துபோனால் வாழ்வு உண்டு:

**தாழ்மை உள்ளவனுக்கே கர்த்தர் கிருபையளிக்கிறார்.** தன்னைத்தான் தாழ்த்துகிறவன் எவனோ அவன் உயர்த்தப்படுவான் என்று வேதம் கூறுகிறது.

இப்போது யார் தாழ்ந்துபோவது, என் மனைவியின் டெம்பர்மென்ட் சுபாவம் இவ்வளவு மோசமாயிருக்கிறது அல்லது கணவன் இப்படி மோசமானவனனாக இருக்கிறான். கணவன் அல்லது மனைவி தன் தாயின் ஆலோசனையின்படி தான் நடக்கிறார். இப்படி பல விதமான பிரச்சனை உங்கள் குடும்பத்தில் இருக்கலாம். தவறு யாரிடம் என்று ஆராய்வது முக்கியமல்ல. நீங்கள் **மனந்திரும்பின வராக** இருந்தால் தவறு யாருடையது என்பதில் கவனம் செலுத்தாமல் நீங்கள் முதலாவது **தாழ்ந்துப்போக முந்திக்கொள்வீர்கள்.** கர்த்தரை சந்தோஷப்படுத்தும் தீர்மானத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். ஆகவே இதில் மனைவி தாழ்ந்துபோக வேண்டுமா? கணவன் தாழ்ந்துபோகவேண்டுமா? என்ற கேள்விக்கு இடம் இல்லாது! யார் கர்த்தரை திருப்பதிப்படுத்த முந்திக்கொள்கிறார்கள் என்பதைத்தான் கர்த்தர் கவனிப்பார்.

ஆகவே **உங்களை நியாயப்படுத்தாமல் கர்த்தரை திருப்திப்படுத்துங்கள். அப்போதுதான்** நான் முதலாவது தாழ்ந்து போகட்டும் என்று உங்களை தாழ்த்த முன்வருவீர்கள் **யாரிடம் தாழ்ந்து போகிறீர்கள்**? உங்கள் சொந்த **மனைவியிடம்** அல்லது உங்கள் சொந்த **கணவனிடம்**தானே! இதில் ஈகோ பார்க்காமல், கௌரவம் பார்க்காமல் தாழ்ந்துப்போக முயன்றால் நீங்கள் குடும்ப வாழ்க்கையை கடைசிவரை சமாதானத்துடன் நடத்தலாம். பிள்ளைகள் **அனாதை** ஆகமாட்டார்கள். **இதில் உங்கள் சாட்சி**தான் மிக முக்கியம். அந்த சாட்சிகெடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அப்போதுதான் **வீட்டில்,வெளியில்,சபையில்** நீங்கள் சாட்சி உள்ளவர் என்பதை காண்பிக்கமுடியும். அன்பானவர்களே! நாம் வாழும் நாட்கள் மிகவும் குறுகியது. இந்த குறுகிய காலத்தில் கணவன்-மனைவியாக பிள்ளைகளோடு சந்தோஷமாக வாழுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் **தோற்றுப் போனதாக** நினைக்காதீர்கள். **யாரிடம் தோற்றீர்கள்?** உங்கள் கணவனிடம்தானே தோற்றீர்கள்!. அல்லது மனைவியிடம் தானே தோற்றீர்கள்!. இருக்கட்டுமே?. அவர்கள் உங்கள் சரீரத்தின் ஒரு பகுதிதானே! தோற்றால் என்ன? வாழ்க்கை உடைந்துபோகதே! வாழ்க்கை வாழுவதற்கே!. இப்படி ஒருவர் எழுதியதை நான் வாசித்தேன்.

## குடிகார புருஷன்! - புருஷன்மேல் சந்தேகம்- மனைவியின் நடத்தையில் சந்தேகம்! இப்படிப்பட்டவர்களோடு குடும்பம் நடத்துவது?

நான் முன்பே கூறினேன். என் ஆலோசனை முழுவதும் மனந்திரும்பி **இரட்சிக்கப்பட்டவர் களுக்குத்தான் பொருந்தும்.** ஆகவே கர்த்தரை யார் திருப்திப்படுத்த விரும்புகிறார்களோ அவர்களுக்குத்தான் என் ஆலோசனை பொருந்தும். இப்படி கொடுமைப்படுத்தும் புருஷனிடம் அல்லது மாமியாரிடம் அகப்பட்ட மனைவிமார்கள் நிறைய பேர் உண்டு. சில வீடுகளில் மனைவி பத்ரகாளிபோல இருப்பார். வீடோ அவள் கட்டுப்பாட்டில் வைக்கவே அவள் விரும்புவாள். கர்த்தர் விரும்பும் இப்படிப்பட்டவர்களின் குடும்பம் விசுவாசிகளின் குடும்பம் அல்ல என்பதை சந்தேகமின்றி கூறலாம். இப்படிப்பட்ட குடும்பத்தில் **இரட்சிக்கப்பட்டவர்கள்** சூழ்நிலை காரணமாக அகப்பட்டுபோனார்கள் அல்லது அப்படிப்பட்டவர்களோடு திருமணம் முடிக்கவேண்டியதாய்போனது என்றால் இப்படிப்பட்ட குடும்பத்தில் **இரட்சிக்கப்பட்டவர்** என்று தனியாக நீங்கள் மட்டும் மாட்டிக்கொண்டீர்களேயானால், **கர்த்தரை நேசிக்கிற உங்களுக்குமட்டும்** கீழ்காணும் ஆலோசனை கொடுக்கிறேன்.

குடிகார புருஷனிடமிருந்தோ அல்லது Hysterical(Hysteria in women) மனநோயாளிபோல் உங்களைஆட்டிப்படைக்கிற அல்லது **கொடுமை** செய்கிற நபராக உங்கள் **மனைவி அமைந்தால் நிச்சயம் அவள் மனந்திரும்பாத மனைவியாகத்தான் இருப்பாள்.** அவளுடைய பெற்றோரினால் சரியாக வளர்க்கப்படாதவளாக இருப்பாள் மனைவி அல்லது பாவம் செய்த கணவன், வேறு ஒரு பெண்ணோடு அல்லது ஆணோடு இரகசியமாய் குடும்பம் நடத்துகிற கணவன் அல்லது மனைவியாக

இருந்தால் **சரீர காமஉணர்ச்சி** அதிகம்கொண்ட(ஹார்மேன் பிரச்சனையுள்ள மனைவி) மனைவி அல்லது கணவன் இப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்களோடு நீங்கள் வாழ்க்கை நடத்துகிறவரானால், **கீழ்ப்படியாத** மனைவி உங்களை **எரிச்சலூட்டி** உங்களை கோபத்தின் உச்சநிலைக்கு ஒவ்வொரு நிமிடமும் கொண்டுபோகும் அளவு நடந்துகொள்ளும் மோசமான **மனைவி** அல்லது **கணவன்** உங்களுக்கு அமைந்தால் வேதம் கூறும் ஆலோசனை இதுதான். இந்த ஆலோசனை **ஆணுக்கும்-பெண்ணுக்கும் பொருந்தும்....**(1பேது 3:1,2)(தாழ்ந்துபோங்கள்) **கீழ்ப்படிந்திருங்கள்** இதுதான் முதல் உபதேசம். வேறு வழியில்லை. இருவரில் யாராவது ஒருவர் மனந்திரும்புதலின் அனுபவம் இல்லாதவர்களாக இருந்தால்.....அவர்களை நீங்கள் **திருத்த முயற்சிசெய்யவேண்டாம்.** அது தோல்வியாகத்தான் முடியும். **மனிதன்** மற்றொரு **மனிதனை மாற்றமுடியாது** என்று வேதம் கூறிவிட்டது. மாற்றுகிறவர் கர்த்தர் என்பதை மறக்காதீர்கள். இப்போது அடுத்த ஆலோசனையாக பேதுரு இந்த குறிப்பிட்ட வசனத்தில் என்ன சொல்கிறார் என்பதை கவனியுங்கள்.வீட்டில் உங்கள் நல்ல நடத்தையை(நீங்கள் தாழ்ந்துப்போகிறதை), மனைவியின் அல்லது **புருஷனின் பைத்தியகார சுபாவத்தை நீங்கள் சகிக்கிறதை,** பதிலுக்குபதில் கோபத்தை உங்கள் எரிச்சலை அவர்களிடம் காட்டாமல் இருக்கவேண்டும். அதோடு உங்கள் அமைதியுள்ள நடவடிக்கையை அவர்கள் **பார்க்கவேண்டுமாம்!- கவனிக்கவேண்டுமாம்**!.

' **போதனையின்றி** என்ற அந்த வசனத்தில் குறிப்பிட்டுள்ள அந்த வார்த்தையின் அர்த்தம் அவர்களை நீங்கள் **திருத்த முயலாதீர்கள்** என்பதாகும். எவ்வளவுதான் அவர்களுக்கு ஆலோசனை கூறினாலும் அவர்களால் விளங்கிக்கொள்ளமுடியாது. நீங்கள் அவர்களுக்கு ஆலோசனை கூறகூற முன்பைவிட மிக அதிக மூர்க்கதனமான கோபம்தான் அவர்களுக்கு உண்டாகும்.. ஆகவே ஆலோசனை கூறுவதை நிறுத்திவிடுங்கள். என்னால் யாரையும் மாற்றமுடியாது என்பதை கர்த்தரிடம் கூறி ஒப்புக்கொள்ளுங்கள். உங்கள் மனைவியை அல்லது கணவனை மாற்றுகிற வேலையை கர்த்தரிடம் விட்டுவிடுங்கள். இரவு எல்லாரும் உறங்கினபிறகு மனைவியின் அல்லது புருஷனின் படுக்கைக்கு அருகில் முழங்காலிட்டு கர்த்தாவே என் புருஷனை அல்லது என் மனைவியை திருத்தி எனக்கு தாரும்! என்று கேளுங்கள். மனைவி பிரச்சனையாக இருந்தால் மனைவி உறங்கியபின் கணவன் மனைவிக்கு அருகில் முழங்காலிட்டு **என் மனைவி** எனக்குவேண்டும். என் பிள்ளைகளுக்கு **நல்ல தாயாக** அவள் எனக்கு வேண்டும்! அவளை மாற்றிக்கொடும் ஆண்டவரே! என்று கெஞ்சிடுங்கள். சில சமயம் அந்த ஜெபத்துக்கு பல நாள் கடந்து பதில் கிடைக்கும், சில சமயம் **பல வருடங்கள்** கழித்து பதில் கிடைக்கும்.

அதுவரை அந்த அதிகாரத்தில் 1ம் வசனத்தின் கடைசியில் கூறுகிறது: (உங்கள் நடக்கையின் மாற்றத்தை எத்தனை கோபப்படுத்தினாலும் நீங்கள் காட்டும் உங்கள் அமைதியும்,உங்கள் அன்பையும் உங்கள் ஜெப வாழ்க்கையையும், உங்கள் வேதவாசிப்பையும்) அவர்கள் (பார்த்து)**கவனிக்கவேண்டும்** என்று வேதம் கூறுகிறது. அந்த கவனிப்பு வீட்டில் பிரச்சனைக்கு காரணமானவர் உள்ளத்தில் மெள்ளமெள்ள மாற்றத்தை உண்டாக்கும். இப்படித்தான் வேதம் நமக்கு போதிக்கிறது.

இதை **மனநல ஆலோசகரோ, மனநல வைத்தியரோ** கூற மாட்டார்கள். நம் வேதம் மட்டுமே இப்படி கூறுகிறது. இப்படிப்பட்ட **நடத்தயினாலேதான் வீட்டில் பிரச்சனைஉள்ளவரை ஆதாயப்படுத்திக் கொள்ளமுடியும்** என்று தீர்க்கமாக வேதம் போதிக்கிறது.

சிலர் **என் மனைவி** எனக்கு கொடுக்கும் **டார்ச்சர்** என்னால் தாங்க முடியவில்லை. வேண்டும் என்றே என்னை கோபப்படுத்துகிறாள். ஆகவே என் மனைவியை கொன்று விட்டு நானும் தற்கொலை செய்துக்கொள்ளமுடிவு செய்துள்ளேன் என்று என்னிடமே நேரில் சொன்னவர்கள் நிறையபேர் உண்டு.

**உங்கள் பொருமையினால்** உங்கள் **ஆத்துமாவை காத்துக்கொள்ளுங்கள்** என்று (லூக்கா 21:19) வேதம் கூறுகிறது.

ஆகவே ஒன்றை **நீங்கள் தெளிவாக புரிந்துக்கொள்ளவேண்டும். நம்தேவன் பிரிக்கும் தேவன்அல்ல சேர்க்கும்தேவன் என்பதை மறக்கவேண்டாம்.**

' மேலே வாசித்த முகவுரையின்படி **ஆலோசனை நேரத்தில்** நடந்த சில **அனுபவங்களில் ஒரு சம்பவத்தை** இங்கு நான் பகிர்ந்துக்கொள்கிறேன். இப்போது கூறப்போகும் சம்பவங்களைக்குறித்து ஏற்கனவே நான் பேசும் சில கூட்டங்களில் நான் இதை பேசியிருக்கிறேன். இப்போது என் வாசகர்கள் அறியவேண்டி என் அனுபவங்களை இங்கு பகிர்ந்துக்கொள்கிறேன். நிச்சயமாக அது உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

## ஒத்துப்போகாத மாமியார் - மருமகள்:

தமிழ் நாட்டில் பெரிய நகரத்தில் அமைந்துள்ள CSI ஆலயத்தில் 3 நாட்கள் கன்வென்ஷனில் பிரசங்கிக்கப்போயிருந்தேன். மேலே நான் எழுதியபடி வழமையாக சனிக்கிழமை ஆலோசனை நேரம் ஆகும். ஆயிரக்கணக்கில் மக்கள் ஆலயத்தில் அமர்ந்து பாடல்கள் பாடிக்கொண்டிருக்க, மக்கள் உட்கார்ந்துள்ள வரிசையின்படி,ஒவ்வொருவராகவும்,குடும்பமாகவும் என் அறைக்கு ஆலோசனைக்காக உள்ளே வந்து ஆலோசனை பெற்று ஜெபித்து சென்றார்கள். அந்த வரிசையில் ஒரு சகோதரி பெண்கள் உயர்நிலை பள்ளியில் தலைமை ஆசிரியையாக பதவிவகித்து ஓய்வுபெற்று வீட்டில் வெறுமனே இருக்கிறார். இந்த சகோதரியின் கணவர் இறந்துபோனார். இவர்களுக்கு ஒரே ஒரு மகன் அவர் இன்ஜினியராக உயர்பதவியில் இருக்கிறார். அவர் மனைவி ஒரு அரசாங்க வங்கி (பேங்க்)யில் நல்ல பதவியில் இருக்கிறார். இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள்(மகன்,மகள்). இதில் பிரச்சனை என்னவென்றால், இந்த சகோதரிக்கும் - மருமகளுக்கும் ஒத்துப்போகாத நிலை இருப்பதாக அந்த சகோதரி என்னிடம் கூறினாள். வீட்டில் தன் பேரப்பிள்ளைகளை கண்டிப்பதும், பிள்ளைகள் சேட்டை செய்தால், ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டால் தான்சென்று அவர்களை விலக்கி இருவரையும் பிரம்பால் அடித்து கண்டிப்பேன். ஆனால் நான் அப்படி பேரப்பிள்ளைகளை கண்டிப்பதும், அடிப்பதும் மருமகளுக்கு இஷ்டம் இல்லை. நான் பெற்ற என் மகனை சிறுவயதில் சேட்டை செய்யும்போது தவறு செய்யும்போது அடித்துதான் திருத்துவேன். இப்போது என் பேரப்பிள்ளைகளையும், நான் அப்படியே அடித்து திருத்த முயலுகிறேன். ஆனால் என் மருமகளுக்கு நான் அப்படி பிள்ளைகளை கண்டிப்பது பிடிக்கவில்லை. மகனும்,மருமகளும் வேலைக்கு சென்றுவிட்டால் விடுமுறை நாட்களில் இந்த பேரப்பிள்ளைகளின் குறும்பும்,சேட்டையும் மிக அதிகம். இதனால் நான் மிகவும் பலவீனப்படுகிறேன். வயது முதிர்ந்த என் நிலையில் எனக்கு கோபம் வருகிறது. பிள்ளைகளின் குறும்பு அதிகமாகும்போது அவர்களை அடித்து அடக்குகிறேன். இது என் மகனும், மருமகளும் விளங்கிக்கொள்வதில்லை.

என் பேரப்பிள்ளைகளை நான் கண்டிக்க பாட்டியாகிய எனக்கு உரிமையில்லையா? மருமகள் என் முன்னாலேயே நாகரீகமற்ற வார்த்தைகளில் பேரப்பிள்ளைகளை காரணமில்லாமல் ஏசுவாள் அது என்னை திட்டுவதுபோல் உணருகிறேன். என்மேலுள்ள கோபத்தையும்,வெறுப்பையும் தன் பிள்ளைகள் மேல் அவள் காட்டுகிறாள். அந்த பிள்ளைகளின் மனநிலை பாதிக்கப்படுமே? நான் உயிரோடு இருக்கும்வரை பேரப்பிள்ளைகள் தவறு செய்தால் கண்டிப்பாக நான் கண்டித்துதான் வளர்த்துவேன். இந்த பிரச்சனைகளை என் மகனிடம் கூறியபோது உங்கள் இரண்டுபேர் விஷயத்தில் நான் தலையிட விரும்பவில்லை என்று கூறிவிடுகிறான். அவன்மனைவி என்மேல் எவ்வளவு கோபப்பட்டாலும் அவளை என் மகன் கண்டிக்கபோவதில்லை என்பதை உணர்ந்தேன்.

ஆகவே எனக்குள் வெறுப்பு நாளுக்குநாள் அதிமாகிக்கொண்டேபோனது. நான் என் மருமகளை என் மகளைப்போல் நேசிக்க விரும்புகிறேன். ஆனால் அவளோ என்னை விளங்கிக் கொள்வதில்லை. ஆகவே வயது முதிர்ந்தோர் இல்லங்களின் விலாசங்களை நானே விசாரித்து வைத்துள்ளேன். இந்த வீட்டில் எனக்கு மரியாதை, மதிப்பு இல்லாதபோது நான் ஏன் இந்த வீட்டில் இருக்கவேண்டும்? என்றார்!.

அந்த சகோதரி பேசி முடித்தவுடன் நான் கேட்டேன். உங்கள் பேரப்பிள்ளைகள் உங்களை நேசிக்கிறார்களா? என்றேன். அந்த இரண்டு பிள்ளைகளும் என்னை மிகவும் நேசிக்கிறார்கள். எப்போதும் என் அறையிலேயே என்னோடு படுத்துக்கொண்டும், விளையாடிக்கொண்டும் இருப்பார்கள். அது எனக்கு மிகவும் **சந்தோஷத்தையும் ஆறுதலையும்** கொடுக்கிறது. ஆனால் என் மருமகளுக்கு

அது இஷ்டப்படுவதில்லை. என் அறைக்குள் வந்து பிள்ளைகளை அடித்து இழுத்துக்கொண்டுபோவாள். இவைகள் எல்லாம் என்மேல் அவளுக்குள்ள வெறுப்புதான் காரணம். இனி இந்த வீட்டில் இருக்கபோவதில்லை. எனக்கு கைநிறைய பணம் உண்டு.

ஓய்வுபெற்றபின் கிடைத்த பெருந்தொகை அப்படியே வங்கியில் இருக்கிறது. பென்ஷனும் எனக்கு அதிகமாக கிடைக்கிறது. என் பணம் எதுவும் என் மகனுக்கு தேவையில்லை. மருமகளுக்கும் தேவையில்லை. கர்த்தர் அவர்கள் இரண்டு பேருக்கும் தேவைக்கு அதிகமாகவே வருமானம் கிடைக்க அருள் புரிந்துள்ளார். ஆகவே என் பணஉதவி, என் சரீர உதவி எதுவும் அவர்களுக்கு தேவையில்லை. இனி என் கடைசி காலத்தை வயது முதிர்ந்தோர் இல்லத்தில் அமைதியாக கழிக்க விரும்புகிறேன் என்றார்.

நான் கூறினேன். நீங்கள் வயது முதிர்ந்தோர் இல்லம் சென்றாலும் அங்கு உங்களால் நிம்மதியாக இருக்கமுடியாது. இருப்பது ஒரே மகன் அரண்மனைப்போன்ற பிரம்மாண்டமான வீடு, இங்கு கிடைக்காகத நிம்மதி உங்களுக்கு வெளியில் எங்கும் கிடைக்காது.

மேலும் நான் கூறியதாவது: சகோதரி **எந்த பிரச்சனைக்கும் ஒரு ஆணிவேர் இருக்கும்.** அதை கண்டுபிடித்துவிட்டால் உங்கள் பிரச்சனை சரியாகிவிடும்.

## என் கேள்விக்கு பதில் கூறுங்கள் என்றேன்:

■ உங்கள் மருமகள் உங்களை வெறுக்க காரணம் என்ன?.

❖ தெரியவில்லை!.

■ நீங்கள் மறைக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அல்லது மருமகள் உங்களை வெறுக்கும் காரணத்தை கூற உங்களுக்கு பிரியமில்லை என்று நினைக்கிறேன் என்றேன்.

❖ அவள் **ஏன் என்னை வெறுக்கிறாள்?** என்பது **உண்மையாகவே** எனக்கு விளங்கவில்லை டாக்டர் என்றார்.

■ சரி. இனி நான் கூறும் ஆலோசனையை கேளுங்கள்.

■ உங்கள் மருமகளுக்கு எது பிடிக்கவில்லையோ அதை செய்யாதீர்கள் என்றேன்.

❖ அந்த வீடு என் சொந்த வீடு. அப்படியானால் அந்த வீட்டில் என் மகனின் பிள்ளைகளை கண்டிக்க அல்லது திருத்த ஒரு பாட்டியாகிய எனக்கு உரிமையில்லையா?.

■ சகோதரி இது **உரிமை** பிரச்சனையில்லை. **குடும்ப சமாதானம், குடும்பம்** உடையக்கூடாது. பெற்ற தாயை சொந்த மகன் வீட்டைவிட்டு துரத்திவிட்டான் என்ற கெட்டபெயர் உங்கள் மகனுக்கு வரக்கூடாது அதற்காக! இந்த ஆலோசனையை கூறுகிறேன். உங்களுக்கு உங்கள் வீட்டில் சமாதானம் வேண்டுமா? வேண்டாமா?.

❖ வேண்டும்!. அதற்காக அந்த வீட்டில் நான் ஒரு அனாதைபோல் அல்லது அடிமைப்போல இருக்கவேண்டுமா?. சரி நீங்கள் கூறும் ஆலோசனையின்படி செய்கிறேன். சொல்லுங்கள் என்றார்.

■ முதலில் நான் கூறியதை மறுபடியும் கூறுகிறேன். **மருமகளுக்கு பிடிக்காததை** இனி நீங்கள் செய்யவேண்டாம். பிள்ளைகளைப்பற்றி பெற்ற தாய்க்கு இல்லாத அக்கறை உங்களுக்கு எதற்கு? நீங்கள் பிள்ளைகளை திட்டுவது, திருத்துவது **மருமகளுக்கு** பிடிக்கவில்லை. ஆகவே இனி பிள்ளைகள் விஷயத்தில் நீங்கள் தலையிடாதீர்கள்.

■ நான் கூறுவதைப்போல் 6 மாதம் செயல்படுத்தி பார்த்து பிறகு எனக்கு எழுதுங்கள் என்றேன். ஒன்றை நீங்கள் விளங்கிக்கொள்ளவேண்டும். **மருமகளை** மாற்றவோ, அவளை உங்கள் வழிக்கு கொண்டுவரவோ முயலாதீர்கள்!. **உங்களை மாற்றிக்கொள்ளுங்கள்**!. அது உங்களால் முடியும். ஆனால் மருமகளை நீங்கள் மாற்ற முடியாது. உங்களை நீங்கள் மாற்றிக்கொள்ளமுடியும். நான் இப்படி உங்களிடம் கூறுவதற்கு ஒரே காரணம், **குடும்பம் உடையக்கூடாது**. நீங்கள் நேசிக்கும் உங்கள் ஒரே மகனின் மனம் உங்கள் இருவர் பிரச்சனையால் வேதனைப்படக்கூடாது. மகனின் நிலை என்னவென்றால் ஒரு பக்கம் தன்னை பெற்று வளர்த்த **தாய்-** மறுபக்கம் தான் நேசிக்கும் **மனைவி.** ஆகவே உங்கள் மகன் இரண்டு பக்கத்தில் உள்ளவர்களையும் ஒன்றுபோல் திருப்திபடுத்தமுடியாது!.

ஆகவே வயதில் முதிர்ந்த உங்கள் காலம் முடியப்போகிறது. வாழவேண்டிய மகன் குடும்பமாவது சந்தோஷமாக வாழ உதவுங்கள்!.

நான் கூறிய இந்த திட்டத்தை செயல்படுத்த நீங்கள் ஒருநாள் தெரிந்தெடுத்து ஒரு பகல் உபாவசித்து ஜெபித்து ஆண்டவரே, இந்த குடும்ப விவகாரத்தில் நான் நடந்துக்கொள்ள எனக்கு **ஞானம்** தாருங்கள். மருமகளிடம் எப்படி நடந்துக்கொள்ளவேண்டும் என்பதற்கு ஞானம் தாருங்கள் என்று கேட்டு ஜெபியுங்கள். ஈகோ பார்க்காமல்,கௌரவம் பார்க்காமல் இந்த விஷயத்தில் பெரியவர்களாகிய நீங்கள் **தாழ்ந்துபோக** தேவனிடம் பெலன் கேட்டு பெறுங்கள். நாளை மறுநாளிலிருந்து நான் கூறியபடி செயல்படுங்கள் என்று கூறி ஜெபித்து அனுப்பிவிட்டேன்.

அந்த சகோதரி மறுநாளே நான் கூறியபடி உபவாசித்து ஜெபித்தாள். மருமகளிடம் நடந்துக்கொள்ள வேண்டிய **ஞானம் தாரும்** என்று ஜெபித்து மறுநாளிலிருந்து செயலில் இறங்கினார். பேரப்பிள்ளைகள் விஷயத்தில் தலையிடுவதில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவு பயங்கரமாக விளையாடி அடித்து சண்டை போட்டுக்கொண்டாலும், பாட்டியாகிய அந்த சகோதரி தலையிடுவதில்லை.

பள்ளிக்கூடம் முடித்து பிள்ளைகள் வீட்டுக்கு வந்தால் முன்பெல்லாம் முதலில் **வீட்டுப்பாடம் (ஹோம் ஒர்க்)** என்ன என்று நானே **டைரியை** பார்த்து **ஹோம் ஒர்க்** செய்து **முடித்தபின்தான்** பிள்ளைகளை விளையாட அனுமதிப்பேன். ஆனால் இப்போது அதிலும் தலையிடுவதில்லை. நாட்கள் கடந்தன. பிள்ளைகளின் மார்க் குறைந்தது. பள்ளிக்கூடத்தில் டீச்சர் பெற்றோரை நேரில் காணும்படி எழுதி அனுப்பினார்கள். மகனும்,மருமகளும் நேரில் சென்றபோது உங்கள் பிள்ளைகள் இருவரும் முதல் மார்க் வாங்குபவர்கள். சில வாரங்களாக வகுப்பு தேர்விலும் 4 வது ரேங்க் எடுத்துள்ளார்கள். வீட்டில் பிள்ளைகளை கவனிப்பதில்லையா? என்று கேட்டார்கள். நிலைமையை பெற்றோர் விளங்கிக்கொண்டார்கள்.

ஒருநாள் காலை மருமகளும், மகனும் அம்மாவின் அறைக்கு வந்து அமைதியாக நின்றார்கள். என்ன விஷயம்? என்று கேட்க மருமகள் கூறினாள். அத்தை கொஞ்ச நாட்களாக உங்கள் நடத்தையில் மாற்றம் காண்கிறோம். வீட்டு விஷயத்தில்,பிள்ளைகள் விஷயத்தில் நீங்கள் தலையிடுவதில்லை. எனக்கு தெரியும். பிரச்சனைக்கு நான்தான் காரணம். உங்கள் மனதை மிகவும் வேதனைப்படும்படி நடந்துக் கொண்டேன். மன்னித்துவிடுங்கள் அத்தை என்றாள். மகனும் மன்னிப்பு கேட்டான்.

அப்போதுதான் டாக்டர் நீங்கள் என்னிடம் கேட்டது ஞாபகம் வந்தது. உடனே என் மருமகளிடம் கேட்டேன். என்மேல் உனக்கு என்ன வெறுப்பு? ஆலோசனைக்காக அந்த டாக்டரிடம் சென்றபோது அந்த டாக்டர்கூட இதே கேள்வியை கேட்டார். உங்கள் மருமகள் உங்களை வெறுக்க நிச்சயம் ஒரு காரணம் இருக்கவேண்டும் என்றார். அது என்ன? எனக்கு சொல் என்றார்.

இப்போதுதான் பிரச்சனையின் **ஆணிவேர்** வெளியே வர ஆரம்பித்தது. மருமகள் கூறினாள். அத்தை நீங்கள் நன்றாக ஜெபிப்பவர்கள், மிஷனரிகளை தாங்குபவர்கள், ஆலயம் கட்டிக்கொடுத்திருக்கிறீர்கள், ஜெபகுறிப்பு வைத்து மற்றவர்களுக்கொல்லாம் ஜெபிப்பவர்கள் என்று திருமணத்துக்குமுன்பே நான் கேள்விப்பட்டேன்.

ஆனால் எங்கள் கல்யாணம் முடிந்த முதல்நாள் இரவு நம் வீட்டு குடும்ப ஜெபம் முடித்து நானும் கணவரும் அறைக்கு போகும்முன் நீங்கள் ஒரு வார்த்தை கூறினீர்கள். உன் கல்யாண சீதனமாக கொண்டுவந்த பொருள்கள் எவர்சில்வர் பாத்திரங்கள் யாவும் மட்டரகமானது. கனம் குறைந்தது, அவைகள் யாவும் விலை குறைவான பொருட்கள் ஆகும். நல்ல பொருள் வாங்க உன் தகப்பனருக்கு வக்கில்லையா? தரித்திர குடும்பம்போல இருக்கிறதே! உன் அப்பா, என்னை நன்றாக ஏமாற்றிவிட்டார் தெரியாமல் இப்படிப்பட்ட குடும்பத்தில் உன்னை தெரிந்தெடுத்துவிட்டேன். சரி போ...போ என்று என் பெற்றோரைக்குறித்தும், குறிப்பாக என் அப்பாவை குறித்தும் நீங்கள் அன்று பேசின அந்த ஏளன வார்த்தைகள் என் இருதயத்தில் அப்படியே பதிந்துவிட்டது. இந்த பொருள் விலை உங்களுக்கு தெரியுமா? கவனிக்காமல் பேசிவிட்டீர்கள். எல்லா சீதனமும் தரமானவைகள், என் நகைகள் யாவும் டூப்ளிக்கேட் அல்ல. சுத்தமான தங்கம் இதை வாங்க என் தகப்பனார் பட்டபாடு எனக்குதான் தெரியும்.

நன்றாக ஜெபிக்கும் தாயாக உங்களை என் மனதில் உயர்வாக நினைத்திருந்த எனக்கு அந்த முதல்நாள் நீங்கள் பேசிய வார்த்தை, நீங்கள் போலியான விசுவாசி,உங்கள் ஜெபம் போலி, உங்கள் வேத வாசிப்பு போலி, இப்படியாக என் உள்ளத்தில் **உங்கள்மேல் மோசமான அபிப்ராயம்** உண்டானது. அதிலிருந்து நீங்கள் எங்கள் குடும்பத்துக்கு எங்கள் பிள்ளைக்கு எத்தனை நன்மைகள் செய்தாலும் அது போலியாகவே எனக்கு தோன்றியது. அது **மாயமாலம்** என்றே என் உள்ளம்கூறி கொண்டேயிருந்தது. அதனால்தான் முதல்நாளிலிருந்தே உங்களை வெறுக்க தொடங்கினேன்.

ஆனால் இப்போது நீங்கள் எங்களைவிட்டே ஒதுங்கிவிட்டீர்கள். இந்த வீட்டுக்குள் இருந்துக் கொண்டே நீங்கள் ஒதுங்கி வாழ்வதும், எதிலும் தலையிடாததும் எங்கள் உள்ளத்தில் வேதனையை உண்டாக்கிவிட்டது. எல்லாவற்றிக்கும் நான் தான் காரணம். **என்னை மன்னித்துவிடுங்கள்அத்தை** என்று அழுதாள். அவள் அழ என் மகனும் அழுதான். எனக்கும் அழுகை வந்தது.

உடனே மருமகளை நோக்கி இதை ஏன் முதல்நாளே என்னிடத்தில் சொல்லவில்லை. பொருள்கள் வாங்கிய விலைபட்டியல் பில் எல்லாவற்றையும் உன் அப்பாவிடமிருந்து நீ வாங்கியதை, 9 வருடத்துக்குபின் இப்போது காண்பிக்கிறாயே! உன் தகப்பனார் என்னை என்னைப்பற்றி என்ன நினைத்திருப்பார்?. எங்கள் ஜெபஐக்கியத்தில் உன் அப்பாவும் ஒருவராக இருக்கிறார். இதை ஆரம்பித்திலேயே என்னிடம் கூறியிருந்தால் இத்தனை கசப்பு நமக்குள் வளர்ந்திருக்காதே!, நான் அன்று முதல்நாள் இரவு உன்னிடம் எத்தனை மடத்தனமாக நான் பேசியிருக்கிறேன். அதுவும் திருமணநாளின் முதல் இரவு அன்றே இப்படி அற்பத்தனமாக கல்யாண சீதனத்தை குறித்து நான் பேசியிருக்கிறேனே!, என்னால் நம்பமுடியவில்லையே?. மற்ற பெண்களுக்கு நான் உபதேசம் செய்கிறேன். நானே என் மருமகளிடம் இப்படி நடந்துகொண்டேனே!. என்னை மன்னித்து விடும்மா? நான் அப்படி பேசியிருக்கக்கூடாது! என்று அழுதேன்.

என் மருமகளும் என்னிடம் கூறினால் அத்தை நானும் இத்தனை வருடம் இந்த கசப்பை மனதில் வைத்து உங்களை **வெறுத்துஇருக்ககூடாது** என்னை மன்னியுங்கள் என்றாள். மகனும் மன்னிப்பு கேட்டு அழுதான். மூவரும் **முழங்கால் படியிட்டு** ஒப்புரவாகி ஜெபித்தோம். அன்றிலிருந்து இன்றுவரை எங்கள் குடும்பம் நல்ல சாட்சியுடன் வாழ்கிறது. மாமியார்-மருமகளைபோல் அல்லாமல் **தாயும்-மகளையும்போல்** நாங்கள் ஒருவருக்கொருவர் பழகி சந்தோஷமாக வாழ்கிறோம் என்றார்.

‘ **நான் ஆலோசனைகொடுத்த ஒன்றரைமாதத்திலேயே இந்தமாற்றம் நடந்திருக்கிறது!.**

இதேபோல் **நெல்லையில்** வேறு ஒரு இடத்தில் நடந்த கன்வென்ஷனில் ஆலோசனை நேரத்தில் இந்த மாற்றங்களை சாட்சியாக அந்த சகோதரி நேரில் வந்து அறிவித்தாள். தன் மருமகளையும் என்னிடம் அழைத்து வந்து அறிமுகப்படுத்தி நன்றி கூறி ஜெபித்து சென்றனர்.

ஆகவே பிரச்சனைகளுக்காக ஜெபியுங்கள் என்று பலருக்கு நீங்கள் கடிதம் எழுதினாலும், **பிரச்சனையின் காரணத்தை** கண்டுபிடிக்காமல் அதை சரி செய்யமுடியாது. அதற்காகத்தான் ஆலோசனையோடுகூடிய **ஜெபம் அவசியம்** என்கிறேன்.

# ஆலோசனை - 2:
# அமெரிக்கா-ஆஸ்ட்ரேலியா மற்றும் ஐரேப்பா கலாச்சாரம்:

‘ வெள்ளைக்கார நாட்டு கலாச்சாரத்தில் வாழும் உள்ள நம் **தமிழ்நாட்டு கிறிஸ்தவ தம்பதியினர்** ஆலோசனைக்காக வந்தனர்.

அமெரிக்காவிலேயே வாழும் இந்தியர்களுக்கு பிறந்தவர்கள் இவர்கள். திருமணம் முடித்து தனிக்குடித்தனம் நடத்தும் அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். ஒருவேளை உணவுக்கு இவர்கள் வீட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தேன். அவர்கள் குடும்பத்தில் சந்தோஷமாக வாழ்வதைப்போல்தான் காணப்படுகிறார்கள். அவர்களின் வாழ்க்கை முறைகளை கேட்டேன். நாங்கள் ஒரு வாரத்திற்கான அட்டவணை எழுதி குளிர்சாதன பெட்டியில்(Refrigerator)ஒட்டி வைத்துவிடுவோம். **திங்கள்கிழமை** கணவர் பாத்திரங்கள் கழுவி,வீட்டை துடைத்து சுத்தம் செய்யவேண்டும். **செவ்வாய்கிழமை** மனைவி

பாத்திரங்களை கழுவி,வீட்டை துடைத்து சுத்தம் செய்யவேண்டும். பிள்ளைகள் Baby Sittingக்கா அழைத்துசெல்லவேண்டும். இப்படி அட்டவணை போட்டு வீட்டுவேலையை,பிள்ளை பராமரிப்பு வேலை ஆகியவைளை பிரச்சனையில்லாமல் தங்களுக்குள்ளேயே திட்டமிட்டுக்கொண்டு சமாதானத்துடன் வாழ்கிறார்கள்.

அதேசமயம் 35 ஆண்டு காலம் அமெரிக்காவில் வாழும் மற்றொரு **இந்தியர்** வீட்டில் கணவன்-மனைவி இருவரும் எல்லோரையும்போல வேலைக்கு போகிறார்கள். பிள்ளைகளை பராமரிக்கிறார்கள். ஆனால் பாத்திரம் கழுவும்வேலை-வீட்டை துடைக்கும்வேலையை அந்த குடும்பத்தில் மனைவியானவள் புருஷனை செய்யவிடுவதில்லை. தான் வேலைக்கு சென்று வீட்டுக்கு எத்தனை மணிக்கு திரும்பினாலும் பாத்திரம், வீடு சுத்தம் செய்வது யாவும் தானே செய்யவேண்டும் என்று விரும்புகிறாள். தன் புருஷனை அந்த வேலைகளை செய்யவிடுகிறதில்லை. அந்த வீட்டுக்குள் புருஷன் பாத்திரம் கழுவுவதை வீட்டை துடைப்பதை சமையல் செய்வதை வெளியாட்கள் யாரும் காண வழியில்லை. ஆனாலும் தன் கணவன் அப்படிப்பட்ட வேலைகளை செய்வதை அந்த வீட்டு மனைவி அவமானமாக கருதுகிறாள். கணவனுக்கு பணிவிடை செய்வதை அவள் பெருமையாக கருதுகிறாள். அதை அவமானமாக கருதவில்லை. தான்செய்வது ஆணுக்கு அடிமைப்பட்டவள்போல் அவள் எண்ணவுமில்லை. ஆணுக்கு-பெண் சமம் என்ற உலக கொள்கையுடன் அந்த பெண் இணைந்துபோக பிரியப்படவில்லை. அமெரிக்கா நாட்டில் வாழும் அந்த குடும்பத்தில் நான் கண்ட சமாதானம் ஆவிக்குரிய சந்தோஷம் வேறு யாரிடத்திலும் காணவில்லை. நான் குறிப்பிட்ட அந்த வீட்டு மருமகளும் அவர்களைப்போலவே தன் கணவனுக்கு சேவை செய்கிறாள். மாமனாரின் உடைகளை மிஷனில்போட்டு உலர்த்தி அயர்ன் செய்து உதவுகிறாள். அமெரிக்கா கலாச்சாரத்தில் பல வருடங்கள் பழகிப்போன குடும்பம்தான் அது. ஆனால் அந்த குடும்பத்தில் அவர்கள் வாழும் வாழ்க்கை இந்தியர்களின் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றில் அனுபவமாகும். கூட்டுகுடும்ப இன்பத்தை ருசிக்க துடிக்கும் குடும்பம். அமெரிக்கா நாட்டிலேயே இரண்டு வித்தியாசமான இந்திய குடும்பத்தை உங்களுக்கு மாதிரியாக எழுதினேன்.

டாக்டர்.புஷ்பராஜ்யாகிய நான் என் வீட்டில் என் அறையில் தரையில் தூசி, குப்பைகளை கண்டால் துடைப்பத்தை எடுத்து வெறுமனே குப்பைகளை ஒதுக்கி ஒரு மூலையில் தள்ளிவைப்பேன். என்றாவது என் மனைவி அதை கண்டால் ஒடிவந்து உங்களை யார் இதையெல்லாம் செய்ய சொன்னது. யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?. துடைப்பத்தை என்னிடமிருந்து பிடுங்கி அறையை சுத்தமாக்குவார்கள்.

ஆனால் **தற்கால குடும்பங்களில்** மனைவி அல்லது கணவன் அவிழ்த்துப்போட்ட துணியை எடுத்துவைக்க யாரும் முன்வருவதில்லை. முடிவாக கணவன்தான் எடுத்து வைக்கவேண்டும். கட்டிலில் உள்ள பெட்ஷீட்டை கணவன்தான் காலையில் மடக்கிவைக்கவேண்டும். பிள்ளைகளை குளிப்பாட்டி விடுவது முதல் பிள்ளைகள் பள்ளிக்கூடம் அனுப்புவது போன்ற சகல வேலையையும் கணவன்தான் செய்கிறார் என்ன கிறிஸ்தவ குடும்பமிது?.

மனைவி அல்லது கணவன் அப்படிப்பட்ட வேலைகளை செய்வதை அவமானமாக கருதக்கூடாது. இப்படிப்பட்ட செயல்கள் காணப்படும் குடும்பத்தை **பெண் ஆதிக்கம்** நிறைந்த குடும்பம் என்று இந்தியாவில் கூறுவார்கள். பல குடும்பங்களில் இப்படிப்பட்ட **குற்றேவல்களை** செய்யும் கணவன் இந்த வேலைகளை அவன் குடும்ப கடமையாக செய்வதில்லை. மனைவியின் **ஆண் ஆதிக்க** போக்கால், மனைவியின் **அகம்பாவத்தால்** குடும்பம் உடைந்துபோகக்கூடாதே! பிள்ளைகள் அனாதையாகிவிடக் கூடாதே! என்ற ஒரே காரணத்தினால்தான் அப்படி செய்கிறார்கள். இப்படிப்பட்ட வீட்டில் குடும்ப தாம்பத்தியம் இன்பமாக இருக்குமா? ஒரு மிஷன்போன்றுதான்(ரோபோட்) அவர்கள் சந்தோஷம் அமையும்.

இந்த லட்சனத்தில் இப்படிப்பட்ட சில குடும்பத்தில் **பெண்** TPM(**சிலோன் பெந்தேகோஸ்தே**) சபைக்கு போவாள் - **கணவன்** CSI சபை ஆராதனைக்கு போவார்.

இது ஆண்டவர் பார்வையில் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பம் அல்ல. இதற்கெல்லாம் அந்த **பெண்ணை** பெற்றவர்கள்தான் மூலக்காரணமாகும். இரவு நேரத்தில் பிள்ளை சிறுநீர் கழிக்க டாய்லெட் போக அழுவாள் மனைவி நிம்மதியாக அதை காணாதவர்போலவும்,உறங்குவதைப்போலவும் பாவனை செய்வார். **கணவன்தான்** அந்த விஷயத்திலும் தன் பிள்ளைக்கு உதவி செய்யவேண்டும். இது சாட்சியில்லா கிறிஸ்தவ குடும்பம். மற்றவர்களுக்கு ஆலோசனை கொடுக்க தகுதியற்ற கிறிஸ்தவ குடும்பம்ஆகும். அந்த வீட்டில் பிள்ளைகளும் பெற்றோரின் அந்த தவறான செயலைத்தான் பிற்காலத்தில் பின்பற்றும். பிள்ளைகள் பிற்காலத்தில் முரடராக,கொலைகாரனாக மாற அந்த பெற்றோர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு கொள்வதும்,பிள்ளைகளிடம் அன்பு செலுத்தாதுமே காரணமாகும். பெற்றோரின் முன்கோப நடவடிக்கை காரணமாக சிறுவயதிலேயே வீட்டைவிட்டு ஓடிப்போனபிள்ளைகள் எத்தனைப்பேர்.ஜாக்கிறதை! கிறிஸ்தவ பெற்றோர்கள் இதற்கெல்லாம் கர்த்தரிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய நாள் வரும். இவர்கள் பரலோக பாக்கியமும் இழக்கநேரும்.

**அன்பின் அடிப்படையில்** ஒரு கணவன் மனைவியின் புடவையைகூட துவைத்து உதவமுடியும். ஆனால் பெண் ஆதிக்க அடிப்படையில் கட்டாயப்படுத்தி, கட்டளையிட்டு ஒரு மனைவியோ ஒரு கணவனோ வீட்டுவேலையை செய்ய கட்டாயப்படுத்தினால் அவர்கள் உண்மையாக ஒருவரை ஒருவர் நேசிக்காதவராகும். அப்படிப்பட்ட குடும்பம் என்றைக்கு வேண்டுமானாலும் இரண்டாக உடையலாம்.

**அன்பினால் செய்யவேண்டியதை கட்டளையினால் செயல்படுத்த முயக்கூடாது.**

---

# HYSTERIA IN WOMEN - MEN

சிலருடைய மனைவிமார்கள் அல்லது கணவன்மார்கள் இப்படிப்பட்ட ஒருவித மனநோயினால் பாதிக்கப்பட்டவராக இருப்பார்கள். நல்ல படிப்பு, நல்ல குணம்,நேரில் பார்க்கும்போதோ- பழகும்போதோ இப்படிப்பட்ட மனநோய் Hysteria இருப்பதாகவே தெரியாது. ஆனால் எந்த காரியத்துக்காவது கோபம் வந்துவிட்டால் எல்லை மீறி வார்த்தைகளை உதிர்த்து குடும்பம் இரண்டாக உடையகூடிய அளவு நடந்துக்கொள்வார்கள். சில சமயம் இப்படிப்பட்ட கேரக்டர்(குணாதியசங்கள் உள்ளவர்) உள்ளவர்கள் **தங்கள் சரீரத்தை** காயப்படுத்திக்கொள்வார்கள். **தன் கைகளை** கோபம்வரும்போது தானே கடித்துக்கொள்வார்கள்.

**சீத்தலை சாத்தனார்** என்ற பிரபல தமிழ் புலவர் நம் தமிழ் பாட புத்தகத்தில் வாசித்திருப்பீகள். இவரிடம் படிக்கும் மாணவனுக்கு ஒருமுறை கற்றுக்கொடுத்த பாடத்தை அந்த மாணவன் புரிந்துக் கொள்ளமுடியாமல்போனதால் பலமுறை அவனுக்கு கற்றுக்கொடுக்கும்நிலை வந்தால் சாத்தனார் என்ற அந்த புலவருக்கு கோபம் வரும். எந்த **புலவராவது** பாடல் எழுதும்போது இலக்கண பிழையோ,வல்லினம் -இடையினம் தவறுதலாக எழுதிவிட்டாலோ, உடனே அந்த புலவருக்கு அளவுக்குமீறி கோபம்வந்து மற்றவர்களை தண்டிப்பதற்கு பதில் கையில்உள்ள எழுத்தாணியை வைத்து தானே தன்தலையில் குத்திக்கொள்வராம். பலமுறை இப்படி நிகழ்வதால் தலைமுழுவதுடன் காயமுற்று சீழ்பிடித்து காணப்படுமாம். அதனாலேயே அவரை **சீ தலை சாத்தனார்** என்று அழைத்தார்களாம்.

அதுபோல இப்படிப்பட்ட மனநோய் சில கணவன்-மனைவிகளிடம் காணப்படும். இவர்கள் சிறு குழந்தையாக வளர்ந்தபோது **தாயின்** அன்பு கிடைக்காமல் போயிருக்கலாம். அல்லது வெளி உலக மக்களோடு தொடர்பு கொள்ளமாலேயே தனிமையில் வாழ்ந்திருக்கலாம். அல்லது வளர்த்தப்பட்ட விதம் சரியில்லாமல் ஆலோசனை கொடுக்க ஆளில்லாமல் இப்படிப்பட்டவர்கள் வளர்ந்திருக்கலாம்.

பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்-ஆசிரியைகளின் கவனகுறைவாகவும்,ஆசிரியர்களால் கொடுமைப்படுத்தப்பட்டவர்களாய், மாணவ-மாணவிகள்முன் அவமானப்படுத்தப்பட்டவர்களாய் அதன் காரணமாக சிறுவயதில் உண்டான கோபம்,வெறுப்பு,அவமானம் ஆகியவைகளின் பாதிப்பு. அதன் பிரதிபலிப்பை அந்த பிள்ளை வெளியே காட்டமுடியாமல் மனத்திற்குள்ளேயே அடக்கிவைத்து கொண்டவர்களாக இருக்கலாம். இது தான் **அந்த பிள்ளை வளர்ந்தபின் குடும்ப** வாழ்க்கையில்

பிரதிபலிக்கும். சில பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடத்தில் தன்னைவிட வேறு யாராவது அதிக மார்க் வாங்கிவிட்டால், தன்னைவிட மற்றவர்கள் புகழப்பட்டால் இவர்களின் மனநோய் கோபமாக பிரதிபலிக்கும். அந்த பிரதிபலிப்பு பல விதத்தில் வெளிப்படும் அல்லது காணப்படும். இந்தியாவின் மாநிலங்களில் இரண்டு மாநில முதல்வர்களைபற்றி பலர் கூறகேட்டிருக்கிறேன். இவர்கள் முதல்வர்களாக வருவதற்குமுன் வெறும் அரசியல்வாதியாக இருந்தபோதும், சாதாரண மந்திரியாக பதவி வகித்தபோதும் மற்றவர்களுக்குமுன் தான் எந்த வகையிலாவது அவமானப்படுத்தப்பட்டால் அன்று அவர் வீடு திரும்பியவுடன் வீட்டில் தன் அறையைஅடைத்து **சத்தமாக** தொண்டை கிழிய **கத்துவார்களாம்.** சுமார் 10நிமிடம் கத்திகத்தி மூச்சுவாங்க அதன்பின் கோபம் அடங்கி அப்படியே படுத்துவிடுவார்களாம். வீட்டில் இவர் கத்தி சத்தம்போடுவதை கேட்டு யாரும் பயப்படமாட்டார்களாம். உதவியாளர்களுக்கு குடும்பத்தினருக்கு இவர் அப்படி பைத்தியம்போன்று சத்தமிடுவது பழகிவிட்டது. வெளியில் நடந்த அவமானத்தை அல்லது கோபத்தை அடக்கிவைத்து வீட்டில் வந்து இப்படி சத்தம்போட்டு கத்தி தன் கோபத்தை அடக்கிகொள்வார் என்று வீட்டில் உள்ள யாவரும் அறிவார்கள். இது ஒருவகை மனநோய்.

ஒரு மனோத்துவ ஆராய்ச்சியாளர் கூறுகிறார். இப்படிப்பட்ட **முன்கோப மனநோய்** பிடித்த பைத்தியங்கள் எல்லாருடைய வீட்டிலும் வீட்டிற்கு 2 அல்லது 3 பேர் இருப்பார்கள் என்கிறார். சில மனநோய் வெளிப்படையாக காணப்படும். சிலது பார்வைக்கு தெரியாது. இப்படிப்பட்டவர்களை கல்யாணம் செய்தவர்கள். கணவனும்-மனைவியும் மன நல ஆலோசகரிடம் சென்று தன் பலவீனத்தை கூறி கோபம் மிக அதிகம் நீண்டுபோனால் என்ன செய்கிறோம்- என்ன பேசுகிறோம் என்று அறியாமல் போவதால் எங்கள் குடும்பம் உடைந்துவிடுமோ, எங்களை கண்டுகொண்டு இருக்கும் எங்கள் பிள்ளைகளின் மனநிலை பாதிக்கப்படுமோ என்று பயப்படுகிறோம். இதிலிருந்து விடுதலைபெற நான் என்ன செய்வது, இப்படிப்பட்ட புருஷனிடம்-மனைவியிடம் அந்த கோப சூழ்நிலையில் நாங்கள் எப்படி நடந்துக்கொள்வது என்று மனநல ஆலேசகரிடம் சென்று ஆலோசனை பெறுவது மிகஅவசியம்.

இரட்சிக்கப்பட்ட விசுவாசியானால் மனநல ஆலோசகரிடம் ஆலோசனைக்கு செல்லாமல் கர்த்தரின் பாத்தில் விழுந்துவிடுங்கள். கர்த்தரிடம் இப்படிபட்ட பலவீனம் கொண்ட மனவியிடம் நான் எப்படி நடந்துக்கொள்வது என்றும் **எனக்கு ஞானம் தாருங்கள்** என்றும் கேளுங்கள். நம் ஆண்டவர் மனநல ஆலோசகரைவிட அற்புதமான ஆலோசனையை அருளுவார். தாங்கவும் சகிக்கவும் நான் மனநோயாளியான மனைவியிடம் நான் அன்புகூறவும் எனக்கு பெலம் தாரும் என்று கேளுங்கள்.

‘ முதலாவது உங்கள் சுபவாத்தை மாற்றிக்கொள்ளுங்கள். உங்கள் கருத்தை மனைவிமீதோ, புருஷன்மீதோ,மாமியார்மீதோ திணிக்க முயலாதீர்கள். உங்களை நீங்கள் மாற்றிக்கொண்டாலே போதும். குடும்பம் உடையாது,விவாகரத்து வரை உங்கள் பிரச்சனை போகாது கர்த்தர் காத்துக்கொள்வார்.

‘ இந்தியாவின் முதல் மிஷனரியான **வில்லியம்கேரி** அவர்கள் தான் நேசித்து திருமணம் செய்த மனைவியுடன் இந்தியாவில் மிஷனரிஊழியம்செய்ய ஆரம்பித்தவுடன் மனைவி **மனநோயாளி யாக** மாறிவிட்டார் மிகவும் கட்டுப்படுத்த முடியாத முரட்டுதனமான(Violent) மனநோயாளியாக இருந்தார். கேரியை மிஷனரிஊழியத்துக்கு அனுப்பிய சபை,அவரை ஊழியத்தை நிறுத்தி நாடு திரும்பும்படி கேட்டு கொண்டார்கள். ஆனால் **வில்லயம்கேரி** மனநோயாளியான மனைவியுடன் வாழ்ந்து மிஷனரி ஊழியத்தை வெற்றிகரமாக முடித்தார். ஜீவகீரிடம் அவருக்காக இப்போது பரலோகத்தில் காத்திருக்கிறது. ஆகவே நீங்கள் சரியான விசுவாசிகளாகஇருந்தால் வியாதியுள்ள மனைவியாக இருந்தாலும் மனநோயாளி என்ற வியாதியுள்ளவளாக இருந்தாலும் அதை கர்த்தர் கொடுத்த சிலுவையாக ஏற்றுக்கொண்டு முறுமுறுக்காமல் சுமந்து கர்த்தரின் பெலத்தால் வெற்றிகரமாக குடும்பம் நடத்துவீர்கள்.

‘ திருநெல்வேலி,பாளையங்கோட்டை NGOகாலனியில் **அசம்பளீஸ் ஆப் காட் பாஸ்டர்** என் பழைய நண்பர். இப்போதும் நண்பர்தான். இவர் மகன் சபையில் **உதவி பாஸ்டர்** ஆனால் மனைவியை விவாகரத்து செய்துவிட்டார். மனைவி தன்கணவருடன் சேர்த்துவைக்கும்படி பாஸ்டர் வீட்டு வாசல் படியில் உண்ணாவிரதம் இருந்ததை எல்லா தமிழ் தினசரி பத்திரிக்கையிலும் புகைப்படத்துடன் செய்தி

வந்தது. விவாகரத்து செய்த பாஸ்டர் ஒருவர் சபைஆராதனை நடத்துவதோ,**பாட்டுஆராதனை** நடத்துவதோ,சபையினரை ஜெபத்தில் நடத்துவதோகூடாது. இவர் மேய்ப்பனின் தகுதியை இழந்து விட்டார். நானே NOG காலணி சென்று AOG சபை பாஸ்டரை நேரில் சந்தித்து மகனை பாஸ்டர் ஊழியம் செய்வதிலிருந்து நிறுத்துங்கள் என்று ஆலோசனை கூறி வந்தேன். ஆனால் இதை எழுதும்போது ஆராதனையில் மகன் தொடர்ந்து ஜெபம் நடத்துகிறார் என்ற செய்தி வந்துகொண்டேயிருந்தது. கடிதம் மூலம் வசனத்தை சுட்டிக்காட்டி அறிவித்தேன்.



ஆனால் பாஸ்டர்.செல்வின் அவர்களும் மகன் பாஸ்டர். நோவா அவர்களும் வேதவசனத்துக்கு கீழ்படிய மனமில்லை. வசனத்துக்கு பயம்இல்லை.

ஆராதனையில் மகன் பாட்டு **ஜெபஆராதனை** நடத்துகிறார். **மொபைலில்** அதை எனக்கு சபை மக்களே காட்டுகிறார்கள். பாஸ்டர்கள் இருவரும் **ஆவியில்** நிறைந்து **அந்நியபாஷை** பேசுகிறார்கள். ஜனங்கள் ஆவியில் நிறைந்து **அந்நியபாஷை** பேசுகிறார்கள். இதைத்தான் **போலி** அல்லது **மாய்மாலம்** என்பது. அந்த ஆராதனையில் பாஸ்டர்கள் ஆவியில் நிறைந்தது பொய், **சபைமக்கள்** ஆவியில் நிறைந்ததும் பொய். **பேசிய பாஷைகள்** எல்லாம் **பொய்.** நான் என் நண்பரைப்பற்றி இப்படி எழுதியதில் தவறேதும் உண்டா?

பெந்தேகோஸ்தே சபையின் **பரிசுத்தஆவி** எப்படிப்பட்டது? என்று இப்போது விளங்குகிறதா? மிஷனரி **வில்லியம்கேரி** மனநோய் பிடித்த மனைவியை சொந்த நாட்டுக்கு அனுப்பியருந்தால் அவர் **மிஷனரி ஊழியம்** செய்யவும் தகுதியற்றவர் ஆகியிருப்பார். அவரே அந்த மனைவியின் தொல்லையை **சிலுவையாக** சுமந்துகொண்டு அவளுக்கு சாப்பாடுஊட்டி அவளை **குளிப்பாட்டி** கடைசிவரை அவளோடுதான் வாழ்க்கை நடத்தினார். ஒரு **அந்நிய பாஷையாவது** கேரி அவர்கள் பேசினாரா? **ஆவியானவர்** அவருக்குள் இருந்ததால்தான் **மனநோயுள்ள மனைவியை** அவரால் நேசிக்க முடிந்தது. மனைவி சுகமாக இருந்து AOG பாஸ்டர் **மனநோய்** கொண்டிருந்தால் இதே மனைவி அவரைவிட்டு போயிருப்பாரா அல்லது தலைமை பாஸ்டர் மனைவி மனநோய்யுள்ள **தன் மகனை வீட்டைவிட்டு** துரத்தியிருப்பாரா? மனசாட்சியுள்ளவர் தெய்வபயம் உள்ளவர் சிந்தியுங்கள். இனியாவது **இப்படிப்பட்ட சாட்சியில்லாதவர்கள் அந்நியபாஷை** பேசுவதை **நிறுத்துங்கள்.**

**கர்த்தர் வீட்டை கட்டாராகில் கட்டுகிறவர்கள் பிரயாசம் விருதா.** சங் 127:1.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

பாளையங்கோட்டை NGO காலனி AOG சபை தலைமை பாஸ்டராக இருக்கும் அவர்களின் மகன் பாஸ்டர்.**நோவா** தன் மனைவியை வீட்டைவிட்டு துரத்தி விவாகரத்து செய்ததும் அவர் மனைவி பாஸ்டர் வீட்டில் தர்ணா செய்ததும் இதே ஜாமக்காரனில் வாசித்திருப்பீர்கள். அந்த பாஸ்டரின் **2014 ஆகஸ்ட்** பத்திரிக்கையில் பக்கம் 8பக்கம் கண்ட முக்கிய செய்தி கீழே காணலாம். இவர் குறிப்பிட்ட சட்டம் செயல்பட்டால் AOG சபை பாஸ்டர் மேல்தான் சட்டம் பாயும்.

**செய்திகள்: ஐ.பி.சி. 498-ஏ** வாழ்க்கைத் துணைவியான மனைவியை மனரீதியாகவோ, உடல்ரீதியாகவோ துன்புறுத்தினால் எவ்வித விசாரணையும் இன்றி கணவன் மற்றும் கணவன் குடும்பத்தினரை எந்த நேரத்திலும், எளிதில் ஜாமீன் கிடைக்காதவாது காவல்துறை கைது செய்யலாம் என்பதே **ஐ.பி.சி.498-ஏ.** பெண்களை பாதுகாக்க கேடயமாக பயன்படுத்தப்பட்ட இச்சட்டத்தை பலர் ஆயுதமாகபடுத்துவதாக தற்போது உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இச்சட்டத்தின்மூலம் பதிவுசெய்யப்பட்ட 3,72,706 வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும், அதில் 3,17,000 வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் விடுதலைசெய்யப்பட வேண்டியவகையில் இருப்பதாகவும் நீதிமன்றம் கூறியுள்ளது. இச்சட்டம் பலகுடும்பங்களை கலைத்துவிட்டது என்பதே வேதனைக்குரிய செய்தி...!

# பிரபல கிறிஸ்தவ பாடகியும், ஊழியருமான சகோதரி.சாராள்நவரோஜி அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்:

1960ம் வருடங்களில் தனது 21வது வயதில் திருமணம் வேண்டாம் என்றும் இயேசுவே என்மணவாளன் என்றும் கூறி கர்த்தருக்கு ஒப்பு கொடுத்து ஊழியம் தொடங்கியவர். அன்றைய காலங்களில் இவருடைய பாடல்களை பாடாத சபைகளே கிடையாது எனலாம். **என்னை மறவா இயேசுநாதா, எந்தன் துன்பம் இன்பமாக மாறும் இயேசுவை நான் காணும்போது** என்ற பாடல்களும் காலையும்,மாலையும் எவ்வேளையும் கர்த்தரை கருத்தோடு பாடிடுவேன், இப்படி பல ஹிட் பாடல்களை இயற்றியவராகும். ஏறக்குறைய 400 பாடல்களையும் 8 பாடல்களை ஆங்கிலத்திலேயே இயற்றி ராகம் அமைத்து பாடினார். **இங்கிலாந்து தேசத்தில்** அப்பாடல்களை நான் அன்றைய கேஸட்களில் பதிய வைத்ததை கேட்டேன். அற்புதமான குரல்.



ஆரம்பத்தில் அரசாங்க மின்சார துறையில் Electricity டிபார்ட்மெண்ட்டில் கிளர்க்காக பணியாற்றினார். அன்றைய வாலிப வயதில் பல தொல்லைகள். ஆகவே அந்த வேலையை விட்டு முழுநேர ஊழியத்தில் இறங்கினார். அந்த காலத்தில் ஊழியம் செய்த பெந்தேகோஸ்தே ஊழியர்கள் பலர் இவரை திருமணம் செய்ய பலர்மூலமாக முயன்றதை நான் அறிவேன். அதற்காகவே அவர் ஆண்களுடன் பேசுவதை தவிர்த்தார். எந்த கூட்டத்திலும் தன்னை புகைப்படம் எடுக்காதிருக்க அவர் கடும் முன் எச்சரிக்கையுடன் இருந்து தான் பேசும் எந்த கூட்டத்திலும் கூட்ட விளம்பரத்திலும் தன் புகைப்படம் வாராமல் கண்டிப்புடன் இருந்தார்.

கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்த நாள் முதல் தன் மரணம்வரை இவரைப்பற்றியோ, அவரின் தனிப்பட்ட வாழ்கையையோ யாரும் குறைகள் சொன்னதில்லை. மரணம்வரை எந்த பாவத்திலும் விழாமல் தன்னை பாதுகாத்துக்கொண்ட **ஒரே பெண் ஊழியக்காரி** என்றால் அது மிகையாகாது. அவரை யாரும் தனிப்பட்டமுறையில் காணவோ,பேசவோ அவர் அனுமதிப்பதில்லை. எந்த சோதனைக்கும் இடம்கொடுக்காமல் பார்த்துக்கொண்டார். தன் சொந்த சபை ஆரானையில் ஒரு திரைமறைவு இருக்கும் பிரசங்க நேரத்தில்மட்டும் வெளியில் வருவார். அவர் வீட்டிலிருந்து வெளியே ஆராதனைக்காக வெளிவருவதைகூட யாரும் பார்க்கமுடியாது.

' அடிக்கடி 40 நாட்கள் உபவாசம் எடுப்பதாக கூறுவார்கள். அவர்கள் வீட்டின்மேல் அறையில் உபவாசம் செய்துஜெபிக்கும்போது அவரின் கூடபிறந்த ஒரு அக்காவை தவிர வேறு யாரும் அவர் அறைக்குள் நுழைய அனுமதியில்லை. தன் அக்காகூட உபவாசநாட்களில் தன்னோடு பேச அனுமதியில்லை. உபவாசநாட்கள் கூடும்போது மயக்கம் ஏதும் உண்டாகிவிடுமோ என்ற பயத்தில் அக்காமட்டும் அறையை திறந்து எட்டிப்பார்த்துவிட்டு வந்துவிடுவார். அப்படி உறவினரோடோ, உடன்பிறப்புகளுடனோ நெருக்கம் இல்லாமல் தனிமையில் வாழ்ந்து தன் ஊழியத்தை நிறைவேற்றினார்.

ஒரு குறிப்பிட்ட உபவாச நாட்களில்மட்டும் அவர் ஆவியில் நிறைந்தபோது அவர் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் **பெந்தேகோஸ்தே வட்டாரத்தில்** பெரும் சர்ச்சையும்,குழப்பத்தையும் உண்டாக்கியது. அந்த உபவாசநாட்களில் உண்டான வித்தியாசமான ஆத்மீக உயர்ச்சியிலிருந்து இறங்கி சமநிலையடைந்தார். ஆனால் அதை மனநிலை பாதிப்பு என்றுகூட வதந்திகள் பரப்பினார்கள்.

2014 ஜீலை மாதம் 22ம் தேதி தனது 75 வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். HMV என்ற பாடல் பதிவு செய்யும் பெரிய ஸ்தாபனம் இவர் பாடல்களை தாங்கள்மட்டும் வெளியிட ஒப்பந்தம் பெற்று பாடல்களை வெளியிட்டனர். அதை அவர்களே விற்று அதன் ராயில்டியை சகோதரிக்கு கொடுத்தார்கள். அவர் சென்னை கீழ்பாக்கத்தில் **சியோன் சுவிசேஷ ஜெப ஐக்கியம்** என்ற பெயரில் சபை நடத்தினார். அன்றையநாட்களில் **ஒரு பெண்** எப்படி பெந்தேகோஸ்தே உபதேசத்தோடுகூடிய சபையை தொடங்கலாம் என்று பல பெந்தேகோஸ்தேசபையினர் எதிர்த்தனர். சகோதரி.சாராள்நவரேஜி அவர்களின் ஆரம்பால நல்லஊழியங்களுக்காக,நடனபாட்டுபோல் அவர்களின் பாடல் இல்லாததால் நான் தேவனை துதிக்கிறேன். கர்த்தர் இவரைப்போன்ற வைராக்கியமான பெண் ஊழியர்களை எழுப்புவாராக.

# கன்னியாகுமரி CSI திருமண்டலத்தில் உள்ள ஐரேனிபுரம் கன்வென்ஷன்







**கன்னியாகுமரி மாவட்டத்தில் ஐரேனிபுரம் என்ற இடத்தில் நடந்த கூட்டங்கள் யாவும் ஆலய மைதானத்தில் நடந்தது. பல்வேறு இடங்களிலிருந்து ஏராளமானவர்கள் கூட்டத்தில் கலந்துக்கொண்டனர். திருவனந்தபுரத்திலிருந்தும்(கேரளா) சில குடும்பங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஆசீர்வாதம் பெற்றனர்.**

**டிஸ்ட்ரிக்ட் சேர்மனும்,தலைமை போதகருமான Rev.J.Aliver Stanley அவர்களும், உதவி ஆயர் Rev.R.Renjith Suther சபை ஊழியர்.அனிஷ் ரூபன் அவர்களும், சபை பொருப்பாளர்களுடன் இணைந்து ஜெபத்தோடு இக்கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தனர். கூட்டம் தொடங்கும் சில வாரங்களுக்கு முன்பே இவாக்ள் ஏறெடுத்த ஜெப ஆயத்தம்தான் இக்கூட்டங்கள் சில வாரங்களுக்கு முன்பே இவர்கள் ஏறெடுத்த ஜெப ஆயத்தம்தான் இக்கூட்டங்கள் இத்தனை பெரிய ஆசீர்வாதத்துடன் நடந்து முடிய காரணமாக அமைந்தது.**

## இந்தியாவின் 68வது சுதந்திர தினம்



‘ 68 வருடங்களுக்குமுன் இந்தியா சுதந்திரநாடாக மாறி, இன்று நம்மைநாமே ஆட்சி செய்யும் சுதந்திரத்தை பெற்றோம். நம்முடைய தேச தலைவர்கள் கஷ்டப்பட்டு உயிர்தியாகம் செய்துபெற்ற இந்த சுதந்திரத்தை **தவறாக பயன்படுத்தும்** அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள் என அத்தனை பேர்களையும் நம் தேவன் உணர்த்தி தெய்வபயத்துடன்,லஞ்சம் இல்லாமல், ஊழல் இல்லாமல் தேசத்தை ஆளுகை செய்யவும் நாம் தினமும் ஜெபிப்போம்.

**" தேசத்தை அழிக்காதப்படி திறப்பின் வாசலில் நிற்கத்தக்கதாய் ஒரு புருஷனை தேடினேன்"** .எசே 22:30.

**" தேசத்தில் நடக்கிற அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சு விட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு"** என்றார். எசே 9:4.



**- ஜாமக்காரன்**



# மரண அறிவிப்பு:

பிரபல **கன்வென்ஷன்** பிரசங்கியும், பாடகருமான சகோ.**பிரகாஷ் ஏசுவடியான்** அவர்கள் 2014 ஜீலை 22ம் தேதி தனது 70வது வயதில் கர்த்தருக்குள் நித்தியடைந்தார்.

**இவர் எனக்காய் ஜீவன் விட்டவரே..... ஏசுபோதுமே!** போன்ற சில பாடல்களை இயற்றியவராகும்.

இவர் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் போது மனந்திரும்பின அனுபவத்தை பெற்றவர். 1965ல் வருடத்தில் முதலாவதாக Youth for Christ ஸ்தாபனம் மூலம் வாலிபர்கள் மத்தியில் மகத்தான ஊழியம் நிறைவேற்றினார்.

ஒவ்வொரு ஊழியருக்கும் ஒவ்வொரு விதமான பலவீனம் உண்டு. இவருடைய Temperament திடீர் என்று ஏற்படுகிற கோபமாகும். YFCயிலிருந்து, AFC (அம்பாஸ்டர் பார் கிரைஸ்ட்) ஸ்தாபனத்தில் பயன்படுத்தப்பட்டார். அங்கிருந்து BAF ஸ்தாபனம் அதன்பின் பெங்களூர் ACTS என்ற ஸ்தாபனம், அதன்பின் FMPBயின் நிரந்தர மிஷனரி கன்வென்ஷன் செய்தியளராக ஊழியம் செய்ய Rev.Dr.சாம்கமலேசன் அவர்கள் இவரை கேட்டுக் கொண்டார். அப்படியே செயல்பட்டார். ஆனால் அதில் தொடர பிரியமில்லாமல் உலக பிரசித்திப்பெற்ற மெத்த படித்தவர்கள் மத்தியில் செய்யப்படும் ஊழியமான RZIM **Dr.ரவிசகரியா** அவர்களில் ஸ்தாபனத்தில்தான் மரணம் வரை தொடர்ந்து ஊழியம் நிறைவேற்றினார்.

இலங்கை **சத்தியவசன ஸ்தாபனமும்** இவரை அடிக்கடி பயன்படுத்திக்கொண்டது. நல்ல வேதவிளக்கம் கொடுக்கும் சிறப்பு தாலந்து பெற்றவர்.

‘ தான் ஒரு **நாடார் ஜாதி** கிறிஸ்தவராக இருந்தாலும் **திருநெல்வேலி-கன்னியாகுமரி** இரண்டு மாவட்ட **நாடார் கிறிஸ்வதர்கள்** தங்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் வெறுப்பதை பொது கூட்டங்களில் வெளிப்படையாக சாடும் ஒரே உழியர் இவர் மட்டுமே

‘ கன்னியாகுமரி மாவட்டம் **குமாரபுரம் தோப்பூர்** என்ற ஊரை சேர்ந்தவர். மனைவி இரண்டு பிள்ளைகள் இவருக்கு உண்டு. கர்த்தர்தாமே இவர் குடும்பத்துக்கு ஆறுதலை அளிப்பாராக.

# முக்கிய அறிவிப்பு:

‘ என்னோடு **தொலைபேசியில்** தொடர்புக்கொள்ள முடியாதவர்கள், **கடிதங்கள்**மூலம் ஜெபகுறிப்புகளையும், குடும்ப பிரச்சனைகளையும் அனுப்பலாம்.

‘ இ-மெயில் மூலம் நீங்கள் எனக்கு எழுதினாலும் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் தயவுசெய்து குறிப்பிட்டால், கடிதம்மூலமாக பதில் எழுத இயலும். வாரம் இரண்டு நாட்கள்மட்டும் வீட்டில் நான் இருப்பதால் நீங்கள் அனுப்பும் இ- மெயில்க்கு கடிதம்மூலம் என் பிராயணத்தில் உடனே பதில் எழுதமுடியும். அதனால் இ-மெயில் அனுப்புபவர்கள் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் அனுப்புங்கள்.

## காணிக்கை

**சில வாசகர்கள் ஜாமக்காரன் பத்திரிக்கைக்காக காணிக்கை அனுப்பினேன் நீங்கள் பத்திரிக்கை அனுப்பவில்லை** என்று எழுதுகிறார்கள். மணியாடரில் நீங்கள் காணிக்கை அனுப்பும்போது எதற்காக அந்த பணம் அனுப்பினீர்கள் என்பது நீங்கள் எழுதமுடியாது. எனக்கு காரணமும் தெரியாது. ஆகவே பணம் அனுப்பிய உடன் ஒரு கடிதத்தில் உங்கள் முழு விலாசத்தையும் தொலைபேசி எண்ணையும் எழுதி எனக்கு பத்திரிக்கை அனுப்பவும் என்று அறிவிக்கவும். புதிய வாசகர்களாக இருந்தால் நான் புதிய வாசகர் என்று எழுதவும். நன்றி.



1964

# என் 50 ஆண்டு ஊழியம்

கர்த்தராகிய ஆண்டவரே,தேவரீர் என்னை இதுவரைக்கும் என் ஊழியத்தை (நடத்தி)கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்?என் வீடும் எம்மாத்திரம்? 2சாமு7:18.

கடந்த 50ஆண்டுகள் என் ஊழியத்தையும்,பத்திரிக்கைஊழியத்தையும், என் குடும்பத்தையும் ஜெபத்திலும்,காணிக்கைமூலமாகவும் என்னை தாங்கிவந்த இந்தியா மற்றும் வெளிநாடுகளிலுள்ள அனைத்து வாசகர்களுக்கும் என் இதயம்கனிந்த நன்றி.

தங்கள் திருச்சபைகளில் உள்ள சபை மக்கள்உயிர்மீட்சிபெற வசனத்தில் வழிநடத்த, கன்வென்ஷன் ஏற்பாடுகள் செய்து என்னை அழைத்து உபயோகித்த இப்போதும் உபயோகித்துகொண்டிருக்கும் CSI,மார்தோமா,லூத்தரன், மெத்தடிஸ்ட் சபைகளின் பிஷப்மார்,ஆயர்கள்,சபை நிர்வாகிகள் அனைவருக்கும் வாழ்த்துதல் கூறிக்கொள்கிறேன். உபதேச வித்தியாசம் இருந்தாலும் தங்கள் கன்வென்ஷன்களிலும் என்னை உபயோகிக்கும் பெந்தேகோஸ்தேசபை பாஸ்டர்களுக்கும்,விசுவாசிகளுக்கும் வாழ்த்துதல் கூறிக்கொள்கிறேன். அனைத்து மிஷனரி ஸ்தாபன நிர்வாகிகளுக்கும்,சத்தியவசன நிகழ்ச்சிகளில் வானொலி மற்றும் டிவிமூலம் என்னை உபயோகப்படுத்திகொண்டிருக்கும் இந்தியா மற்றும் இலங்கை நிர்வாகிகளுக்கும் வாழ்த்துதல் கூறிக்கொள்கிறேன்.

என் ஜாமக்காரன் பத்திரிக்கையில் வெளிவந்த என் கட்டுரையால் பாதிக்கப்பட்ட பிஷப்மார்கள் உண்டு,ஸ்டார் ஊழியர்கள் உண்டு. அவர்களும்,அவர்களை தாங்குபவர் களுக்கும் என் எழுத்தால் கோபமும்,வெறுப்பும் என்மேல் உண்டு என்று அறிவேன். அவர்கள் அனைவரையும் ஊழியக்காரன் என்ற முறையில் ஆசீர்வதித்து வாழ்த்துகிறேன். கர்த்தருக்கே கனமும்,மகிமையும் உண்டாவதாக.



2014

**AUGUST 2014**

# Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at Priya Pathipagam,197.LIC Colony, Salem-636 004
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.